No. 732 / 1 / 1918.

சைவ [illegible] திருத்தங்கள்

by

[illegible]

W
N17
76800

# சுய ஆட்சி சீர்திருத்தங்கள்

இந்திய மகா சபைகள் பிரேரித்திருக்கும் யோசனைகள்.

மிஸ்ஸஸ் பெஸண்டு அம்மையால் எழுதப்பெற்ற முகவுரையுடன் கூடியது.

சென்னை சுய ஆட்சி சங்கத்தினரால் பதிப்பிக்கப்பெற்றது.

சென்னை
[illegible]
1917.

Copy Right]

[விலை அணா 6.

76800

# முகவுரை.

தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மக்களுக்கு இச்சிறு நூலைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளை மிக்க சந்தோஷத்துடன் சொல்லுகிறேன். இத்தேசத்தின் ஆட்சி முறைமையைத் திருத்தி யமைக்க வேண்டுமென்று இந்தியருள் கல்வி வாய்ந்த பிரமுகர்கள் முயன்று வருகிறார்களல்லவா? அவர்களுடைய முயற்சியின் நோக்கம் யாதெனில்:—கிராமகாரியங்களை முன்போல கிராம பஞ்சாயத்து சபைகள் நிர்வகித்து நடத்தித்திவர வேண்டும்; கிராமவாசிகளின் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களும் பசும்புல் புலங்களும் முன்னிருந்த வண்ணம் கிடைக்க வேண்டும்; சமையல் செய்ய விறகும், நெல் வயல்களுக்கு பசுந்தாள் உரமும் கிடைத்தல் வேண்டும்; கிராம வாசிகளின் பூமி பாத்தியங்கள் பத்திரமாயிருக்க வேண்டும். மேலும், கிராமங்களிலுள்ள சிறுவர் சிறுமியருக்குக் கல்வி கிடைக்கவும், நெசவுத் தொழில் முதலிய வீட்டுத் தொழில்களை முன்போல் பிரபலமடையச் செய்யவும், விவசாயத்தை அபிவிருத்தி செய்யவும், கூட்டுறவு முயற்சியைப் பரவச் செய்யவும், இவர்கள் வழி தேடி வருகிறார்கள்.

ஜனங்களின் க்ஷேமபோகங்கள் இன்னும் மேன்மைப்பட வேண்டுமாயின், தேச ஆட்சியை ஜனங்களேறல் உங்கித்து வரவேண்டும். ஏனென்றால், இந்தியரின் பழக்க வழக்கங்கள், நடையுடை பாவனைகள், தேவைகள், அபிலாஷைகள், முதலியன இந்தியருக்குத்தான் நன்கு

கின்றாயும் ஹோம் ரூல் எனப்படும் இடச் சுய ஆட்சி இதுவே. அதாவது:— இந்தியர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துவரவேண்டும்; தாங்கள் செலுத்தும் வரிக்கடமைகள் தங்கள் தேசத்திற்கே உபயோகப்படவேண்டும்; இப்போது உயர்ந்த சம்பளங்கள் பெற்று வெளியிலிருக்கிறவர்கள் அதிகாரி வர்க்கத்தினரை அமர்த்தி வருகிறோம். வெளிதேசங்களுக்குச் செல்லாக வேண்டிய கடன் முதலிய பொறுப்புகளினால் தேசத்தை விட்டுத் தொகைகளும் வெளிப்பட வேண்டியதாக விருக்கின்றன— இப்படியிருப்பதற்கு பதிலாக இந்தியர்களின் செல்வங்கள் தங்கள் தேசத்திலேயே செலவாகவேண்டும்; தங்கள் தேசத்தவரே ராஜாங்க அதிகாரங்களில் அமர்ந்து வரவேண்டும்.

இச்சமயம் இந்தத் தேவையை முன்னிட்டுச் செய்யப்பட்டு வரும் முயற்சிகளில் பலவற்றை இந்நூலில் காணலாம். ஆயினும், அம்முயற்சிகளிலே தேசமெங்குமுள்ள கிராமவாசிகளும் கலந்து ஒத்துழைத்தால் தான் நாம் ஜெயமும் பலனும் எய்தலாம்.

அன்னி பெஸண்டு.

732/1/1918

# சுய ஆட்சி சீர் திருத்தங்கள்.

## இந்திய மகா சபைகள் பிரேரித்திருக்கும் யோசனைகள்.

### முன்னுரை.

நமது ஜன்ம பூமியில் அபிமானங் கொண்ட எல்லோரும் தற்போதிருக்கும் தேசத்தின் நிலைமையில் மிக அவசியமான திருத்தங்கள் செய்து வரவேண்டுமென்பதை எளிதில் அறியக்கூடும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பார்லிமெண்டின் அதிகாரத்திற்குட்பட்டு இந்திய ராஜாங்க நிர்வாகம் நடந்து வரும் முறை, சென்ற சில வருஷங்களாக, சுய ஆட்சிக் கிரமத்தில் திருத்தங்கள் அடைந்து வரினும், தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜனங்களின் மனோபீஷ்டத்துக்குத் தக்கவாறு தங்கள் நாட்டின் நிர்வாகத்தைத் தாங்களே பிரதிநிதிகளின் மூலமாய் நடத்தக்கூடிய இயல்பைத் தாம் பெறவில்லையென்ற குறையை இச்சமயம் நீக்கிவிட எத்தனிப்பது அவசியமென்று இந்திய மகா சபைகள் ஒருமனதாயும் ஒரு மொழியாயும் சென்ற டிசம்பர் மாதத்தில் கூறின. தற்போது நடக்கும் மகா யுத்தத்தினால் உண்டாயிருக்கிற புதிய நோக்கங்களையும் எண்ணங்களையும் தேவைகளையும் அநுசரித்து பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஏற்பாட்டிலேயே பல திருத்தங்கள் நிறைவேற்றி

வைக்க யோசனைகள் நிர்மாணிக்க செய்து வரப்படுின்றமையால், இந்தியப் பொது ஜனங்கள் எல்லோரும் அதற்குத் தக்கவாறு தமது நாட்டிலும் சீர்திருத்தங்களை உண்டாக்கி தங்களுடைய தேச வாழ்வை மேல் நாடுகளிலிருப்பது போல், ஆண்மையுடனும், தன் மதிப்புடனும் அமைத்துக்கொள்ள வேண்டுமென்று மிக ஆவல் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தேசத்து ஜனங்களின் பொருளாதார நிலைமை விருத்தியாகி, கல்வி பெருகி, தொழில்களும் ஜீவனோபாயங்களும் அதிகரித்து தெய்வபக்தி, தேசபக்தி, ராஜபக்தி இவைகளெங்கும் பரவி, நாட்டின் வளம் வளர்ந்து, க்ஷேமமும் ஸுபிக்ஷமும் எப்போதும் எங்கும் காணும்படி இந்தியாவிருக்க வேண்டுமானால், அதற்கு முதன்மையான சாதனம் தேச நிர்வாகத்தை ஜனங்கள் நடத்தும் சுய ஆட்சி அல்லது ஹோம் ரூல் (Home Rule) எனப்படும் ராஜாங்கரீதியே ஆகுமென்று இந்தியரெல்லோருக்குள்ளும் சில காலமாக, எண்ணம் தோன்றியிருக்கிறது. ஆகையால், அப்படிப்பட்ட சுய ஆட்சி அதிகாரத்தை ஜனங்கள் அடையும்பொருட்டும், சுயஆட்சி பெற்ற நாடு என்னும் பதவிக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியா வரும் பொருட்டும், நமது தேசத்தார்கள் இச்சமயம் தமக்குள் பெருமுயற்சி செய்வது அவசியமென்பதை அவர்கள் உணர்ந்து, அதற்கேற்ற வழிகளைக் கைப்பற்ற வேண்டும். பொது ஜனங்களுள் அவரவர்கள் தேச பாஷையின் ரீதியையும் அதன் பொறுப்புகளையும் பாத்தியங்களையும் அறியவேண்டும். தவிர, அவர்களது தேசிய ஞானத்தை விசாலப்படுத்தி அவர்களுக்குள்ள சுய ஆட்சித் திறமையை வெளிப்படுத்தி விருத்தி செய்து,



அவர்களுக்கும் ஒற்றுணர்ச்சியும் தன் மதிப்பும் ராஜ்ய பக்தியும் உண்டுபண்ணி, சீர்திருத்தங்களைச் சீக்கிரத்தில் ஏற்படுத்த வேண்டுமென்ற வேண்டுகோளை ஏகாதிபத்திய அதிகாரிகளுக்கு தேசத்தார் எல்லோரும் வற்புறுத்த வேண்டும். இவ்வாறே பற்பல விதங்களில் ராஜீய விஷயங்களும் காரியங்களும் ஜனங்களுக்குள் முற்படும்படி செய்வது ஜனத் தலைவர்களின் கடமையாகிறது. அக் கடமையை அவர்கள் நிறைவேற்றும் பொருட்டு தேசத்து மகா சபைகளாலும் சட்டசபையிலுள்ள ஜனப் பிரதிநிதிகளாலும் ராஜாங்கச் சீர்திருத்த விஷயமாயும் சுய ஆட்சி ஸ்தாபன விஷயமாயும் உடனே அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று அவர்களால் குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் பத்திரிகைகளில் பல தடவைகளில் விவரிக்கப்பட்டிருந்தாலும் அவைகள் என்னவென்பதைத் தெளிவாக ஜனங்கள் எல்லோரும் அறியும்படி செய்து அவர்களுக்கும் மாறுதல்களைச் செய்ய வேண்டியதிலிருக்கும் அக்கறையை ராஜாங்கத்தாருக்கு மெய்ப்பிப்பதும் அவசியமாகும். அது பொருட்டு அத் திருத்தங்களின் தொகுதியையும் அவற்றிற்கு சம்பந்தமான உபந்யாஸங்களையும் தமிழகத்து ஜனங்கள் நன்கறியுமாறு தென்மொழியில் பிரசுரிக்க இப்புத்தகத்தில் யத்தனித்திருக்கிறோம். ஆனால் அவைகளின் ரீதியை உணரும் பொருட்டு அவைகள் சம்பந்தமான சில அமிசங்களையும் விஷயங்களையும் குறிப்பிடல் பொருந்தும்.

இப்போது பிரிட்டிஷ் இந்தியாவில் அமைக்கப்பட்டிருக்கும் ராஜாங்க ரீதியைப்பற்றி இங்கு விவரித்தெழுதுவது அனாவசியம். சுதேசமித்திரன் வருஷப்

புஸ்தகமாகிய "பொதுவிஷய விளக்க"த்தில் அதின் கொள்கைகளும் முறைமைகளும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. இப்போது இந்திய ராஜாங்க அமைப்பில் எந்த சீர்திருத்தங்கள் அவசிய மென்பதைமட்டும் நாம் கவனிக்குமளவில், அவை சுய ஆட்சியின் அவசியத்தையே பொறுத்ததாகும். பிறர் ஆட்சியைவிட சுய ஆட்சியையே மனித ஜன்மமெடுத்த எவரும் விரும்புவார்கள் என்பது நாகரீகமடைந்த எல்லா தேசத்தாருடைய அனுபோகம். அரசாட்சி செலுத்தும் ராஜாங்கம் பொது ஜனங்களுடைய சம்மதத்தையும் வாக்கையும் பொறுத்திருப்பது மேன்மையான நிலைமையென்பது ராஜாங்க நிர்வாக விஷயங்களை ஆராய்ச்சி செய்த அறிஞர்களின் கொள்கையாகிறது. ஆனால் அனுபவத்தில் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தார் ஆண்டு வரும் கிரமத்தில், ஆளுகையை நிர்வகிக்கும் அதிகாரி வர்க்கத்தார் ஜனங்களின் சம்மதத்தை அபேக்ஷித்து அனுசரித்தும் நடத்துவதுதான் மேலான ராஜதர்மம் என்பதையாவது, நிர்ப்பந்தத்தின் மேல் ஆளுவதைவிட சம்மதத்தின்மேல் ஆளுவதுதான் மேலான ராஜ்ய தந்திரமும், உபாயமுமாகும் என்பதையாவது, சுலபத்தில் ஒப்புக்கொள்கிறதில்லை; ஒப்புக்கொண்ட பிறகும் அனுஷ்டானத்திற்கு சீக்கிரத்தில் கொண்டு வருகிறதில்லை. ஆகவே, நாளடைவில் இந்தியாவும் மற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் போல் சுய ஆட்சி பெற்று, சம அந்தஸ்துடன் ஏகாதிபத்தியத்தின் சிரோமணியாக இருக்கவேண்டுமென்று, சென்ற மூன்று தலைமுறையாய் பிரிட்டிஷ் ராஜ்ய தந்திரிகள் பற்பல சமயங்களில் பார்லிமெண்டிலும், பொது ஸ்தலங்களி



லும் கூறியிருந்தபோதிலும், காலக் கிரமத்தில் மிகவும் தாமதப்பட்டு சுய ஆட்சி முறைகள் நமது தேசத்தில் ஏற்பட்டு வருவதாலும், அது காரணம் பற்றி தேசத்தின் முன்னேற்றம் பல வழிகளிலும் தடைப்பட்டு வருவதாலும், இப்போது மகா யுத்தத்தினாலும், அதன் முடிவிலும் ஏற்படக்கூடிய பல மாறுதல்களை கவனிக்கையில் இந்தியாவும் தனது விருத்திக்குற்ற சுய ஆட்சி பெற்று ஏகாதிபத்தியத்திலிராவிடில் அதனுடைய அந்தஸ்தும், அதன் ஜனங்களின் நிலைமையும் ஹீன ஸ்திதி யடையக்கூடியதாய் விடும் என்பதையும் கவனித்தே ஜனத்தலைவர்களும் மகா ஜனங்களும் இச்சமயம் சுய ஆட்சித் திருத்தங்களை முற்படுத்த யத்தனித்திருக்கிறார்கள்.

அப்படி நமது பிரதிநிதிகளால் கேட்கப்படும் திருத்தங்கள் சட்ட சபைகளின் அமைப்பிலும், நிர்வாகம் செலுத்தும் முறைமைகளிலும், வரி விதிக்கும் வழிகளிலும், நீதி பரிபாலன ஏற்பாடுகளிலும், உத்தியோக நியமனங்களிலும், ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களிலும் இப்போதிருக்கும் குறைகளை நிவர்த்திப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அடங்கியிருக்கும் நாடுகள் சாதாரணமாக நான்கு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. யுனைடெட் கிங்டம் என்று சொல்லப்படும் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் தாய் நாடென்று வழங்கப்பட்டு வருவதல்லாமல், அவைகளின் அரசாட்சியும் அதிகாரமும் ஏகாதிபத்தியத்தில் முதன்மையாகக் கருதப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்தில் இனி ஏற்படப்போகும் திருத்தங்

கள் எவ்வாறாயினும், இப்போதிருக்கும் நிலைமையில் தாய் நாட்டின் பார்லிமெண்டு மகாசபைக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தேசங்கள் எல்லாவற்றிலும் செல்லக் கூடிய அதிகாரம் சட்டப்படி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அனுஷ்டானத்தில் இவ்வதிகாரம் ஏகாதிபத்தியத்தின் இரண்டாவது பாகத்திலடங்கிய தேசங்களாகிய ஸ்வராஜ்யம் பெற்ற குடியேற்ற நாடுகள் பேரில் செலுத்தப்படுவதேயில்லை. இக்குடியேற்ற நாடுகளில் ஆதியில் பிரிட்டிஷ் தாய் நாட்டு தேசத்தவர்கள் சென்று குடியேறி நிரந்தரமாக வசிக்கத்தொடங்கினதும், ஆங்காங்கு பிரிட்டிஷ் ஆட்சிமுறையை அனுசரித்து, பிரதிநிதி சபைகளை ஏற்படுத்திக்கொண்டு அந்தந்த ஸ்தலங்களின் நிர்வாகங்களைத் தாங்களே பார்த்து வரலானார்கள். காலக்கிரமத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையார் அந்தந்தக்குடியேற்ற நாடுகளுக்குப் படிப்படியே சுய ஆட்சி அதிகாரங்கொடுத்து அந்தந்த நாட்டின் உள்நாட்டு விவகாரங்களை அந்தந்தநாட்டாரே முழுதும் நிர்வகித்து நடத்திக்கொள்ளும்படியும் விட்டுவிட்டார்கள். அதினால் வெளிதேச சம்பந்தமான விவகாரங்கள் ஏகாதிபத்தியத்தின் ராணுவக் காப்பு கடற்படைக்காப்பு முதலிய பொதுக்காரியங்கள் தவிர, மற்றஎல்லாக்காரியங்களிலும் குடியேற்ற நாட்டு ஜனங்களும் அவர்கள் சபைகளும் சுவேச்சாதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அதினால் சட்டப்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபைக்கு அத்தேசங்களின் நிர்வாக கார்யங்களில் பிரவேசிக்க அதிகாரமிருந்தாலும் அதை உபயோகப்படுத்துவது கிடையாது.

ஆனால் இந்த சுயஆட்சி பெற்ற குடியேற்ற நாடு



களைத் தவிர, முழு சுயஆட்சி பெறாமலும் பிரதிநிதி சபைகள் மட்டில் ஏற்படுத்தப்பட்டு ஆங்கிலர்களால் குடியேறப்பட்டிருக்கிறதுமான இதர சிறியநாடுகளும், அவைகளுடன் நாகரீகம் பெற்றவர்களும் பெறாதவர்களுமான பல புராதான ஜனங்களடங்கிய தேசங்களில் ஆங்கிலர்கள் வியாபாரத்திற்காகவும் தோட்டம் சுரங்கம் முதலிய பொருள்களைத் தேடிக்கொள்ளுவதற்காகவும் பலவாறாக ஆங்காங்கு குடியேறி அப்பிரதேசங்களை தங்கள் வசமாக்கி பிரிட்டிஷ் ஆட்சியை விருத்தி செய்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் பார்லிமெண்டு சபைக்குப் பொறுப்பு வஹித்த நிர்வாக மந்திரிகளின் மேல் விசாரணையில் இத்தேசங்களிருக்கின்றன.

இவ்விருவகை நாடுகளும் சுய ஆட்சி பெறாத குடியேற்ற நாடுகளென மூன்றும் பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஏகாதிபத்தியத்தின் நான்காம் பாகமெனப்படும் நமது இந்தியா தேசம் இவ்வகுப்புகளில் ஒன்றிலும் சேராதது. இருந்தாலும் ஏகாதிபத்தியமென்று சொல்லும் மொழிக்கு முக்கிய ஆதாரமாயிருப்பது நம் இந்தியாவேயாகும். ஏனெனில், இத்தேசமே பிரிட்டிஷ் அரசாக்ஷிக்குட்பட்ட நாடுகளுள்வளமும் விஸ்தீரணமும் வன்மையும் பொருந்தியதாயிருப்பதும் தவிர ஆதிபத்தியமென்ற வார்த்தை நமது தேசத்தில் ஆங்கிலர்கள் ஸ்தாபித்திருக்கும் நேரான அதிகாரத்தைக் குறிப்பிடுவதுமாக இருக்கிறது. குடியேற்ற நாடுகளுக்கும் பிரிட்டிஷ் தாய்நாட்டிற்குமிருக்கும் சம்பந்தத்தை ஆதிபத்தியமெனச் சொல்லுதல் பொருந்தாதென்றும் இனி அந்நாடுகளெல்லாவற்றையும் தாப்

நாடுடன் சேர்த்து 'காமன் வெல்த்' என்ற சுதந்திரம் பெற்ற தேசங்களின் தொகுதி யெனவே பெயரிட வேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே, நமது இந்தியா தேசமும் அவ்வாறே ஸ்வதந்திரம் பெற்ற நாடுகளில் ஒன்றாக அமைந்தாலொழிய, இந்த பிரிட்டிஷ் காமன்வெல்த்தென்னும் தொகுதி ஸ்திரமாக ஏற்படுவதற்கு வழியில்லையென்பதை இந்திய ஜனத் தலைவர்களனைவரும் ஒரே அபிப்பிராயமாக மகா சபைகளின் நடவடிக்கைகளில் ஏகாதிபத்திய நிர்வாகஞ் செய்வோர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தியா தேசம் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஆதிபத்தியத்தில் குடியேற்ற நாடுகள் போலவே சட்டப்படி உள்பட்டிருந்தாலும், வாஸ்தவத்தில் அந்த ஸ்வதந்திரம் பெற்ற தேசங்கள்போல் நமது தாய் நாடு இல்லாமலிருப்பதை இச்சமயமே திருத்த வேண்டிய தவசியமென்றும், யுத்தத்திற்குப் பிறகு திருத்தங்கள் செய்யுங்காலத்தில் இவ்விஷயத்தை எவ்விதத்திலும் கவனித்து அதற்குத் தக்கவாறு ஏகாதிபத்திய அமைப்புகளைத் திருத்த வேண்டுமென்றும் இந்திய ஜனத் தலைவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

ஆனால் இந்த தேசத்தின் அனாதியான நாகரீகத்தையும் இத்தேசத்தவரின் ஆழ்ந்த தேச பக்தியையும், அவர்களின் அவாக்களையும் லக்ஷியங்களையும் கவனிக்காது குறுகிய திருஷ்டியுடன் ஏகாதிபத்தியத்திலடங்கியிருக்கும் ஆங்கிலர்களின் நன்மையை மட்டில் கோரும் சில ஏகாதிபத்திய வாதிகள் நிஜமான நிலைமைகளையும் நேரான வழிகளையும் நிராகரித்துப் பேசி ஏகாதிபத்தியத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகா



சபையுடன் குடியேற்ற நாட்டாரும் சேர்ந்து ஒரு ஆதிபத்தியத்தைப் பல ஆதிபத்தியமாகப் பெருக்கி, அவை ஒன்று சேர்ந்து இந்தியாவை ஆட்சி புரிவதே ஏகாதிபத்தியத் திருத்தத்தில் செய்யவேண்டிய முடிவென்று வாதிக்கிறார்கள். தவிர, அதை உத்தேசித்துப் பலவித முயற்சி செய்து நம் தேசத்தவர்களுடைய ஆண்மைக்கும் அறிவுக்கும் அந்தஸ்துக்கும் குறைவாக இருக்கும் பல யோசனைகளைச்சொல்லி அவைகளுக்குத் தக்கவாறு ரஹஸ்ய வேலைகளும் செய்து வருகிறார்கள். இதைப் பற்றிப் பத்திரிகைகள் பலவாறு எடுத்துக் கூறியிருக்கின்றன.

ஏகாதிபத்தியத்திலிருக்கும் பார்லிமெண்டுகளின் பிரதிநிதிகள் சில மாதங்களுக்கு முன் அமைத்துக் கொண்ட ஒரு சபையின் ஆதரவில் ஏகாதிபத்திய சம்பந்தமான சில பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவற்றைப்பற்றி லார்ட் மில்னர், எர்ல் கிரே, லார்ட் ஐலிங்டன், ஸர் ஜார்ஜ் வாஸ்டர், லார்ட் ஸைடன் ஹாம் போன்ற ஏகாதிபத்திய பிரபுக்கள் விவரித்தார்களாம். லார்ட் ஐலிங்டன் இந்தியாவும் ஏகாதிபத்தியமும், என்பதைப்பற்றியும், லார்ட் ஸைடன் ஹாம் ராணுவக்காப்பு, கடற்படைக்காப்பு என்பதைப் பற்றியும் பிரசங்கித்ததாகத் தெரிகிறது. லார்ட் ஐலிங்டன் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் நிலைமையைப் பற்றிச் சொல்லியிருப்பதையும், இதர பிரச்சினைகளைப் பற்றி வெளிவந்திருக்கிற வியாசங்களின் ஸாராம்சத்தையும் இங்கு குறிப்பிடலாகும்:—

தாய் நாட்டுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் அன்னியோன்னியம் அதிகமாகும்படி என்ன ஏற்பாடு முடிவில்

நிர்த்தாரணம் செய்யப்படுமோ அதில் இந்தியாவுக்கும் இடமேற்பட்டாலொழிய, அந்த ஏற்பாடு பூர்த்தியாகாது.

ஏகாதிபத்தியத்தை ஒன்றாய்க் கட்டுப்படுத்த பல ஏற்பாடுகள் பிரேரணை செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றாவது, இந்தியாவை நேராக நிமிர்ந்து பார்க்கவில்லை. இந்தியாவானது முற்போக்கடையாத ஒரு தேசமென்றும், அத்தேசத்தின் ஆள்கையின்பொருட்டு சில ஆங்கில உத்தியோகஸ்தர்களையே அது நம்பியிருக்கிறதென்றுமிருந்த பழைய எண்ணம் இன்னும் அநேகருக்கிருக்கலாம். 20 வருஷத்துக்கு முன்னமேயே இந்தியாவைப்பற்றி இப்படி நினைப்பது சரியாயிருந்திருக்காது. இன்று, கொஞ்சமும் இந்த வருணனை பொருந்தாது. குடியேற்ற நாடுகள் அடைந்திருப்பது போன்ற சுயஆட்சியை அது பெற்றிருக்கவில்லை தான்; ஆனால் தன்னுடைய விஸ்தீரணத்தையும், வியாபாரப் பெருக்கத்தையும் ராஜீய அபிவிருத்தியையும், ராணுவத்தென்பையும், ராஜபக்தியையும் உத்தேசித்து, ஏகாதிபத்தியம் சம்பந்தமான ஆலோசனைகளில் தன்னுடைய வாக்குக்கும் இடம் வேண்டுமென்று இப்பொழுது அது கேட்கிறது. ஏகாதிபத்திய அபிவிருத்தியில் கண்ணுள்ளவர்கள் மேற்சொன்னபடி இந்தியா கேட்பதை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும். * *

இந்தியாவுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் வித்தியாசமிருக்கிறது. அது என்னவென்றால், அதனுடைய தொழில்களும் வியாபாரமும் மிகப்பெரிதானவை. பழைய நாகரீகத்தினிடையில் பிரிட்டிஷ் ஆட்சி யேற்படுத்தப்பட்டது; இந்தியர்களாகிய உத்தியோகஸ்தர்களின் ஒத்துழைப்பைக்கொண்டே அந்த ஆட்சியானது நடத்தப்பட்டு வருகிறது.

அநேகம் நூற்றாண்டுகளாக இந்தியாவானது நாகரிகமடைந்ததாகவும், கல்வித் தேர்ச்சி பெற்றதாகவும், புத்தி



தீட்சண்யமுடையதாகவும் இருந்திருப்பதோடு, அந்தப் பரம்பரையில் உதித்தவர்களுக்கு பிரிட்டிஷ்கவர்ன்மெண்டார் இப்பொழுது மிகப் பெரிய உத்தியோகங்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஏகாதிபத்தியப் பிரச்னைகளுக்கு சமாதானம் கண்டு பிடிக்கும் விஷயத்தில் குடியேற்ற நாடுகளை நாம்சேர்த்துக்கொள்வதாயிருந்தால் இந்தியாவின் தேவைகள் என்ன, ஆசைகள் என்ன என்பதை எடுத்துச்சொல்லயோக்கியதையுள்ளவர்களிடமிருந்து அவைகளைத் தெரிந்துகொள்ள குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளுக்கு சமயம் ஏற்படவேண்டியது அவசியம். ஆகையால் ஏகாதிபத்தியத்தை ஒன்றாய்த் திரட்ட வேண்டிச்செய்யும் எந்த முயற்சியிலும் குடியேற்ற நாடுகளின் லட்சியங்களையும் இந்தியாவின் ஆசைகளையும் சமரசப்படுத்த நாம் தவறிப்போய் விடுவோமாகில், பூரணமான பக்குவத்தை அடைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தவறிப்போய் விட்டதென்றே சொல்ல வேண்டிவரும். இந்தியருடைய உயர்ந்தகுணங்களை குடியேற்றநாட்டார் எவ்வளவு நேரில் தெரிந்து கொள்கிறார்களோ அவ்வளவு அவர்களை மதித்து அவர்களை ஏகாதிபத்தியத்தில் அடக்கிக்கொள்ள சம்மதிப்பார்கள். முழு ஏகாதிபத்தியத்தில் இந்தியா ஒரு பாகமென்று கருதப்படவேண்டும் என்று லார்டு ஐலிங்டன் சொல்லிவிட்டு இந்தியாவின் வியாபாரம் முதலிய திரவிய மூலங்களைப்பற்றி விரிவாய்ப் பேசினார். பிறகு சமீப சில வருஷங்களில் கல்வி எவ்வளவு அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்பதை கணக்குகளைக்கொண்டு நிரூபித்தார். பிறகு ராஜீய வழியில் இந்தியா முன் சென்றிருக்கிறதைக் காட்ட வேண்டி லார்டு மார்லி காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களையும், அவைகளின் பலனாக மாகாண சட்ட சபைகளில் உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களின் தொகை மெஜாரிட்டியாயிருப்பதையும், எடுத்துச் சொன்னார்.

பிறகு கவர்ன்மெண்டு எப்படி நடத்தப்படுகிறதென்பதை விரிவாய்ச் சொன்னார். மாகாண இலாக்காவில் எல்லா உத்தியோகஸ்தர்களும் இந்தியரேயென்றும், இந்தியன் ஸிவில் ஸர்விஸில் இந்தியரின் தொகை அதிகமாகிக் கொண்டே வருகிறதென்றும், இன்னும் அதிகமாகுமென்றும் நிர்வாக சபைகளில் இந்தியர் ஸ்தானம் பெற்றிருக்கிறார்களென்றும், 44-ஹைகோர்ட் ஜட்ஜிகளில் 16-பெயர்கள் இந்தியர்களென்றும், இதர இலாக்காக்களிலும் இந்தியர் உத்தியோகம் பெற்றிருக்கிறார்களென்றும் சொன்னார்.

“இந்தியா எப்படி ஆளப்படுகிறதென்பதைக் காட்ட இவ்விஷயங்களைச் சொன்னேன். குடியேற்ற நாட்டார் சுய ஆட்சி என்று சொல்வது இதுவல்லதான்; ஆனால் இப்பொழுது இந்தியாவின் ஆளுகையில் இந்தியர் விசேஷஸ்தானத்தை எடுத்துக்கொள்ளும்படியாய் ஆட்சி முறையிருக்கிறது. இப்பொழுதே, அநேகர் முழு சுய ஆட்சி கேட்கிறார்கள். ஆனால் முடிவான அந்த லட்சியத்துக்கு கொஞ்சம் கொஞ்சமாகத்தான் போய்ச்சேரலாம். யுத்தம் முடிந்தவுடன் தேசத்தை ஆளும் காரியத்தில் இந்தியர் இப்பொழுதை விட அதிகமாக சம்பந்தப்படும்படி இன்னும் அநேகர் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்று நினைக்கிறேன்”

“இவ்விஷயங்களை யோசிக்கையில் ஏகாதிபத்திய மந்திராலோசனையில் தன்னுடைய வாக்குக்கும் இடம் வேண்டுமென்று இந்தியா கேட்பதானது கிரமமென்று தோன்றும். இந்தியாவின் ராணுவம் ஏகாதிபத்தியத்துக்கு எவ்வளவு உபயோகமானதென்பதை சென்ற இரண்டு வருஷ காரியங்கள் காட்டி விட்டன. யுத்தம் ஆரம்பமானவுடன், பூரா தளவாடங்களுடன் இரண்டு சேனைகளை இந்தியா அனுப்பி வைத்தது. யுத்த களங்களில் எல்லாம் இந்தியர் சண்டை செய்கிறார்கள். இந்திய சேனையின் ராஜ பக்தியை உத்தேசித்து, உத்தியோகப் பதவி



யை வகிக்க லாயக்குள்ள சில இந்தியரை யுத்தம் முடிந்தவுடன் அப்பதவிகளுக்கு உயர்த்த வேண்டியது நியாயமென்று நான் நினைத்தேன்.”

“இந்தியா இருக்கும் இடத்தினால் அதற்கேற்படும் விசேஷத்தைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லுகிறேன். கிழக்குத் திக்கிலிருக்கிற பிரிட்டிஷ் நாடுகளும் அன்னிய நாடுகளும் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளிலிருந்து இந்தியாவை நீக்கிவிட முடியாது; இந்தியாவும் குடியேற்ற நாடுகளும் சேர்ந்து முயற்சி செய்தாலோ, அந்தப் பிரச்னைகளுக்கு சமாதானமேற்படும் விஷயத்தில் இந்தியாவின் பெரிய சக்தியானது மிக உபயோகமாகவிருக்கும். கிழக்கு திக்கில் ஏகாதிபத்தியப் பிரச்னை மிகவும் முக்கியமானது; ஒற்றுமையான நடவடிக்கை அவசியமாயிருக்கும். இந்தியா சம்பந்தப்படாத ஏகாதிபத்தியப் பிரச்னை இன்று என்ன இருக்கிறது? இந்தியாவானது விசேஷ சம்பந்தமுள்ளதாயிருந்திருக்கிற இந்த யுத்தம் முடிந்த பிறகு, சத்துருவைத் தாக்கவும் தன்னைக் காத்துக்கொள்ளவும் இந்தியாவின் பலங்களைச் சேர்த்துக்கொள்ளாது ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைத்துவிடக்கூடுமோ? இந்தியா எங்கிருக்கிறது கவனியுங்கள்; அமெரிக்காவிலுள்ள கானடா முதலிய பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் என்ன, சீனா ஜப்பான் என்ன, முதலிய தேசங்கள் சம்பந்தமாக உண்டாகக்கூடிய பிரச்னைகளில் இந்தியா எப்படி சம்பந்தப்படவேண்டியிருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். சமுத்திர மத்தியிலுள்ளவைகளும், விசேஷ விஸ்தீரணமுள்ளவைகளும் ஆனால் சொல்ப ஜனத்தொகையையேயுடையவைகளுமான ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் ஏராளமான சக்தியுள்ளதும் ஒத்துழைக்க இஷ்டப்படுகிறதுமான இந்தியாவைத் தங்களுடைய மந்திராலோசனைகளில் சேர்த்துக் கொள்ளாமல் அவைகள் தங்களுடைய கடமைகளைச் செய்து விடக்கூடுமா?

"நாளுக்கு நாள் தங்களுக்கேற்பட்டு வருகிற சக்திகளை இந்தியர் அறிந்துதான் இருக்கிறார்கள். தங்களுடைய வியாபாரப் பெருக்கையும், ராணுவ பலத்தையும், தங்களுடைய தேசம் இயற்கையில் ஏற்பட்டிருக்கிற ஸ்தல விசேஷத்தினால் அதற்கிருக்கிற மதிப்பையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். பொது வாழ்வில் முக்கிய அந்தஸ்திலுள்ள எந்த இந்தியரும் ஏகாதிபத்தியத்தில் தங்களுடைய தேசம் அடங்க வேண்டுமென்று வெகு அவாவுள்ளவர்கள்; தங்களுடைய பங்குக்குள்ள சுமையைப்பொறுக்க அவர்கள் ஆசையுள்ளவர்கள். ஏகாதிபத்தியக் கான்பரென்ஸில் இந்தியாவுக்கு இடம் வேண்டுமென்று ராஜப் பிரதிநிதியின் சட்ட சபையிலுள்ள ஜனப் பிரதிநிதிகள் கேட்டனர். அது நியாயமல்லவா? அதனால் இந்தியாவுக்கு என்ன நன்மை யுண்டாகுமென்று கேட்கலாம். விட்டுப் பேசுவதால், இந்தியாவுக்கும் நன்மை யுண்டு, குடியேற்ற நாடுகளுக்கும் நன்மை யுண்டு. இந்தியர் குடியேற்ற நாடுகளுக்குப் பேரகும் விஷயமாய் கலந்து பேசிக்கொண்டால், பரஸ்பரம் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒரு சமாதானம் ஏற்படலாம்.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டிலும், இந்தியாவின் கவர்ன்மெண்டிலும், குடியேற்றநாடுகளின் கவர்ன்மெண்டிலும் நான்சம்பந்தப்பட்டிருந்திருக்கிறேன். வியாபாரம் தற்காப்பு, ஏகாதிபத்தியத்தின் திரவிய மூலங்களின் அபிவிருத்தி, சத்துருக்களிடத்தில் ஏகாதிபத்தியம் வகிக்கவேண்டிய மனோநிலை இவ்விஷயங்களிலெல்லாம் இந்தியாவுக்கு சம்பந்தமுண்டு. அவைகளைப்பற்றி யோசிக்கையில் இந்தியாவையும் கலந்துகொள்ள வேண்டாமோ? இந்தியா கேட்பது அதுதான். அதை மறுதளிப்பது கிரமமாகாது" என்று லார்டு ஜலிங்டன் பேசினார்.

**ஆனால் தேசத்தின் உள் நிர்வாகத்தில் சில திருத்தங்களாவது அவசியமாகுமென்பதை இந்திய கவர்ன்**



**மெண்டாரே உணர்ந்து இந்திய மந்திரிக்கு ஒரு சிபார்சும் அனுப்பியிருப்பதை "லண்டன் டைம்ஸ்" பத்திரிகையே குறிப்பிட்டு அதை யேற்றுக்கொண்டுமிருக்கிறது. இந்த ஸ்திதியில் இந்தியருக்காக இந்தியாவின் சட்ட சபையிலிருக்கும் பிரதிநிதிகள் தாக்கல் செய்திருக்கும் திருத்தக் குறிப்பு ஏகாதிபத்திய ராஜாங்கத்தாரால் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும். இதை பக்ஷபாதமில்லாதவர் யாரும் ஒப்புக்கொள்ள மறுக்கமாட்டார்கள். இது எவ்வாறாயினும், ஏகாதிபத்திய அமைப்பிலும் ஏற்பாடுகளிலும் இந்தியாவின், நிலைமை குன்றும்படி செய்ய வேண்டுமென்று நினைப்பவர்களையும் முயற்சி செய்பவர்களையும் பற்றி நாம் போதுமானபடி கண்டனம் சொல்ல சாத்தியப்படவில்லை. ஏகாதிபத்திய விஷயங்களை ஆலோசனை செய்யும் சபையிலே மற்ற நாடுகளைப்போல் இந்தியாவுக்குச் சரிசமமான அந்தஸ்து ஏற்படவேண்டுமென்று லார்ட் ஐலிங்டன் சொல்லியிருப்பது ஒருவாறு இச்சமயம் பாராட்டத் தக்கதாகும்.**

**இப்போது ஏகாதிபத்தியத்திற்கு நேர்ந்திருக்கும் ஆபத்துகளையும், அவற்றை அகற்றுவதற்கு ஏகாதிபத்தியத்திலிருப்பவர் எல்லோரும் செய்து வரும் முயற்சிகளையும், அவைகள் சீக்கிரத்தில் கை கூடி விடுமென்று உண்டாயிருக்கும் நம்பிக்கையையும் யோசித்து, இனி இம்மாதிரி ஆபத்துகள் நேருவதற்கிடமில்லாமலும், ஒருக்கால் நேர்ந்தால் அவைகளை நீக்க தற்போதிருந்தது போலில்லாமல் முழு முஸ்தீப்புடனிருப்பதற்கும், ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைப்பது அவசியமென்பதை யாவரும் ஒப்புக் கொள்ளு**

கிறார்கள். தவிர, "ரௌண்டு டேபிள்" கூட்டத்தார் தங்கள் மனோபாவங்களை இன்னும் விரிவாக வாய்மொழியினால் சொல்லுகிறார்கள். அதாவது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிப்படையான கொள்கை "காமன்வெல்த்" என்ற ஸ்வதந்திரங்கொண்ட பிரஜைகளின் மண்டலமாகையால், அம்முறைமையில் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரை ஜெயித்தோ, அல்லது ஒரு வர்க்கத்தார் மற்றொரு வர்க்கத்தாரை ஆண்டோ, ஆளுகை புரிவது சுத்த பிரஜாதர்மத்துக்கு விரோதமாகும். ஆதலால், ஜனங்கள் சுதந்திரங்களையும் சுய ஆட்சி தர்மத்தையும் பாதுகாப்பதே கருமமாகக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் ராஜாங்க முறை உலகத்தில் ஒருவரையொருவர் அடக்கி ஆளுவதென்கிற ராஜதந்திரத்திற்கு நேர் எதிரிடையாயுள்ளது. ஆகையால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பிரஜாதிபத்தியமெனவே மொழிபெயர்த்துச் சொல்லத்தக்கது மல்லாமல், அதுவே உலகத்தில் யுத்தங்களைத் தடுக்கக்கூடிய முதற் கருவியாகும். ஆனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள் விவகாரங்களில் மட்டும் குடியேற்ற நாடுகளுக்கு சுய ஆட்சியும், வெளி விவகாரங்களில் அயர்லாந்துள்படவிருக்கும் கிரேட் பிரிட்டனுக்கே அதிகாரமிருப்பதால், அது இக்கொள்கைக்கு விரோத மானதாகுமாம். அதனால் பல அசௌகரியங்கள் விளைந்திருப்பதை இந்த யுத்தம் வெளியாக்கி விட்டதாம். ஆகவே சுய ஆட்சி பெற்ற குடியேற்ற நாடுகள் ஏகாதி பத்தியத்தில் உள்ளும் புறமுமிருக்கும் எல்லாக் காரியங்களிலும் இங்கிலாந்தோடுகூட ஸமமான அதிகாரத்துடன் இனி நிர்வாகம் செய்வதற்கு ராஜாங்க அமைப்பைத்திருத்த



வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதற்கிணங்கி யுத்தம் முடியும் முன்னமேயே, யுத்தத்தைத் தீவிரமாக நடத்தும் வழிகளையும், பிறகு சமாதானத்தில் ஏற்பட வேண்டிய நிபந்தனைகளையும், பின்னும் ஏகாதிபத்தியத்திற்கவசியமான இதர காரியங்களையும் கலந்து யோசிக்க, ஏகாதிபத்திய கான்பரன்ஸை மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் அழைத்திருப்பதையும், அது சமீபத்தில் கூடியிருப்பதையும் நேயர்கள் அறிவர். இச்சபைக்கு இந்தியப் பிரதிநிதிகளென்று மூவர் போயிருப்பதை நாம் பாராட்டுகிறோம்.

அவர்களுக்கு சமமான அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தியாவுக்கும் அதன் பிரதிநிதிகளுக்கும் ஏகாதிபத்திய ஏற்பாட்டில் சம அந்தஸ்து ஏற்படவேண்டுமென்ற நோக்கத்திலும், எல்லா இந்தியருக்கும் தகுந்த அந்தஸ்திருக்க வேண்டுமென்பதிலும், அனேகமாக ஆங்கிலோ இந்தியரும் ஒரு மனதாயிருக்கிறார்கள். ஆனால் தங்களது நாட்டில் இந்தியருக்கு சம அந்தஸ்தும் சுயஆட்சியுமில்லாமல் உள்ளும் புறமும் சுயஆட்சி யேற்படுத்த அமைக்கப்பட்டிருக்கும் ஏகாதிபத்திய சபையில் சம அந்தஸ்து ஏற்பட முடியாததலால், நமக்கு சுயஆட்சியில் முக்கியமான அம்சங்களையாவது ஏற்படுத்துவது அத்தியாவசியமாகிறதென்பதைக் காட்டி, நமது மகாசபைகள் சென்ற டிசம்பர் மாசத்தில் சுயஆட்சித் திருத்தங்களைத் தொகுத்து, அவற்றை யேற்படுத்துவதற்கு கவர்ன்மெண்டாரை வற்புறுத்தவும், அவற்றைச் [illegible]வகித்து ராஜீயக் கடமைகளைச் செலுத்துவதற்கு ஜனங்களுக்குள் முயற்சிகள் செய்யவும், தீர்மானங்கள் செய்தன. வாஸ்தவத்தில் ஆங்கில முறைமையிலே

"காமன் வெல்த்" என்னும் சுயஆட்சிமுறை இந்தியருக்கு இந்த விதத்தில்தான் ஏற்படுத்தவேண்டுமென்பதை உணராமல், "ரௌண்ட் டேபிள்" என்ற கூட்டத்தினரோ வார்த்தையில் மட்டும் சுயஆட்சிப் பிரசங்கங்களை விஸ்தாரமாய்ச் செய்து, காரியத்தில் இந்திய தேசத்திற்கும் இந்திய தேசத்தினருக்கும் சுய ஆட்சி தற்போது பொருத்தமல்லவென்று, நம் ஜன்ம தேசத்தை அதிலிருந்து விலக்கிவிட யோசனைகள் செய்து வருகிறார்கள். இது வெளியாகி விட்டதென்பதை நேயர்கள் மறுபடியும் நினைப்பிற்குக் கொண்டுவர வேண்டும்.

ஆகவே, இப்பொழுது நமது சிந்தையும் காரியமும் என்ன? இராஜீய விஷயமாய் இப்பொழுது நமக்கு இருக்கும் நிபந்தனையைக் காட்டிலும் இன்னும் கேவலமான நிபந்தனைக்கு நாம் உட்பட்டிருக்கும்படியாக ஏகாதிபத்திய ஏற்பாடு இருக்கக்கூடாது; மேலும் ஏகாதிபத்தியமென்ற குடும்பத்திலே நாம் குற்றேவல் புரிபவர்களாயிருக்கும்படியான ஏற்பாடும் கூடாது; அதோடு கிரேட் பிரிட்டனுக்கு மட்டுமேயல்லாமல் நியூஸிலண்டு, ஆஸ்டிரேலியா, தென்னாப்பிரிக்கா, கானடா, அற்பமான நியூ பௌண்டு லாண்டு ஆகிய இவைகள் இட்டபடியான நிலைமைக்கு நாம் உட்பட்டிருக்கும்படியாக எந்த ஏற்பாடும் கூடாது. மேலேகண்டவாறான கேவல ஏற்பாடு உண்டாகக் கூடாதென்று ஆட்சேபிப்பதே நமது சிரத்தையும் காரியமுமாகும். நமது நன்மைகளையும் கௌரவத்தையும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பாதுகாப்பார்களென்று நாம் எதிர்பார்க்கிறோம். நமது நன்மைக்கும் கௌவரவத்துக்கும் பங்கம் வாராமல் நாம்



காத்துக்கொள்ள வேண்டுமாயின், பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டு நாம் சுய ஆட்சி பெறவேண்டும். தனது உள்நாட்டுக் காரியத்தைத் தானே பார்த்துக்கொள்ளும்படி இந்தியாவுக்கு உரிமைகிடைத்து விடின், பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும் இதரநாடுகளுடன் சரி சமத்துவமான அந்தஸ்தை இந்தியாவகித்து வரும். இங்கிலாந்துக்கு உட்பட்ட மிகப் பெரிய சார்பு நாடாகவும் பிரிட்டிஷ் மகுடத்தின் மாமணியாகவும் இருக்கும் இந்தியாவுக்கு குடியேற்ற நாடுகளுக்கு இருப்பதுபோன்ற அந்தஸ்தும் உரிமைகளும் கிடைக்காது போயின், பிரிட்டிஷாருக்கு என்நாளும் கீழ்ப்பட்டவர்களாகவேயிருப்பதில் இந்தியருக்கு சமாதானமிராது. புதிய உணர்ச்சி பெற்றுள்ள ஏகாதிபத்தியம் திருத்தியமைக்கப்படுவதற்குள், குடியேற்ற நாடுகளுக்குள்ள பதவியும் உரிமைகளும் இந்தியருக்குக் கிடைக்கவேண்டும்; அல்லது கிடைக்குமென்று திட்டமாக உறுதி சொல்லப்படவேண்டும். ஏனென்றால், ஏகாதிபத்தியத்தைச் சீர்திருத்தியமைப்பதற்காகப் பேச்சுவார்த்தை நடக்குமல்லவா? அப்பொழுது சுய ஆட்சி பெற்றுள்ள ஜனங்களின் ஆதரவைப் பின்பலமாய்ப் பெற்றுக் குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகள் பேசுவதுபோல் இந்தியப் பிரதிநிதிகளும் சுயஆட்சி பெற்றுள்ள இந்திய சமூகத்தினரின் பக்கபலத்தை ஆதாரமாகக்கொண்டு பேசும்படியான நிலைமையில் இருக்கவேண்டும்

இந்தியாவின் ஆட்சிமுறையிலே என்னென்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று ஜனப்பிரதிநிதிகள் கேட்கிறார்களென்பதை இங்கே சற்று கவனித்துப் பார்ப்போம். காங்கிரஸ் மகாசபையும் முஸ்லிம் லீக்

மகாசபையும் இலட்சுமணபுரியில்கூடி, ஆட்சியில் இன்னின்னவாறு சீர்திருத்தம் வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றன. அவ்விரு மகாசபைகளின் தீர்மானங்களை தேசத்தினர் அங்கீகரிக்கின்றனரென்றே சொல்லவேண்டும். ராஜசக்கரவர்த்தியானவர் ராஜப்பிரதிநிதியின் மூலமாய் இந்தியாவை ஆளுவார்; ராஜப்பிரதிநிதிக்கு உதவியாய் நிர்வாக சபையொன்று இருக்கும். அந்நிர்வாக சபையில் 6 பேர் மெம்பர்களா யிருப்பார்கள். அவர்களில் மூவர் இந்தியர், மூவர் ஐரோப்பியர். ஐரோப்பிய மெம்பர்களை ராஜப்பிரதிநிதி நியமிப்பார்; இந்தியாவிலே இந்தியன் ஸிவில் ஸர்விஸ் முதலிய ஊழியங்களிலுள்ளவர்களிலிருந்து நிர்வாக சபைக்கு மெம்பர்களை நியமிக்கவேண்டியதில்லை. ராஜப்பிரதிநிதியின் சட்டசபை மெம்பர்களே நிர்வாக சபைக்கு மூன்று பேரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்தியா மந்திரியின் சபையை எடுத்துவிடவேண்டும். குடியேற்ற நாட்டு மந்திரிக்கு என்ன பதவியுண்டோ அப்பதவிதான் இந்தியா மந்திரிக்கும் இருக்கும். நிர்வாக சபையினரே சட்ட சபையினருக்கு உட்பட்டிருப்பார்கள். ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் 150 மெம்பர்கள் இருக்கும்படி அச்சபை விசாலிக்கப்படும். அவர்களில் ஐந்தில் நாலுபங்கு பேர் ஜனசமூகத்தினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்களில் ஓரளவு பிரதிநிதிகளை முகம்மதியர் தாங்களாகவே தேர்ந்தெடுப்பார்கள். நிர்வாக சபையின் மெம்பர்கள் அனைவரும் நிர்வாக சபையின் மெம்பர்களாக இருப்பதனாலேயே சட்டசபையின் மெம்பர்களாவர். சட்டசபைப் பிரதி



நிதிகளில் ஐந்தில் நாலுபங்குப்பேரை ஜனங்கள் தேர்ந்தெடுத்துவிட, மீதியுள்ள மெம்பர்களை ராஜப்பிரதிநிதி நியமிப்பார். அவ்விதம் நியமிக்கப்படுவோர் உத்தியோகஸ்தர்களாகவும் அல்லாதவர்களாகவும் இருப்பார்கள். இந்தியா முழுவதற்கும் சட்டஞ்செய்ய சட்ட சபையினருக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் செய்யப்படும் சட்டத்தை ராஜப்பிரதிநிதியும் சக்காவர்த்தியும் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் ரத்து செய்துவிடலாம். இங்கிலாந்திலே பார்லிமெண்டு சபையினர் கேள்விகேட்பது போலவே, இங்கே நிர்வாக அதிகாரிகளின் நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்வி கேட்க சட்ட சபையினருக்கு அதிகாரம் இருக்கும். தீர்மானங்கள் கொண்டுவரவும் உரிமையுண்டு. அத்தீர்மானங்களை முதலில் ராஜப்பிரதிநிதி நிராகரித்துவிடினும், மறுபடியும் ஒருவருஷத்திற்குப்பின் சட்ட சபையில் அதே தீர்மானம் நிறைவேறுமாயின், அதன்படி நடக்க நிர்வாக சபைமெம்பர்கள் கட்டுப்பட்டிருப்பார்கள். சபையின் தலைவரை சட்ட சபையினரே தேர்ந்தெடுப்பார்கள். நிர்வாக சபையினர் 5 வருஷகாலம் அச்சபையில் ஸ்தானம் வகிப்பதுபோலவே சட்டசபையினரும் ஐந்துவருஷகாலம் ஸ்தானம் வகிப்பார்கள். 5 வருஷ காலத்திற்குள் சட்டசபையை ராஜப்பிரதிநிதி கலைத்துவிடலாம். அவ்விதம் கலைத்தபின் ஒரு வருஷ காலத்திற்குள் சபையைக் கூட்டிவிடவேண்டும். வரவு செலவு சம்பந்தமான யோசனைகளை நிர்வாக சபையினர் தயாரிக்க, அவைகள் சட்டசபையில் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். ராணுவம், கடற்படை ஆகிய இந்த இனங்களில் நேரும் செல... து

சட்ட சபையினரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டிராது. மாகாண கவர்ன்மெண்டின் அமைப்பும் அநேகமாக மேலே சொல்லிய மாதிரியில் இருக்கும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் கவர்னர் ஒருவர் இருப்பார். அவரோ சக்கரவர்த்தியால் நேராக நியமிக்கப்படுவார். மாகாண விஷயமான சட்டமோ கவர்னர், கவர்னர் ஜெனரல் ஆகிய இவர்களின் நிராகரிப்புக்கு உட்பட்டிருக்கும். இந்தியா கவர்ன்மெண்டு, மாகாண கவர்ன்மெண்டுகள் ஆகிய இவைகளுக்குப் பணவிஷயமாயுள்ள ஏற்பாடுகளைப்பற்றி பூராவாக இன்னும் நிதானிக்கவில்லை. ஆனால், இன்ன வரி மாகாணத்தைச் சேரும், இன்னவரி இந்தியா கவர்ன்மெண்டைச் சேரும் என்று பொதுவான பிரிவினை யொன்று இருக்கும். இந்தியா கவர்ன்மெண்டின் வரவுசெலவு திட்டத்திலே செலவு அதிகமாயிருப்பின், அதை மாகாணங்கள் ஈடுசெய்து கொடுக்கவேண்டும். இதைப்பற்றிய அம்சங்கள் அப்போதைக்கப்போது திட்டமாக்கப்படும்.

மேலே சொல்லிவந்த திட்ட போசனைகளைப் பார்த்தால், குடியேற்றநாடுகளில் ஆட்சி இருப்பது போன்ற ஆட்சியை இங்கே உடனே ஏற்படுத்த உத்தேசிக்கப்படவில்லை என்பது புலப்படும். முதலாவதாக வரவு செலவில் சுயாதிகாரமோ பிரமாதமான குறைக்கு உட்பட்டிருக்கும். சட்டசபையினரில் பெரும்பாலாரின் ஆதரவுக்கு உட்பட்டிராமலே நிர்வாகசபை இருக்கும். நிர்வாகசபையினிடம் நம்பிக்கை இல்லை யென்று சட்டசபையினர் தீர்மானஞ்செய்யின், உடனே நிர்வாக சபை கலைந்துவிடாது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலே முதன்மந்திரி பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பதுபோல், இங்கே



அவ்விதம் பொறுப்பு வாய்ந்தவர்கள் இல்லை. பொறுப்பு வாய்ந்த ஆட்சி என்றால், சட்ட சபையினருக்கு நிர்வாக சபையினர் உட்பட்டிருக்கவேண்டும். மேலே நாம் சொல்லியுள்ள திட்டயோசனைப்படி அவ்வளவு பூராவாக நிர்வாக சபையினர் சட்ட சபையினருக்கு உட்பட்டிராது போனாலும், நிர்வாகசபையிலே பாதிப்பேரை சட்ட சபையினர் தேர்ந்தெடுப்பார்களென்றிருப்பதனாலும், இருமுறை அங்கீகாரமான தீர்மானத்தின்படி நிர்வாகசபையினர் நடக்கவேண்டுமென்றிருப்பதாலும், கூடியவரையில் சட்ட சபையினருக்கு நிர்வாக சபையினர் கட்டுப்பட்டிருப்பார்கள். தவிர 5 வருஷகாலமே ஸ்தானம் வகிக்கலாமென்ற வரம்பும் இருக்கிறது.

சுய ஆட்சி சம்பந்தமாய் நாம் மேலே சொல்லிவந்துள்ள சீர்திருத்த திட்ட யோசனைகளைப்பற்றி பிறரால் ஆட்சேபங்கள் சொல்லப்படுகின்றன. அவைகளிற் சிலவற்றிற்கு சனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி பதிலளித்திருக்கிறார். இந்திய ராஜாங்கத்தைத் திருத்தி யமைக்கும்போது, அதில் தேச சமஸ்தானங்களைச் சேர்த்துக்கொள்ளாமல் விலக்கியிருப்பது சரியா என்பது முதல் ஆட்சேபம். தேசமன்னர்களும் சமஸ்தானத் தலைவர்களும் சில மாதங்களுக்கு முன் டெல்லியில் கூடினபோது என்ன சொன்னார்கள்? பிரிட்டிஷ் இந்தியாவின் காரியங்களில் தலையிடத் தங்களுக்கு இஷ்டமில்லாதிருப்பது போலவே, சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளோரும் தலையிடக் கூடாதென்று பரோடா மகாராஜா சொல்லியிருக்கிறாரென்பதைக் கவனிக்கவேண்டும். அவ்விதம் தேச மன்னர்கள் சொல்லு முன்பே, காங்கிரஸ் மகா சபையைச்

சேர்ந்தவர்களோ சமஸ்தானங்களின் ராஜீய விஷயங்களில் தலையிடுவதில்லையென்று சொன்னபடியே ஆதி முதல் நடந்து வந்திருக்கிறார்கள்.

இனி, சட்ட சபை ஒன்று மட்டுந்தானே இருக்கிறது; இதர தேசங்களில் லார்டு சபையென்றும் ஸெனெட் சபையென்றும் இரண்டு சபை இருப்பது போல, இந்தியாவிலே சட்ட சபையைத் தவிர மற்றொரு சபை வேண்டாமோ என்பது இரண்டாவது ஆட்சேபமாகும். இங்கிலாந்திலே காமன்ஸ் சபையைத் தவிர லார்டு சபை இருந்தும், அந்த லார்டு சபை தவறிப் போயிருக்கிறது. இதை இந்திய இராஜீயவாதிகள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். இரு சபைகள் இருப்பதனால் அவ்விரு சபைகளுக்கும் அடிக்கடி அபிப்பிராய பேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே அவ்விதம் நேரும் பேதங்களைப் போக்கி வெளியேறுவதற்காக அவ்விரு சபைகளின் வேலையும் கடமையும் இன்னின்னவென்று மிகவும் விரிவான விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தியாவிலே சட்ட சபையிலுள்ள ஜனப்பிரதிநிதிகள் தங்களது செல்வாக்கை நிலைநாட்டுவதற்குப் பலவருஷகாலமாகலாம். அதற்குள் நிர்வாக சபையின் மெம்பர்களாய்ச் சட்ட சபையில் ஸ்தானம் வகிப்பவர்களும் சட்ட சபைக்கு ராஜப்பிரதிநிதியால் நியமிக்கப்படும் மெம்பர்களும், இந்தியாவிலே இரண்டாவது சபையிருந்தால் எப்படியோ அப்படி இருக்கலாம். இரண்டாவது சபையொன்று இருக்க வேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது, அச்சபையை அமைப்பதற்கான வழியை இந்திய ராஜதந்திரிகள் தேடமுடியும்.



ஏகாதிபத்தியம் சீர்திருத்தியமைக்கப்படும்பொழுது, அதில் இந்தியாவின் அந்தஸ்து எப்படியிருப்பதென்பதைப்பற்றிப் பலர் பலவாறுசொல்லியிருக்கிறார்கள். திருத்தியமைக்கப்படும் ஏகாதிபத்தியத்திலே குடியேற்ற நாடுகளுக்கு எத்தகைய பதவியும் அந்தஸ்தும் உண்டோ அதேமாதிரியான பதவியும் அந்தஸ்தும் இந்தியாவுக்கு இருக்கவேண்டுமென்றே நாம் பொதுவாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே ஏகாதிபத்தியத்தில் இந்தியாவுக்குச் சரிசமமான பதவி கிடைப்பதற்குள் இந்தியாவுக்குச் சுயஆட்சி கிடைத்துவிடவேண்டுமென்று ஏற்படுகிறது. ஏகாதிபத்தியத்துக்குப் பொதுவாயிருக்கும் இருவகை சபைகளிலும் வர்ணமுள்ள தேசத்தினருக்குப்பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று சிலர்சொல்லினும், அவ்விருவகைச் சபைகளிலுள்ள மொத்தப்பிரதிநிதிகளில் நாலில் ஒருபங்கு வர்ணமுள்ள தேசத்தினருக்கு உண்டென்றும், வர்ணமுள்ள தேசத்தினரின் பிரதிநிதிகளுக்குள்ள யோக்கியதையானது ஐரோப்பியப்பிரதிநிதிகளின் யோக்கியதையைவிட மிடுக்காய் இருக்கவேண்டுமென்றும் வாதிக்கிறார்கள். ஆயினும் அவ்விதம் பிரதிநிதிகளின் யோக்கியதையில் வித்தியாசத்தை ஏற்படுத்துவது சரியல்லவென்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். பிரதிநிதிகளின் யோக்கியதை விஷயத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்துவதென்றால் அதை இந்தியத் தலைவர்கள் ஆட்சேபிப்பார்கள்.

வரவு செலவில் இந்தியாவுக்கு சுயாதிகாரம் இருக்கவேண்டுமென்று கேட்கும்பொழுது, ராணுவம் கடற்படை ஆகிய இனங்களின் வரவு செலவு விஷயத்தில் சட்டசபைக்கு அதிகாரமில்லாமல் நிர்வாக சபைக்கே

அதிகாரமிருப்பதென்று சொல்வது சரியல்லவே யென்பது இன்னொரு ஆட்சேபம். தேசத்தின் பாதுகாப்பு விஷயமான ராணுவம், கடற்படை ஆகிய இனங்களின் செலவில் சட்ட சபைக்கே அதிகாரம் இருக்க வேண்டுமென்று கேட்பது உசிதமல்லவென்று இந்தியத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

நிர்வாக சபையின் மெம்பர்களில் பாதிப்பேரைத் தேர்ந்தெடுப்பதென்று நாம் யோசனை சொல்லியிருப்பதற்குச் சிறிது ஆட்சேபம் சொல்லப்படுகிறது. மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பதென்ற முறைமை உண்டா என்றால் பார்லிமெண்ட் சபை இருப்பதுபோன்ற ஆட்சி இங்கே ஏற்படுவதாயின், அப்பொழுது மந்திரிமார்களைத் தேர்ந்தெடுப்பது கூடாதென்று சொல்லலாம். தேர்ந்தெடுப்பதென்ற முறையினால் தக்க யோக்கியதையுள்ளவர்கள் கிடைக்க மாட்டார்களென்றும், ஆகவே நிர்வாக சபை மெம்பர்களை ராஜப்பிரதிநிதியே நியமிக்கலாமென்றும், சொல்லப்படும். நிர்வாக சபைக்கு மெம்பர்களை ராஜப்பிரதிநிதி நியமிக்கும்பொழுது, அந்தமெம்பர்கள் உத்தியோகஸ்தர்களாயின் அதைக்கண்டு இந்தியர் ஒப்பவே மாட்டார்கள், உத்தியோகப் பற்றில்லாதவர்களிலிருந்து மெம்பர்களை ராஜப்பிரதிநிதி நியமிப்பதாயின், பற்பல மாகாணங்களிலுமுள்ள மனிதர்களைப்பற்றி ராஜப்பிரதிநிதி நன்கு அறிந்திருக்கக் கூடுமென்று சொல்ல முடியுமா? நிர்வாக சபைக்கு பாதிப்பேரை சட்ட சபையினரே தேர்ந்தெடுப்பதுதான் சரியென இந்தியத் தலைவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள், அவ்விதம் தேர்ந்தெடுப்பதில்



நல்ல பலன் கிடைக்காதுபோனால், வேறு முறையைக் கண்டுபிடித்து அனுஷ்டிப்பது கஷ்டமாகாது.

இது நிற்க, மேலே நாம் சொல்லி வந்த சீர்திருத்தங்களின் வண்ணம் ஆட்சி ஏற்பட்டு விடும்பொழுது, கோடிக்கணக்காயுள்ள ஜனங்களின் க்ஷேமலாபகாரியங்களில் படித்த வகுப்பினராயுள்ள ஒரு சிலருக்கே செல்வாக்கு ஏற்பட்டு விடுமென்று மற்றுமொரு ஆட்சேபம் சொல்லப்படுகிறது. ஆகவே இப்பொழுது எத்தகையினரால் ஆட்சி நடந்துவருகிறதென்பதைப் பார்ப்போம். தேசத்தைஆளுவோராய் இருப்பவரில் பலரும் கடலைத் தாண்டி இங்கே வருகின்றனர்; தேச ஜனங்களின் பாஷையை நன்கு அறிந்து கொள்ளுவதில்லை, தேச ஜனங்களின் வாய்மொழியைக் கண்டு கொள்வதற்கு மத்திய புருஷரொருவரைத் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது; மேலும் அவர்களோ ஜனங்களுடன் தாராளமாய்க் கலந்து பழகிக்கொள்ளாமல் பெருமையென்று விலகிநின்றுவிடுகின்றனர். ஆகவே பரஸ்பர அபிமானமும் நம்பிக்கையும் இல்லாது போகின்றன. இப்படியிருக்க, தேசத்திலேயே பிறந்து வளர்ந்து தேச ஜனங்களின் மனப் போக்கையும் விருப்பங்களையும் மனோபாவங்களையும் நன்குணர்ந்தவர்களாய் இருக்கக்கூடிய கல்வி கற்ற இந்தியருக்கு ஆட்சி விஷயத்தில் தக்க செல்வாக்கு இருப்பது ஆட்சேபத்திற்கு இடமாகுமோ? ஆதலின் இந்திய சமூகத்தின் சுதந்திரங்களையும் க்ஷேம லாபங்களையும் படித்த வகுப்பினரா யுள்ள இந்தியரே நன்கு பாதுகாத்துக் கொள்ள முடியுமென்று சொல்வோம்.

இதுபோக, இந்தியாவின் ஆட்சியானது இந்தியருக்கு வசப்பட்டுவிடின், அது வலுக்குறைவென்று போர் வீர வகுப்பினர் கருதி, கலகமாய்க் கிளம்பி விடுவார்களென்பது கடைசியாயுள்ள ஓர் ஆட்சேபமாகும். முகம்மதியர், ஸீக்கியர், மகாராஷ்டிரர் ஆகிய அனைவரும் தேசாபிமானத்தில் மூழ்கிக்கிடக்கும் பொழுது அந்த ஆட்சேபத்திற்கு ஆதாரமில்லை. மேலும் சேனையில் யாரும் சேரலாமென்றும், யோக்கியதையுள்ளவர்களுக்கு சேனையில் தக்கபதவிகள் கிடைக்குமென்றும் ஏற்பட்டு விடும்பொழுது, போர் வீர வகுப்பினர், போர் வீரரல்லா வகுப்பினர் என்ற வித்தியாசமே 20 வருஷகாலத்திற்குள் இல்லாமல் பறந்துபோம். தவிர இந்தியாவின் ஆட்சியில் பிரிட்டிஷாருக்கு சம்பந்தமே யில்லாமல் போகும்படியான ஏற்பாடு செய்யப்பட்டால் தா— அந்த ஆட்சேபத்திற்கு இடம் ஏற்படலாம். பிரிட்டிஷாருடைய சம்பந்தத்துக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்டே ராஜீய விஷயமாய் அபிவிருத்தியடைய வேண்டுமென்பது இந்திய ஜனத் தலைவர்களின் தீர்மானம். ஆதலின் அந்த ஆட்சேபத்திற்கு ஆதார மில்லையென்று சொல்வோம்.

எந்த நோக்கங்களைக்கொண்டு நாம் கவனித்தபோதிலும் இப்போது தேசத்தவர் மனதிலுதித்து வெளிவரத் துடித்துக் கொண்டிருக்கும் சுய ஆட்சி சம்பந்தமான அவாக்களைப் பூர்த்தி செய்வதில் தாமதம் கூடாதென்பதை ஆழ்ந்து யோஜிப்பவர் எவரும் அறிவர். இந்தியர்களின் திறமையையும் பாத்தியங்களையும் அதிகார வர்க்கத்தார் நன்கு அறிந்திருக்கிறார்களாயி



னும், அவைகள் ஓங்கித் தழைத்து பலனுக்கு வருவதில் மேலே காட்டியபடி ஆட்சேபங்கள் சொல்லச் சாத்தியப்படாவிடில், வேறு விதமாய் 'அக்கரைக்குறைவைக் காட்டுகிறார்கள். லாகூர் நகரில் நமது ராஜப்பிரதிநிதி சில நாட்களுக்கு முன் உபசரிக்கப்பட்டபொழுது, அங்குக் கூடியிருந்த பல வகுப்பார்களையும் பார்த்து அவர் சொன்ன சில வார்த்தைகள் அவ்வர்க்கத்தாரின் மாமூல் வார்த்தைகளாகவே இருந்தன. இந்தியருக்குத் திறமையில்லையென்று இப்பொழுது அதிகாரிகள் சொல்லுகிறது வழக்கமில்லை. அவர்களுடைய திறமை வெகு காலமாக அங்கீகரிக்கப்பட்டுப் போனபடியால், அதை அதிகாரிகள் ஒப்புக்கொண்டு விடுகிறார்கள். இந்தியருக்குள்ள பெரிய ஆசைகளும் கிரமமானவைதான் என்றும் ஒப்புக்கொண்டு விடுகிறார்கள். திறமையுமுண்டு, ஆசைகளும் கிரமமானவைதான் என்று ஒப்புக்கொள்ளுகிறார்களாயினும், அவை நிறைவேறும்படி செய்ய ஒரு பெரிய தடையிருக்கிறதாம். அதென்னவென்றால் "இன்னும்காலம் வரவில்லை" என்பதேயாகும். அதற்கு ஒரு வியாக்கியானமும் மாமூலாய் ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு பழங் கதை; சலிக்காமல் இதை இன்னும் சொல்ல அதிகாரிகள் கூசவில்லை. இது வரையில் நாம் எவ்வளவு வேகத்துடன் முன் சென்றிருக்கிறோமோ அந்த வேகத்துடன் இனியும் படிப்படியாய் எடுத்த காலைத் திருப்பவும் ஊன்றி வைத்துக்கொண்டு முன் செல்வோமாகில், நம்முடைய லட்சியமிருக்கும் இடத்திற்கு நாம் போய்ச்சேர அனந்த காலம் செல்லும்போலிருக்கிறது. ஆகவே, எவ்விதத்திலும் தாமத மேற்படாமல் நம்முடைய அபீஷ்டங்கள்

பூர்த்தியாவதற்கு இந்தியர்கள் தங்களது நிலைமையை நன்கறிந்து, அதைத்திருத்தி க்ஷேமத்தைப் பெருக்கவே முயலவேண்டும். அம்முயற்சியைத் தீவிரப்படுத்துவதில் இப்பிரசுரத்தையும் ஒரு சிறு சாதனமாக அர்ப்பணம் செய்திருக்கிறோம்.

# யுத்தத்துக்குப்பின் வேண்டிய சீர்திருத்தங்கள்.

## இரு மகாசபை கமிட்டிகளின் திட்ட யோசனைகள்.

இந்தியாவின் ஆட்சியிலே யுத்தத்துக்குப் பின் இன்னின்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று காங்கிரஸ் மகா சபை, முஸ்லிம் லீக் மகா சபை ஆகிய இரு சபைகளின் கமிட்டியாரும் சேர்ந்து ஆலோசனை செய்து, ஒருமனதுடன் பிரேரித்துள்ள திட்ட யோசனைகளின் விவரம் பின் வருமாறு:—

### 1. மாகாண சட்ட சபைகள்.

(1) மாகாண சட்ட சபைகளின் மெம்பர்களிலே ஐந்தில் நாலு பங்குபேர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்களாகவும், ஐந்தில் ஒரு பங்குபேர் கவர்ன்மெண்டால் நியமனம் செய்யப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

(2) பெரிய மாகாணங்களின் சட்ட சபைகளிலே 125 மெம்பர்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்; சிறிய மாகாணங்களின் சட்ட சபைகளிலே 50 முதல் 75 மெம்பர்கள் வரையில் இருக்க வேண்டும்.

(3) சட்ட சபைகளின் மெம்பர்களோ. ஜனங்களால் நேராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களாக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கக்கூடியவர்கள் அதாவது ஓட்டர்களின் தொகை கூடுமானவரையில் விரிவாக இருக்கவேண்டும்.

(4) சொற்ப ஜனத்தொகையுள்ளவர்களாய் முக்கியமாயிருக்கும் வகுப்பினருக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்

படுவதற்கான தக்க ஏற்பாடுகள் இருக்கவேண்டும்; மாகாண சட்ட சபைகளிலே முகம்மதிய சமூகத்தினருக்கென்று பிரத்தியேகமான பிரதிநிதிகள் இருக்கவேண்டும். அம்முகம்மதியப் பிரதிநிதிகளோ முகம்மதியராலேயே தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

ஒவ்வொரு மாகாண சட்ட சபைகளிலும் முகம்மதியப் பிரதிநிதிகள் இருக்க வேண்டிய திட்ட விகிதமென்னவென்றால்:—

பஞ்சாப் மாகாண சட்ட சபையிலே தேர்ந்தெடுக்கப்படும் மொத்த இந்தியப் பிரதிநிதிகளில் சரி பாதிப்பேர் முகம்மதியராக இருக்கவேண்டும்.

ஐக்கிய மாகாண சபையிலே நூற்றுக்கு 30 பேர் விகிதம் முகம்மதியப் பிரதிநிதிகள்.

வங்காள—சபையிலே நூற்றுக்கு 40 பேர் விகிதம் முகம்மதியப் பிரதிநிதிகள்.

பீஹார்—சபையிலே நாலில் ஒரு பங்கு பேர் முகம்மதிய பிரதிநிதிகள்.

மத்திய மாகாண—சபையிலே நூற்றுக்கு 15 பேர் வீதம் முகம்மதியப் பிரதிநிதிகள்.

சென்னை—சபையிலே நூற்றுக்கு 15 பேர் வீதம் முகம்மதியப் பிரதிநிதிகள்.

பம்பாய்—சபையிலே மூன்றில் ஒரு பங்கு பேர் முகம்மதியப் பிரதிநிதிகள்.

ஹிந்துக்கள், முகம்மதியர் ஆகிய இருவகுப்பினரிலே எந்த வகுப்பினருக்கேனும் பலா பலன்களைத் தரக்கூடிய ஒரு மசோதாவையாவது தீர்மானத்தையாவது அவ்விருவகைப் பிரதிநிதிகளில் உத்தியோகப்பற்றில்லாத எவரேனும் சபையின் முன் ஆலோசனைக்குக் கொண்டுவரும்பொழுது, அதைக் குறித்து ஏதேனும் ஒருவகுப்புப் பிரதிநிதிகளில் முக்கால் பங்கு பேர் ஆட்சேபிப்பார்களாயின், அத்தகைய மசோதாவையும்,



தீர்மானத்தையும் நிறுத்திக்கொள்ளவேண்டும். மேலும்முகம்மதியரல்லாத இதரசமூக ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இதர எலக்ஷன்களில் முகம்மதியர்கள் தலையிடக்கூடாது. ஆனால், நிலச்சுவான்தார்கள், யூனிவர்ஸிடிகள் ஆகிய இந்த சமூகங்களின் பிரதிநிதி ஸ்தானங்களுக்கு ஓட் கொடுக்க முகம்மதியருக்குப் பாத்தியமில்லையென்பதில்லை.

(5) மாகாண கவர்ன்மெண்டின் தலைவராக உள்ளவர் சட்டசபையின் பிரஸிடெண்ட் அதாவது தலைவராக இருக்கக் கூடாது. ஆனால், சட்ட சபை மெம்பர்களே தங்களது சபைக்குரிய தலைவரைத் தேர்ந்தெடுக்கக் கூடிய உரிமை பெற்றவர்களாய் இருக்கவேண்டும்.

(6) சட்ட சபை மெம்பரொருவர் ஒரு கேள்வி கேட்டபின், அக்கேள்வியை யனுசரித்து உபகேள்வி கேட்கும்படியான உரிமையானது ஆதிகேள்வியைக் கேட்டவருக்கே யுண்டென்று இருக்கக்கூடாது. ஆனால் எந்த மெம்பரும் உபகேள்வி கேட்கும் உரிமை பெற்றிருக்கவேண்டும்.

(7) (a) ஏற்றுமதி இறக்குமதி, தபால், தந்தி, நாணய அச்சடிப்பு, உப்பு, அபின், ரயில்வே, சேனை, கடற்படை, இந்திய சமஸ்தானங்களால் கட்டப்படும் கப்பம், ஆகிய இனங்களின் வருமானத்தைத் தவிர மற்ற எல்லா இனங்களின் வருமானமும் மாகாணங்களுக்குச் சொந்தமாக இருக்கவேண்டும்

(b) ஓர் இனத்தின் வருமானமானது மாகாண கவர்ன்மெண்டு, இந்தியா கவர்ன்மெண்டு ஆகிய இரண்டுக்கும் சொந்தமென்று இருக்கக்கூடாது. ஆனால், இந்தியா கவர்ன்மெண்டுக்கு மாகாண கவர்ன்மெண்டுகள் இவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமென்று திட்டமாக வேண்டும். அவ்விதம் திட்டமாகும் தொகையை எதிர்பாராத சந்தர்ப்பங்களை யனுசரித்து மாற்றி யமைக்கவேண்டிய அவசியம் ஏற்படுமாயின், அவ்விதமே மாற்றி யமைக்கவேண்டும்.

(c) உள்நாட்டு நிர்வாக சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மாகாண சட்ட சபைக்கு முழு அதிகாரமும் இருக்க

வேண்டும். கடன் வாங்குதல், வரி விதித்தல், வரியை மாற்றி யமைத்தல், வரவு செலவு மதிப்புத் திட்டத்தை அங்கீகரித்தல், ஆகிய இந்த இனங்களிலும் முழு அதிகாரம் இருக்கவேண்டும். செலவுக்குரிய எல்லா அம்சங்களும், அவசியமாயுள்ள வரி வருமானத்தைப் பெறுவதற்கான வழிகளடங்கிய எல்லா யோசனைகளும், மசோதா ரூபமாக சபையின் முன் ஆலோசனைக்கு வேண்டும். அம்மசோதாக்களோ மாகாண சட்ட சபைகளின் அங்கீகாரத்துக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(b) மாகாண கவர்ன்மெண்டுக்குட்பட்ட எல்லா விஷயங்களையும் பற்றிய தீர்மானங்கள் சட்ட சபைகளால் விவாதிக்கப்படும்படி இருக்கவேண்டும். தீர்மானங்களைப்பற்றி இன்னின்னவாறு விவாதம் நடக்கவேண்டுமென்ற விதிகள் சட்ட சபைகளால் நிர்த்தாரணம் செய்யப்பட வேண்டும்.

(e) சட்ட சபையினரால் அங்கீகாரமான ஒரு தீர்மானமானது நிர்வாக சபையிலுள்ள கவர்னரால் நிராகரிக்கப்பட்டுப் போனாலொழிய, அத்தீர்மானத்தின்படி நடக்க நிர்வாக சபை மெம்பர்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். சட்ட சபையினரால் அங்கீகாரமாகி நிர்வாக சபையிலுள்ள கவர்னரால் நிராகரிக்கப்பட்டுப்போன ஒரு தீர்மானமானது ஒரு வருஷ காலத்திற்குக் குறையாத ஒரு காலத்திற்குப் பின் மறுபடியும் சட்ட சபையின் முன்னிலையில் ஆலோசனைக்கு வந்து அங்கீகாரமாகுமாயின், அத்தீர்மானத்தில் கண்ட வண்ணம் நடவடிக்கைகள் நடத்தப்படவேண்டும்.

(1) பொதுநல முக்கியத்தையனுசரித்த அவசரமான ஒரு விஷயத்தைக் குறித்துச் சட்டசபையில் உடனே விவாதம் செய்ய வேண்டுமாயின், மற்றவிஷயங்களின் ஆலோசனையை நிறுத்திக்கொண்டு மேற்படி அவசரமான விஷயத்தை ஆலோசிக்க வேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டுவரப்படலாம். அவ்விதம் பிரேரணை கொண்டு வருவதற்கு சட்ட சபையில் ஆஜராயுள்ள மெம்பர்களிலே எட்டில் ஒரு பங்கு பெயராவது ஆதரிக்க வேண்டும்.



(8) சட்டசபை மெம்பர்களிலே எட்டில் ஒரு பங்குபோராவது கேட்டுக் கொண்டால், பிரத்தியேகமாக சட்ட சபை மீட்டிங் கூட்டப்படலாம்.

(9) பணத்தைப்பற்றியல்லாத இதர ஒரு மசோதாவானது சட்ட சபையின் விதிகளையனுசரித்து சபையின் முன் ஆலோசனைக்குக் கொண்டுவரப் படலாம். அம்மசோதாவை ஆலோசனைக்குக் கொண்டு வருவதற்கு கவர்ன்மெண்டின் சம்மதி வேண்டுமென்றிருக்கக் கூடாது.

(10) மாகாண சட்ட சபைகளால் அங்கீகாரமான எல்லா மசோதாக்களும் சட்டமாக ஏற்படுவதற்கு முன் கவர்னரின் சம்மதியைப் பெறவேண்டும். ஆனால் அவைகளோ கவர்னர் ஜெனரலால் நிராகரிக்கப்படலாம்.

(11) சட்ட சபைகளின் மெம்பர்கள் ஐந்து வருஷகாலம் வரையில் சபையிலே ஸ்தானம் வகிக்க வேண்டும்.

## II மாகாண கவர்ன்மெண்டுகள்.

(1) மாகாண கவர்ன்மெண்டின் தலைவரே கவர்னராக இருக்கவேண்டும். இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்ற ஊழியத்தையாவது இதர சாசுவதமான ஊழியங்களையாவது அவர் சேர்ந்தவராக இருக்கக் கூடாது.

(2) ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிர்வாக சபையொன்று இருத்தல் வேண்டும்; கவர்னரையும் கொண்ட அச்சபையானது மாகாணத்தின் நிர்வாகத்தை நடத்துவதாக இருக்க வேண்டும்.

(3) இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்ற ஊழியத்தைச் சேர்ந்த மெம்பர்கள் சாதாரணமாக அந்த நிர்வாக சபைக்கு மெம்பர்களாக நியமிக்கப்படக்கூடாது.

(4) நிர்வாக சபைகளிலுள்ள மெம்பர்களிலே குறைந்தது சரிபாதிப் பேராவது இந்தியராக இருக்க வேண்டும்.

அந்த இந்தியர் மாகாண சட்ட சபைகளின் ஜனப் பிரதிநிதிகளால் (அதாவது தேர்ந்தெடுக்கப் பட்டவர்களால்) தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

5 நிர்வாக சபைகளின் மெம்பர்கள் ஐந்து வருஷ காலம் சபையில் ஸ்தானம் வகிக்கவேண்டும்.

## III. ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை.

1. ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையிலே 150 மெம்பர்கள் இருக்கவேண்டும்.

2. அந்த 150 பேரிலே ஐந்தில் நாலு பங்குபேர் தேர்ந்தெடுக்கப் படுபவர்களாக இருக்கவேண்டும்.

3. ராஜப்பிரதிநிதியின் சட்ட சபைக்கு மெம்பர்களைத் தேர்ந்தெடுத் தனுப்பக்கூடிய ஓட்டர்களின் தொகையை தற்பொழுதுள்ள நியதிப்படி கூடுமானவரையில் விரிவாக அமைக்கவேண்டும். மாகாண சட்ட சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபை ஸ்தானத்தை அபேட்சித்து நிற்பவர்களுக்கு ஓட்கொடுக்கும் பாத்திய முடையவர்களாக இருக்கவேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்படும் இந்திய மெம்பர்களிலே மூன்றில் ஒரு பங்கு பேர் முகம்மதியராக இருக்கவேண்டும்; அவர்கள் பற்பல மாகாணங்களிலுமுள்ள முகம்மதிய ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் இவ்வளவு முகம்மதியப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்ற விகிதமானது அந்தந்த மாகாண சட்ட சபைகளிலுள்ள முகம்மதியப் பிரதிநிதிகளின் விகிதத்தைக் கூடுமானவரையில் அனுசரித்திருக்கவேண்டும்.

ஹிந்துக்கள், முகம்மதியர் ஆகிய இரு வகுப்பினரிலே எந்த வகுப்பினருக்கேனும் பலா பலன்களைத் தரக்கூடிய ஒரு மசோதாவையாவது தீர்மானத்தையாவது அவ்விருவகைப் பிரதிநிதிகளில் உத்தியோகப்பற்றில்லாத எவரேனும் சபையின்முன் ஆலோசனைக்குக் கொண்டுவரும்பொழுது, அதைக் குறித்து ஏதேனும் ஒருவகுப்புப் பிரதிநிதிகளில்முக்கால்பங்கு பேர் ஆட்சேபிப்பார்களாயின், அத்தகையமசோதாவையும் தீர்மானத்தையும்நிறுத்திக்கொள்ளவேண்டும். மேலும்,முகம்மதிய



ரல்லாத இதர சமூகஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய இதர எலக்ஷன்களில் முகம்மதியர்கள் தலையிடக்கூடாது. ஆனால் நிலச்சுவான்தார்கள், யூனிவர்ஸிடிகள் ஆகிய இந்த சமூகங்களின் பிரதிநிதி ஸ்தானங்களுக்கு ஓட்கொடுக்க முகம்மதியருக்குப் பாத்தியமில்லை யென்பதில்லை.

5. சட்ட சபையின் பிரஸிடெண்ட் அதாவது தலைவரோ சபையினரால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

6. சட்ட சபையிலே ஒரு விஷயத்தைக் குறித்து ஒரு கேள்வி கேட்டபின் அதை யனுசரித்து உபகேள்விகள் கேட்கும் உரிமையானது ஆதிகேள்வியைக் கேட்டவர்களுக்கே உண்டென்றில்லாமல், எந்த மெம்பரும் உபகேள்வி கேட்கும்படியான உரிமை பெற்றிருக்கவேண்டும்.

(7) சட்ட சபையின் மெம்பர்களிலே 8-ல் ஒரு பங்கு பேர் கேட்டுக்கொண்டால், சட்ட சபை பிரத்தியேகமாக கூட்டப்படலாம்.

(8) பண சம்பந்தமில்லாத வேறு எந்த மசோதாவும் சட்டசபையின் முன் ஆலோசனைக்குக் கொண்டுவரப்படலாம். அவ்விதம் ஆலோசனைக்குக் கொண்டு வருவதற்கு நிர்வாக கவர்ன்மெண்டின் சம்மதி வேண்டுமென்றிருக்கக் கூடாது.

(9) சட்ட சபையில் அங்கீகாரமான எல்லா மசோதாக்களும் சட்டமாக ஏற்படு முன்பே கவர்னர் ஜெனரலின் அனுமதியைப் பெறவேண்டும்.

(10) வருமானம், செலவு ஆகிய இவைகளைப்பற்றிய திரவிய விஷயமான எல்லாத் தீர்மானங்களும் மசோதா ரூபமாக சபையின்முன் கொண்டு வரப்படவேண்டும். அத்தகைய ஒவ்வொரு மசோதாவும், வரவு செலவு மதிப்புத் திட்டமும் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினுடைய அங்கீகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(11) சட்ட சபையின் மெம்பர்கள் ஐந்து வருஷகாலம் ஸ்தானம் வகிக்க வேண்டும்.

(12) கீழே காணப்படும் விஷயங்கள் யாவும் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினுடைய அதிகாரத்துக்கே உட்பட்டிருக்க வேண்டும்.

(a) இந்தியா முழுவதற்கும் ஒரேவிதமான சட்டம் செய்யப்பட வேண்டிய விஷயங்கள்.

(b) ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் வியாபார வரி சம்பந்தமான சாதக பாதகங்களை யனுசரித்துச் செய்யப்படவேண்டிய மாகாண சட்டவிதிகள்.

(c) இந்திய சமஸ்தானங்களால் கட்டப்படும் கப்பத்தைத் தவிர இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சொந்தமான வருமானத்தைப் பற்றிய பிரசினைகள்.

(d) இந்தியா கவர்ன்மெண்டுக்கே உட்பட்ட செலவினங்களைப்பற்றிய பிரசினைகள்.

ஆனால், தேசத்தின் பாதுகாப்புக்கான ராணுவ அம்சச் செலவுகளைப்பற்றி ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையில் தீர்மானம் செய்யப்படின், அது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலைக் கட்டுப்படுத்தாது.

(e) இந்தியாவின் வியாபார வரிகள், ஏற்றுமதி இறக்குமதி வரிகள் ஆகிய இவைகளைத் திருத்தியமைக்கும் உரிமை;

எந்த வரியையேனும் ஸெஸ் எனப்படும் வரியையேனும் விதிக்கவோ, மாற்றவோ, எடுத்துவிடவோ உள்ள உரிமை;

தற்சமயமுள்ள நாணயச் செலாவணி, லேவாதேவி ஆகிய இவைகளின் முறைமைகளைத் திருத்தி யமைக்கும் உரிமை;

தேசத்தின் எந்த விதமான பூர்வீகத் தொழிலுக்காயினும் வேறு எவ்விதமான தொழிலுக்காயினும், அல்லது தகுந்த எல்லாத் தொழில்களுக்குமாயினும் ஏதேனும் பணவுதவி செய்யும் உரிமை.

(f) பொதுவாக தேச நிர்வாகத்தைப்பற்றிய எல்லா விஷயங்களையுங் குறித்த தீர்மானங்கள்.

(g) சட்ட சபையினால் அங்கீகாரமான ஒரு தீர்மானமா



னது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலால் நிராகரிக்கப்பட்டுப்போனாலொழிய நிர்வாக கவர்ன்மெண்டானது அத்தீர்மானத்தின்படி நடக்கக்கட்டுப்பட்டிருக்கவேண்டும். ஆனால், சுமார் ஒரு வருஷகாலத்திற்குக் குறையாத ஒரு காலத்திற்குப் பின் மறுபடியும் அத்தீர்மானத்தைச் சட்ட சபையினர் அங்கீகரிப்பார்களாயின், அத்தீர்மானத்தின் வண்ணம் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும்.

(h) இதர விஷயங்களின் விவாதத்தை நிறுத்திக்கொண்டுபொதுநல முக்கியத்தையொட்டி அவசரமான விஷயமொன்றை ஆலோசனைக்குக் கொண்டுவர வேண்டுமென்று சட்டசபையின் மெம்பர்களிலே எட்டில் ஒருபங்குபேர் விரும்புவார்களாயின், அவ்விதமே பிரேரணை கொண்டு வரப்படலாம்.

**13.** மாகாண சட்ட சபையினராலோ ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினராலோ அங்கீகாரமான மசோதாவொன்றை அவ்விதம் அங்கீகாரமான காலத்திலிருந்து ஒரு வருஷகாலத்திற்குள் அரசர் நிராகரித்து விடலாம். அவ்விதம் மசோதா நிராகரிக்கப்பட்டு விட்டதென்று சட்ட சபைக்குத் தெரிந்த தேதியிலிருந்து தான், அம்மசோதாவானது அனுஷ்டானத்திலிருந்து ரத்தாகும்.

**14.** யுத்தம் தொடங்குதல், சமாதானம் செய்துகொள்ளல், உடன் படிக்கை செய்துகொள்ளல், ஆகிய இவைகள் உள்பட, இந்தியா கவர்ன்மெண்டாரின் ராணுவ காரியங்களிலும், இராஜீய விஷயமாய் அன்னிய தேசங்களின் சம்பந்தமான காரியங்களிலும் தலையிட ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினருக்கு அதிகாரம் இருக்கக்கூடாது.

## IV. இந்தியா கவர்ன்மெண்டு.

**1.** இந்தியாவின் கவர்னர் ஜெனரலாய் இருப்பவரே இந்தியா கவர்ன்மெண்டின் தலைவராக இருப்பார்.

**2.** அவருக்கு உதவியாக நிர்வாக சபையொன்று இருக்கும். அச்சபையின் மெம்பர்களிலே சரி பாதிபேர் இந்தியராக இருக்கவேண்டும்.

3. அந்த இந்திய மெம்பர்கள் ராஜப்பிரதிநிதியின் சட்டசபையிலுள்ள பிரதிநிதிகளால் அதாவது தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்களால், தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்ற ஊழியத்தைச் சேர்ந்தவர்கள் சாதாரணமாக நிர்வாகசபையில் மெம்பர்களாக நியமிக்கப்படக்கூடாது.

இம்பீரியல் ஸிவில் ஸர்விஸ் என்ற ஊழியங்களுக்கான உத்தியோகஸ்தர்களை யெல்லாம் நியமிக்கும் அதிகாரமானது இந்தியா கவர்ன்மெண்டுக்கு இருக்கவேண்டும். அவ்விஷயமாய் ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையினரால் செய்யப்படும் சட்டங்களையும் தற்சமயமுள்ள நன்மைகளையும்அனுசரித்தே நியமனங்கள் செய்யப்படவேண்டும்.

6. மாகாணங்களின் உள்நாட்டுக் காரியங்களிலே சாதாரணமாக இந்தியா கவர்ன்மெண்டார் தலையிடக்கூடாது. பிரத்தியேகமாக மாகாண கவர்ன்மெண்டுக்கு உண்டென்று திட்டமாக்கப்படாத அதிகாரங்களெல்லாம் இந்தியா கவர்ன்மெண்டுக்குத்தான் உண்டென்று வைத்துக் கொள்ள வேண்டும். பொதுவாக மேற்பார்வை பார்ப்பதும், மேல் விசாரணை செய்வதுமே மாகாண கவர்ன்மெண்டுகளின் காரியங்களில் இந்தியா கவர்ன்மெண்டுக்குள்ள அதிகாரமாகும்.

(7) சட்டங்களைச் செய்வதிலும் நிர்வாகத்தை நடத்துவதிலும், கூடுமானவரையில் இந்தியா கவர்ன்மெண்டானது இந்தியா மந்திரிக்கு உட்பட்டிராமல் சுயேச்சையாக இருக்க வேண்டும்.

(8) இந்தியா கவர்ன்மெண்டின் கணக்கு வழக்குகளைப் பரிசோதனை செய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் அதிகாரத்துக்கு உட்பட்டிராத சிலரைக்கொண்டு செய்விக்கும்படியான முறையை ஏற்படுத்த வேண்டும்.



## V இந்தியா மந்திரியின் சபை.

(1) இந்தியா மந்திரியின் சபையை எடுத்துவிட வேணடும்.

(2) இந்தியா மந்திரியின் சம்பளமானது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டும்.

(3) குடியேற்ற நாடுகளுக்கும் குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் எவ்விதமான சம்பந்த முள்ளதோ அதேவிதமான சம்பந்தந்தான் கூடுமானவரையில் இந்தியா கவர்ன்மெண்டின் விஷயமாய் இந்தியா மந்திரிக்கு இருக்கவேண்டும்.

(4) இந்தியா மந்திரிக்கு உதவியாக சாசுவதமாய் இரண்டு உதவி மந்திரிகள் இருக்கவேண்டும். அந்த இருவரில் ஒருவர் எப்பொழுதும் இந்தியராகவே இருக்கவேண்டும்.

## VI. இதர விஷயங்கள்.

1. கடற்படையிலும் ராணுவத்திலும் உயர்தரப் பதவிகளெல்லாம் இந்தியருக்குக் கிடைக்கும்படியான ஏற்பாடு வேண்டும். அதற்கு இந்தியர்களைப் பொறுக்கியெடுத்தல், பழக்குதல், போதனை கொடுத்தல் ஆகிய இவைகளுக்காக இந்தியாவிலே தக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

2. வாலண்டியர்களாகச் சேர இந்தியருக்கு உரிமை கிடைக்க வேண்டும்.

3. ஏகாதிபத்தியமெங்கும் ராஜசக்கரவர்த்தியின் பிரஜைகளுக்குள்ள அந்தஸ்து உரிமை ஆகிய இவைகளில் இந்தியருக்குச் சரிசமான அந்தஸ்தும் உரிமைகளும் இருக்குமாறு செய்யவேண்டும்.

4. இந்தியாவிலுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கு நீதிபரிபாலன அதிகாரம் எதுவுமிருக்கக்கூடாது. ஒவ்வொரு மாகாணத்திலு முள்ள நீதி பரிபாலன இலாகாவிலுள்ளவர்கள் அந்த மாகாணத்திலுள்ள ஹைகோர்ட்டாருக்கே சகல விதத்திலும் உட்பட்டிருக்கவேண்டும்.

# இந்தியாவுக்குத் தேவையான சீர் திருத்தங்கள்.

**யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப்பற்றி ராஜப்பிரதிநிதியின் சட்டசபை மெம்பர்களிலே ஜனப்பிரதிகளாயுள்ளவர்களில் அடியில் கண்டவர்கள் கையெழுத்துச்செய்து 1916-ம் வருஷம் அக்டோபர் மாதத்திலே ராஜப்பிரதிநிதிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் விஞ்ஞாபனம் பின் வருமாறு:—**

நாகரீக தேசங்களிலெல்லாம் கவர்ன்மெண்டுகளின் லட்சியங்கள் யுத்தம் முடியுங்காலத்தில் திருத்தமடையுமென்பது நிச்சயம். அபலைகளாகிய சிறுதேசங்களின் சுதந்திரங்கள் பாழாக்கப்படாமல் தடுக்கப்படும்பொருட்டு மகா யுத்தத்தில் இறங்கி, தன்னுடைய திரவியத்தையும் பிரஜைகளின் ரத்தத்தையும் வாரியிறைத்துக் கொண்டிருக்கிற பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் லட்சியங்கள் மிகத் திருத்தமடையும். இந்த யுத்தத்தில் தனக்குரித்தான பொறுப்பை வகித்து அதை நிறைவேற்றி வந்திருக்கிற இந்தியாவானது புதிதாய்த்தோன்றியிருக்கும் உணர்ச்சியினால் மாறுதல் அடையாமல் இருக்காது. இந்தியாவை ஆளும் விஷயமான பிரசினைகள் யுத்தத்திற்குப் பிறகு விசாலமான லட்சியத்துடன் கவனிக்கப்படுமென்று இத்தேச ஜனங்கள் நம்பும்படியான ஆசை வார்த்தைகள் சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. இந்தியாவின் போக போக்கிய சாதனங்களையும் ராஜீய நோக்கத்தையும் விருத்தி செய்திருப்பதற்காக இத்தேச ஜனங்கள் இங்கிலாந்தினிடத்தில் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

1833-ம் வருஷத்தில் பார்லிமெண்டு செய்த சார்டர் ஆக்ட் (சன்னது சட்டம்) முதல் 1909 ம் வருஷம் வரையில் இத்தேசத்தை ஆண்டு வந்த அதிகாரி வர்க்கத்திலே இந்தியா



அதிகமாக சம்பந்தப்பட இடமில்லாதிருந்ததோடு, அந்த அதிகாரி வர்க்கமானது ஜனங்களுக்கு ஜவாப்தாரி யல்லாமலுமிருந்து வந்தது. ஆனால் காரியங்களை நடத்திவைக்கும் வேலையைச் செய்கிறவர்களில் இந்தியருக்கும் இடம் கொடுத்தது 1909-ம் வருஷத்திய சட்டம். அப்படி ஏற்பட்ட இடம் சொல்பந்தான். ஆயினும் கவர்ன்மெண்டின் அந்தரங்க ஆலோசனைகளில் இந்தியரையும் சேர்த்துக் கொள்ள கவர்ன்மெண்டுக்கு இஷ்டமிருப்பதாக அந்தத் திருத்தத்திலிருந்து வெளிப்பட்டதென்று இந்தியர் அதைப் பாவித்து, அத்திருத்தத்தை ஏற்றுக்கொண்டனர். சட்ட சபைகளில் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களின் தொகை அதிகப்பட்டு வாதம் செய்யவும் கேள்விகேட்கவும் அதிக வசதியுமேற்படுத்தப்பட்டது. ஆனால் ராஜப்பிரதிநிதியின்சட்டசபையில் மாத்திரம் உத்தியோகஸ்தர்களாகிய மெம்பர்கள் உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்களைவிட அதிகமாகவே ஏற்பட்டனர்; மாகாண சட்ட சபைகளிலும் உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்களின் தொகை அதிகமா யிருந்தபோதிலும், நியமனம் செய்யப்பட்டவர்களும் ஐரோப்பியர்களின் சபைப்பிரதிநிதிகளும் அவர்களில் அடங்கியிருக்கின்றனர். சட்டம் செய்தல், வரி விதித்தல் முதலிய விஷயங்களில் ஐரோப்பியர்கள் கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்தை ஆதரிப்பது ஸகஜம்; கவர்ன்மெண்டினால் நியமனம் செய்யப்பட்டவர்களும் அப்படியே செய்வது ஸகஜம்.

இப்படி அநேக சமயங்களில் நடந்திருப்பதற்கு அனுபோகமிருக்கிறது. ஆகையினால் மாகாண சட்ட சபைகளில் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களின் தொகை அதிகமாயிருந்தும், அதனால் ஜனங்களுடைய கட்சிக்கு பலமேற்படவே இல்லை. இப்பொழுதுள்ள அமைப்பின்படி ராஜப் பிரதிநிதியின் சட்டசபையும் மாகாண சட்ட சபைகளும் யோசனை சொல்லும் சபைகளா யிருக்கின்றனவே யல்லாமல், இந்தியா கவர்ன்மெண்டையோ மாகாண கவர்ன்மெண்டுகளையோ அடக்கிக் கொண்டுபோக அவைகளுக்குச் சிறிதும்

அதிகாரமில்லை. தேசத்தை ஆளும் விஷயத்தில் ஜனங்களுக்காவது அவர்களுடைய பிரதிநிதிகளுக்காவது முன்போலவே இப்பொழுதும் சம்பந்தமில்லை. சட்ட சபைகளின் அமைப்பையும் நிர்வாக சபைகளின் அமைப்பையும் திருத்தி 1909-ம் வருஷத்தில் சட்டம் செய்தபொழுது, சட்ட சபைகள் வீண் சபைகளென்றாவது, உத்தியோக வர்க்கத்தார் ஆட்டிவைக்கும்படி ஆடும் சபைகளென்றாவது, இந்தியர் நினைக்காதிருக்கும்படி செய்யவேண்டுமென்று பார்லிமெண்டில் முதன் மந்திரி சொன்னதுபோல், அனுஷ்டானத்தில் அச்சபைகள் அதிகாரமுள்ளவைகளாக இருந்துவரவில்லை. நிர்வாக சபையில் இந்தியர் ஒருவர் ஸ்தானம் பெற்றதே பிரஸ்தாப திருத்தங்களினால் நேர்ந்த விசேஷம்; அவரை நியமனம் செய்யும் அதிகாரமும் கவர்ன்மெண்டின் கையில் இருக்கிறதே யல்லாமல் இந்தியருக்கில்லை. நிர்வாகசபைகளின் அமைப்பிலும் சட்ட சபைகளின் அமைப்பிலும் இருக்கிற குறைகள் தவிர, ஜனங்களுக்கு வேறு பல குறைகளும் இருக்கின்றன.

அக்குறைகளிருக்கும் காரணத்தால் ஜனங்களுக்குள் இருக்கும் சக்தி உபயோகிக்கப்படாமல் போகிறதல்லாமல், வீணாயும்விடுகிறது. அவர்களுடைய சுய மதிப்புக்கும் பங்கமாயிருக்கிறது. ஐரோப்பியர்களையும் ஆங்கிலோ இந்தியர்களையும் பாதிக்காமல் இந்தியர்களை மாத்திரம் பாதிக்கிற ஆயுதச் சட்டமும், வாலண்டியர் படைகளில் சேரக்கூடாமல் அவர்களுக்கேற்பட்டிருக்கிற தடையும், சேனையில் உத்தியோகப்பதவிகளைப்பெறக்கூடாமல் அவர்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதும் அவர்களுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணுகின்றன. இக்குறைகளேயல்லாமல், ஆயுதங்கள் வைத்துக்கொள்வதையும் அவைகளை உபயோகப்படுத்துவதையும்பற்றி ஏற்பட்டிருக்கிற தடைகள் ஜனங்களுடைய பலத்தைக் குறைத்து, அவர்களை அபாயங்களுக்கு உள்ளாக்கி விட்டிருக்கின்றன. இப்பொழுது இந்தியர்களிருக்கும் நிலைமை யென்னவென்றால், தேசத்தின் ஆட்சியை நடத்திவைக்கும் காரியத்தில் அவர்களுக்கு உண்மையான பங்கில்லாமலிருப்பதுடன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்



தைச் சேர்ந்த மற்ற நாடுகளிலுள்ள பிரஜைகளுக்கில்லாத குறைகள் அவர்களுக்கேற்பட்டு, அவர்கள் செயலற்றவர்களாயிருக்கிறார்கள். ஒப்பந்தக் கூலிகள் இந்தியாவிலிருந்து போய்க்கொண்டிருப்பதால், எல்லா இந்தியர்களுமே ஒப்பந்தக் கூலிகளுக்குச் சமானமான அந்தஸ்துள்ளவர்களே யென்று குடியேற்ற நாட்டார் நினைக்கும்படி யிருக்கிறது. மற்ற தேசப்பிரஜைகளைப்போல் தாங்களும் சமமான சுதந்திரமுள்ள பிரஜைகளேயாயினும், கீழ்த்தரமான பதவியிலேயே தாங்கள் இருந்துவருகிறதாக இந்தியர் நினைக்கும்படியே இப்பொழுதுள்ள நிலைமையிருக்கிறது. ஆசியாக் கண்ட வாசிகளாகிய இதர ஜாதியார் கூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியருக்குள்ள நிலைமையைப்பற்றி இதே மாதிரிதான் அலட்சியமாக நினைக்கிறார்கள். எல்லா இந்தியர்களுக்கும் மானக்குறைவா யிருக்கிற இந்த நிலைமையானது இந்திய வாலிபர்களால் சகிக்கக்கூடாததா யிருக்கின்றது; அன்னிய தேசங்களுக்கு அவர்கள்போய், சுயேச்சையுடனிருக்கிற ஜாதியார்களுடன் பழகி, மனோ விசாலமுடைந்திருக்கிறதால், [மற்றவர்களைவிட அவர்களுக்கு மேற்சொன்ன நிலைமை சகிக்கக்கூடாததாகிறது. இப்படியெல்லாம் குறைகளிருந்தும், மற்றவர்களுக்குச் சமமாக அவர்கள் நடத்தப்படுவார்கள் என்று நமது பிரிட்டிஷ் மன்னர்களும் பெரிய ராஜதந்திரிகளும் அடிக்கடி உறுதி கூறிவந்திருப்பதால் ஜனங்கள் நம்பிக்கையுடன் இருந்திருக்கிறார்கள். இப்பொழுது நடந்துவரும் யுத்த மத்தியில் தங்களுக்கும் கவர்ன்மெண்டுக்குமுள்ள தகராறுகளையெல்லாம் இந்தியர் ஒதுக்கிவைத்து விட்டு, கவர்ன்மெண்டுக்கு வேண்டிய உதவிகளை விசுவாசத்துடன் செய்து வருகிறார்கள். பணத்துக்காகச் சண்டைபோடும் துருப்புகளைப் போலல்லாமல், ஆபத்து சமயத்தில் இங்கிலாந்துக்கு உதவி செய்யவேண்டியே போர்க்களத்துக்குப்போக இந்தியர் ஆசைப்பட்டனர். இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் துருப்புகளையும் இந்தியத் துருப்புகளையும் அநேகமாய் வெளியே அனுப்பி விட்டும், இந்தியா அமைதியாகவே இருந்தது.

யுத்தத்தில் இந்தியருக்குள்ள சம்பந்தத்தைப்பற்றி முதன்

மந்திரி பேசினபொழுது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிரத்தையை மற்றவர்களைப்போல் இந்தியரும் பாதுகாப்பவர் என்று சொன்னார். தாங்கள் செய்துவரும் உபகாரத்திற்காக இந்தியர் வெகுமதி கேட்கவில்லை; ஆனால் தங்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தாழ்வான நிலைமை தங்களிடத்தில் இங்கிலாந்துக்குள்ள சந்தேகத்தால் ஏற்பட்டுள்ளதென்று இந்தியர் நினைத்து வந்திருப்பதால், இனி அந்தச் சந்தேகம் ஒழிந்துபோய் விடவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆகையால் தாழ்ந்த நிலைமை இனித் தனக்குக் கூடாதென்றும் கூட்டாளித்தனமே கிடைக்கவேண்டுமென்றும் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகிறது. திறமையாக தேசம் ஆளப்படுவது மாத்திரம் போதாது. ஜனங்களுக்கு ஜவாப்தாரியான கவர்ன்மெண்டினால் ஆட்சி நடத்தப்படவும் வேண்டும். யுத்தம் முடிந்தபிறகும், இந்தியாவின் நிலைமை முன்போலவே இருக்குமாகில், பெரிய ஏமாற்றமும் அதிருப்தியும் உண்டாகும். எல்லோருக்கும் பொதுவாக ஏற்பட்ட ஆபத்தைஎல்லோரும் சேர்ந்து தவிர்த்துக்கொள்வதால் உண்டாகும் நல்ல மனோபாவம் போய்விடும். இவ்விஷயத்தை கவர்ன்மெண்டும் உணர்ந்து, ஆளுகை முறையில் திருத்தஞ் செய்ய உத்தேசித்திருப்பதாக நாங்கள் நிச்சயமாய் நம்புகிறோம். திருத்தங்கள் எந்தவழிகளை அனுசரித்துச் செய்யப்பட வேண்டுமென்று எங்களுக்குத் தோன்றும் யோசனைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறோம். திருத்தமானது ஆணிவேரில் ஏற்படவேண்டும். தேசத்தை ஆளும்விஷயத்தில்ஜனங்களுக்குச்சரியானசம்பந்தம் உண்டாகவேண்டும். ஆயுதந்தரித்தல், ராணுவ உத்தியோகம் முதலிய விஷயங்களில் அவர்களுக்குள்ள குறைகள் ஒழியவேண்டும். ஆளுகையை நடத்தும் விஷயத்தில் ஜனங்களுக்கு சம்பந்தமேற்படவேண்டுமென்ற விஷயமாய் ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையிலும் அடியிற்கண்ட திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.



(1) நிர்வாக சபைகளில் பாதி மெம்பர்கள்இந்தியர்களாயிருக்கவேண்டும்; நிர்வாகசபைகளில் இடம்பெறும் ஐரோப்பியர்கள் இங்கிலாந்தில் ராஜீயஅனுபோகம் பெற்றவர்களாயிருந்தால், அவர்கள்விசாலமான நோக்கமுடையவர்களாயிருப்பார்கள்; அதனால் இத்தேசம் நன்மையடையும்; ஆகையால் அவர்கள் இங்கிலாந்தில் அனுபோகம் பெற்றவர்களாகவே இருக்கவேண்டும். நிர்வாக சபை மெம்பர்கள் தாங்களே நிர்வாக அனுபோகம் அடைந்தவர்களாயிருக்கவேண்டியது அவசியமில்லை; ஏனென்றால், சாசுவதமான உத்தியோகஸ்தர்களின் உதவி அவர்களுக்கு இருக்கிறது; பிரிட்டிஷ் மந்திரிகள் தாங்கள் நிர்வாக அனுபோகம் வாய்ந்தவர்களல்லராயினும், சாசுவத உத்தியோகஸ்தர்களின் உதவியைக் கொண்டே ஆளுகையை நடத்துகிறார்கள். நிர்வாக சபை மெம்பர்களாக ஸ்தானம் வகித்து ஒவ்வொரு இலாக்காவை நடத்தக் கூடியவர்களாக அநேகம் இந்தியர்கள் எப்பொழுதும் கிடைக்கக்கூடும். ஸர்ஸின்ஹா, ஸர் ஸயத் அலி இமாம், காலஞ்சென்ற மிஸ்டர் கிருஷ்ணசாமி ஐயர், ஸர் ஷம்ஸுல் ஹுடா, ஸர் சங்கரன் நாயர் ஆகிய இவர்கள் தங்களுக்கேற்பட்ட வேலையைச் செய்ய வெகு திறமையுள்ளவர்கள் என்பது சொல்பகால அனுபோகத்தில் தெரிந்திருக்கிறது. சுதேச சமஸ்தானங்களில் இந்தியர் தங்களுடைய யோக்கியதையை வெளிப்படுத்த சமயம் கிடைக்கிறது. சுதேச சமஸ்தானங்களில் இப்பொழுதுகீர்த்திபெற்றிருக்கிறவர்களைத் தவிர, ஸர் ஸலர் ஜங், ஸர் T மாதவராவ், ஸர் சேஷாத்திரி ஐயர், திவான்பகதூர் ரகுநாதராவ் முதலியவர்கள் வெகுகீர்த்தியடைந்தார்கள். ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையில் மூவர் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டுமென்று இருக்கிற விதியையும், அதேமாதிரி மாகாண நிர்வாக சபைகளின் அமைப்பைப்பற்றி இருக்கிற விதிகளையும், ரத்துசெய்துவிட வேண்டும். நிர்வாக சபை மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சட்ட சபையிலுள்ள ஜனப்பிரதிநிதி மெம்பர்களுக்கு வாக்கு சுவாதீனம் வேண்டும்.

(2) இந்தியாவிலுள்ள எல்லா சட்ட சபைகளிலும் ஜனப் பிரதிநிதி மெம்பர்களின் தொகை இதர மெம்பர்களின் தொகையை விடப் போதுமான வரையில் அதிகமாயிருக்க வேண்டும். விவசாயிகள் முதலிய தேச ஜனங்களிடத்தில் அவர்கள் நெருக்கமான பழக்கமுள்ளவர்களாகையால், ஜனங்களின் நன்மையைப் பாதுகாப்பார்களென்பது எங்களுக்கு நிச்சயம். ஐரோப்பிய மெம்பர்கள் எவ்வளவு அநுதாபமுள்ளவர்களாயிருந்தாலும், இந்தியரைப்போல் ஜனங்களிடத்தில் அவ்வளவு நெருக்கமாகப் பழகக் கூடாதவர்கள். படித்த இந்தியர் ஜனங்களுடைய நன்மையை எவ்வளவு நாடினவர்கள் என்பதும், ஜனங்களுடைய குறைகளையும் தேவைகளையும் எவ்வளவு அறிந்திருக்கிறார்களென்பதும், காங்கிரஸ் மகாசபை, முஸ்லிம்லீக்மகாசபை முதலிய மகாசபைகளின் நடவடிக்கைகளினால் விளங்குகின்றன. முகம்மதியர்களோ அல்லது ஹிந்துக்களோ எங்கே தொகையில் குறைந்தவர்களாயிருக்கிறார்களோ அங்கே அவர்களுடைய ஜனத்தொகை, நிலைமை முதலியவைகளுக்குத் தகுந்தாற்போல் அவர்களுக்குப் பாத்தியம் கொடுக்கவேண்டும்.

(3) ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையில் 150 மெம்பர்களுக்குக் குறைந்திருக்கக் கூடாது. பெரியமாகாண சட்ட சபைகளில் 100 மெம்பர்களுக்குக் குறைந்தும், சிறிய மாகாண சட்ட சபைகளில் 60 அல்லது 75 மெம்பர்களுக்குக் குறைந்தும் இருக்கக்கூடாது.

(4) பண சம்பந்தமான எல்லா விஷயங்களையும் இங்கிலாந்தின் அனுமதியை எதிர்பாராமல் இந்தியா தானே தீர்மானித்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

(5) யுத்தத்தைத் தொடங்கல், வியாபார சம்பந்தமில்லாத விஷயங்களைப்பற்றி சமாதானம் செய்து கொள்ளல்; முதலிய அன்னிய தேச சம்பந்தமான விஷயங்களைத் தவிர, வேறு எந்த விஷயத்தைப்பற்றியும் சட்டம் செய்யவோ தீர்மானம் செய்யவோ ராஜப்பிரதிநிதியின் சட்ட சபைக்கு அதிகாரம் வேண்டும்; மாகாண விஷயங்களைப் பற்றி சட்டம் செய்யவும் தீர்மானம் செய்யவும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அதிகாரம் வேண்டும்; கவர்ன்மெண்டின் பந்தோபஸ்தை உத்தேசித்து, சட்டங்களையோ தீர்மானங்களையோ ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கும் அதிகாரம் ராஜப்பிரதிநிதிக்கு இருக்கலாம்.



(6) இந்தியா மந்திரிக்கு ஏற்பட்டிருக்கும் சபையை எடுத்துவிடவேண்டும். குடியேற்றநாடுகளுக்கும் குடியேற்றநாட்டு மந்திரிக்குமுள்ளது போன்ற சம்பந்தம் இந்தியா மந்திரிக்கும் இந்தியாவுக்கும் ஏற்படவேண்டும் அவருக்கு உதவியாக இரண்டு மந்திரிகள் ஏற்படவேண்டும்; அவர்களில் ஒருவர் இந்தியராயிருக்கவேண்டும். அம்மூவருடைய சம்பளமும் பிரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

(7) ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த நாடுகளையெல்லாம் சம்பந்தப்படுத்தி ஏதேனும் ஏற்பாடுசெய்வதாயிருந்தால், குடியேற்ற நாட்டுப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கும் ஸ்தானத்துக்குச் சமமான ஸ்தானத்தை இந்தியாவின் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கவேண்டும்.

(8) 1911-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 25-ந்தேதி இந்தியா கவர்ன்மெண்டார் வெளியிட்ட பிரசுரத்தில் சொல்லியிருக்கிறபடி, மாகாண கவர்ன்மெண்டுகளுக்குச் சுய ஆட்சி கொடுக்க வேண்டும்.

(9) ஐக்கிய மாகாணத்துக்கும் இதர மாகாணங்களுக்கும் கவர்னர் இங்கிலாந்திலிருந்து வரவேண்டும்; அவருக்கு ஒரு நிர்வாக சபையும் வேண்டும்.

(10) ஸ்தல சுய ஆட்சிக்கு வேண்டிய அதிகாரங்கள் எல்லாம் உடனே கொடுக்கப்படவேண்டும்.

(11) ஐரோப்பியர் என்ன நிபந்தனைகளின்மேல் ஆயுதந் தரிக்க சுதந்திரம் கொடுக்கப்படுகிறார்களோ அதே சுதந்திரம் இந்தியருக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

(12) வாலண்டீர் படைகளிலும் தேசப் பாதுகாப்புக்காக இந்தியாவில் ஏற்படும் படைகளிலும் சேர இந்தியருக்கு அனுமதி கொடுக்கப்படவேண்டும்.

(13) ஐரோப்பியர்கள் என்ன நிலைமையில் ராணுவத்தில் உத்தியோகப் பதவிகளை அடைகிறார்களோ அதே நிலைமையில் இந்தியச் சிறுவர்களும் உத்தியோகப் பதவிகளை அடையவேண்டும்.

(ஒப்பம்) காலிம்பஜார் மணீந்தர சந்தர நந்தி, டி. இ. வாச்சா, பூபேந்திர நாதவஸு, விஷ்ணுதத்தா ஸுகல், மதன் மோகன் மாளவியா, கே. வி. ரங்கஸாமி ஐயங்கார், மஷருல் ஹக், வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, தேஜ்பகதூர் ஸப்ரு இப்ராஹிம் ரஹிமதுல்லா, பி. நரஸிம்மேசுவர சர்மா, மீர் அஸத் அலிகான், காமினிகுமார் சந்தா, கிருஷ்ணஸகாய், பஞ்சதேவ், தாதாராய், சீதா நாத் ராய், முகம்மது, அலி எம். ஏ. ஜின்னு.

---

## காங்கிரஸ் மஹாசபை.

---

### உபசரணைக் கமிட்டி சேர்மனுடைய வரவேற்புப் பிரசங்கம்.

***காங்கிரஸ் மஹாசபையின் உபசரணைக் கமிட்டி சேர்மனான கனம் பண்டித ஜகத் நாராயண செய்த பிரசங்கத்தின் ஸாராம்சம் என்னவென்றால்:—***

### சுய ஆட்சி

சுய ஆட்சிபெற்ற நாடாக இந்தியாவைச் செய்துவிடுவதே தனது கொள்கையின் லட்சியமென்றும், அந்த லட்சியத்திற்கு அடிப்படையாக யுத்தத்துக்குப் பின் தகுந்த அளவு சீர்திருத்தம் செய்து கொடுக்கப்படுமென்றும், இத்தேச ஜனங்களுக்கு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அறிவிக்கவேண்டும்.



இந்தியாவின் ஆட்சியானது ஜனப்பிரதிநிதிகளால நடத்தப்படுமென்பதைத் திட்டமாகக் காட்டவேண்டும். அதற்காக ஸிவில் காரியங்களின் நிர்வாக அதிகாரமனைத்தும் ஜனப்பிரதிநிதிகளுக்குக் கொடுபடவேண்டும். ஜனப்பிரதிநிதிகளின் தீர்மானத்துக்கு நிர்வாக அதிகாரிகள் கட்டுப்பட்டிருக்க வேண்டும். தங்களுடைய தேசத்தைப் பாதுகாக்கும்படி இந்தியருக்கு உரிமையில்லாதிருக்கிறது. இனிமேல் அப்படியிருக்கக் கூடாது. இந்தியரின் ராணுவத் தன்மை வளருவதற்கான ஒவ்வொரு சௌகரியமும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இந்தியரின் ஆண்மைத் தன்மையானது மெதுவாக க்ஷீணித்து வருகிறது. இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியினுலுள்ள மிகவும் துக்ககரமான பலன்களில் அது ஒன்ருகும். ஆகவே, அப்பாதகத்தைத் தீர்த்து வைப்பதற்கான வழிகளைக் கூடிய சீக்கிரத்தில் தேடவேண்டும். ஏகாதிபத்திய பாகங்களெல்லாம் நெருங்கிய ஒற்றுமையுடன் அமைக்கப்படும் எந்த ஏற்பாட்டிலும், குடியேற்ற நாடுகளுக்கு என்ன அந்தஸ்து உண்டோ அதே அந்தஸ்து இந்தியாவுக்கு அவசியம் கிடைக்கவேண்டும். யுத்தத்துக்குப்பின் சீர்திருத்தங்கள் வேண்டுமென்பதைப்பற்றி ராஜப்பிரதிநிதிக்கு நமது ஜனப்பிரதிநிதிகள் அனுப்பியுள்ள மகஜரிலே நமது கண்டிப்பான கோரிக்கைகள் முழுவதும்அடங்கியிருக்கவில்லை. என்றாலும் இந்தியாவுக்கு சுயஆட்சி வேண்டுமென்ற ஹோதாவிலேயே அம்மகஜர் இருக்கிறது. எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியாரும் எல்லா இந்திய முஸ்லிம் லீக் கமிட்டியாரும் தயாரித்துள்ள சீர் திருத்த யோசனைகளும் நமது கண்டிப்பான கோரிக்கைகளை யனுசரித்திருக்கின்றன. அந்த யோசனைகளைக் குறித்து நீங்கள் சீக்கிரத்தில் ஆலோசனை செய்யவேண்டும். அச்சீர் திருத்தங்களோ குடியேற்ற நாடுகளுக்குள்ள சுய ஆட்சி நேர்மைக்கு மிகவும் குறைவாகத்தானிருப்பதால், நெடுங்காலம் அச்சீர் திருத்தங்களின்படியே இந்தியாவின் ஆட்சிஇருப்பதாயின், அதைக் குறித்து இந்தியா திருப்தியடையாது. அச்சீர்திருத்தங்களைச் செய்துகொடுப்பதென்று சட்ட மேற்படும்பொழுது, ஒரு தலைமுறை காலத்

திற்குள் இந்தியாவுக்கு முழுவதும் பொறுப்புவாய்ந்த சுய ஆட்சி கொடுக்கப்படுமென்று அச்சட்டத்தில் ஷரத்து ஏற்பட வேண்டும்.

## ஆட்சேப சமாதானங்கள்.

இந்தியாவின் நன்மையைக் கவனிக்கும்பொழுது இந்தியாவின் ஆட்சியை இந்தியரிடம் ஒப்புவித்து விடலாமா? தன்னைத்தானே ஆண்டு கொள்ள இந்தியா தகுதியுள்ளதா? பொறுப்பு வாய்ந்த ஆட்சியையாவது ஜனப்பிரதிநிதிகளடங்கிய சபையையாவது நடத்தி நிர்வகிக்க இந்தியருக்கு அனுபவமுண்டா? இன்னாரைத்தான் தலைவர்களாகத் தேர்ந்தெடுப்பதென்று இந்தியர் உணர்ந்துகொள்ளுமாறு இந்தியருக்குள் அவ்வளவு கல்வியபிவிருத்தி யுண்டா? கேவலம் ஒரு வகுப்பினரின் நன்மையே பெரிதென்றெண்ணாமல், தேசீய நன்மையே விசேஷமாகுமென்று இந்தியர் மதிப்பார்களா? என்று பலர் கேட்கின்றனர். இதற்கு என்னால் கூடியவளவு பதிலுரைக்கப் பார்க்கின்றேன்.

ஓர் அரசன் தனது ஆட்சியின் கீழுள்ள ஜனங்களின் தவறுகளைப்பற்றிக் குறை கூறக்கூடாது. ஏனெனில் அத்தவறுகளுக்கு அந்த அரசனுடைய அசட்டையோ அல்லது அவனுடைய ராஜரீக மாதிரியோ காரணமாகுமென மேதாவியொருவர் முன்னம் சொல்லியிருக்கிறார். ஆகவே, சுய ஆட்சிக்கு நம்மைத் தகுதியற்றவரென்றும், ஆகவே, ஏகதேச ஆட்சியைத் தாங்களே நடத்த வேண்டுமென்றும், திட்டமாய்க் கூற இங்கிலாந்து விரும்புமாயின், அம்மேதாவி சொல்லிய வாசகத்தை இங்கிலாந்து கவனத்தில் வைக்க வேண்டும். இந்தியாவின் ஆட்சியிலே அதிக சுதந்திரங்கள் வேண்டுமென்று இந்தியர் கோரும்போது, அதற்கு ஆட்சேபம் ஏற்படுகிறதே? முன்னம் இங்கிலாந்து தேசமானது தன்னை மட்டுமன்றி உலகத்தின் நானாவித தேசங்களையும் ஆள முயன்ற காலத்தில், சுய ஆட்சிக்கு வேண்டிய யோக்கியதைகள் எல்லாம் கிரேட்பிரிட்டனுக்கு இருந்தனவோ? 19-வது



நூற்றாண்டின் ஆரம்பத்திலே இங்கிலாந்தின் ஜன சமூகத்தினர் அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர். அச்சமயம் அதன் ஆட்சியானது சிலருடைய கைக்குள் இருந்தது; அச்சமயம் அயர்லாந்து அமைதியுடனில்லை; மதவிரோதம் அழிந்துபோகவில்லை; தற்காலத்திலுள்ள சமூகசேவைக் கொள்கைகளோ அச்சமயம் அங்கிருந்த உயர் வகுப்பாரிடம் பெரிதும் பரவியிருக்கவில்லை.

## கானடா.

தனது உள்நாட்டு நிர்வாகத்தைத் தானே நடத்திக்கொள்ளும்படி 1840-ம் வருஷத்தில் கானடாவுக்கு உரிமை கிடைத்தது. அந்த உரிமை கிடைப்பதற்குச் சில வருஷங்களுக்கு முன் கானடாவில் இருந்த நிலைமை யென்ன? கானடாவின் ஒருபாகத்திலே ஆங்கிலேயர் வசித்திருந்தனர். மற்றப் பாகத்தின் பெரும் பாலார் பிரெஞ்சுக்காரர். இவ்விரு ஜாதியினருக்கும் மிக்க சச்சரவு உண்டாயிற்று. எனவே மாகாணங்களின் ஆட்சிக்கு மிக்க பாதகம் நேரிட்டது. அதில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தலையிடவே, பிரஞ்சு இராஜீயவாதிகளுள் கலகம் கிளம்பியது. அதனால் எவ்வளவோ சீர்கேடுகள் உண்டாயின. அக்கலகம் அடங்கியபின் 1838-ம் வருஷத்திலே மறுபடியும் ஒரு கலகம் கிளம்பியது. இப்படியெல்லாமிருக்க பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் என்ன செய்தனர்? ராஜவிசுவாசக்குறைவை அடக்குவதற்கு பலமான அடக்குமுறைகள் கையாளப்பட்டனவோ? இல்லை; ஆனால் அதிருப்திக்குக் காரணமாயிருந்ததை நீக்கிவிடத் தலைப்பட்டனர். அதாவது கானடாவின் ஆட்சியை அந்நாட்டினரே நடத்துவதென்று 1840-ம் வருஷத்தில் சட்டமேற்படுத்தினர். உடனே அதிருப்தியானது ஜாலவித்தையைப்போல் அங்கிருந்து அடங்கிவிட்டது. மேலே கண்டவாறெல்லாம் சீர்கேட்டுடனிருந்த கானடாவுக்குச் சுய ஆட்சி கிடைத்தபின் இன்றளவும் அங்கே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும் க்ஷேமலாப அபிவிருத்தியையும் கவனித்துப் பார்த்தால், அதேமாதிரி இந்தியாவுக்கும் சுதந்திரம் கொடுக்

கப்படுமாயின், அம்மாதிரியே இந்தியாவிலும் பலன் ஏற்படாதோ? பொறுப்புவாய்ந்த பதவிகளை இந்தியருக்குக் கொடுத்த பொழுதெல்லாம் அவர்கள் தங்களுடைய யோக்கியதையையும் தகுதியையும் வெளிக்காட்டி யிருக்கின்றனர்.

## ஆஸ்டிரேலியா.

தங்களுடைய தேசத்திலே சிறைச்சாலை தண்டனை யடைந்தவர்களை யனுப்பி விடுவதற்காக ஓர் நாடு பிரிட்டிஷாருக்கு வேண்டியிருந்தது. ஆகவே அக்குற்றவாளிகளை ஆதி காலத்தில் ஆஸ்டிரேலியாவுக்கு அனுப்பிவந்தனர். பொதுவாய்ப் பேசினால், சென்ற நூற்றாண்டின் மத்திய காலம் வரையில் ஆஸ்டிரேலியா நாடானது குற்றவாளிகளின் வாசஸ்தலமாயிருந்த தெனலாம். அப்பால் அங்கே குடியேறுவதற்காக மனிதர்கள் அனுப்பப்பட்டுவந்தனர். அங்கே மதுபானமும் துன்மார்க்கமும் பெரிதும் பரவியிருந்தன. **1835**-ம் வருஷம் வரையில் அந்நாட்டினரின் துன்மார்க்கததினால் மிக்க கவலையுண்டாயிற்று. **1848**-ம் வருஷம் வரையில் அங்கே கல்வியபிவிருத்தி எப்படி யிருந்ததோ தெரியவில்லை. ராஜாங்கத்தினால் ஒரு கல்வி ஸ்தாபனம்கூட நடத்தப்படவில்லை. ஆஸ்டிரேலியாவின் ஒரு மாகாணமாகிய "நியூஸௌத் வேல்ஸ்" என்னும் மாகாணத்திலே **1823**-ம் வருஷத்தில் ஜனப்பிரதிநிதிகளடங்கிய ராஜாங்கம் ஏற்பட்டது. அப்பால், **1842**-ம் வருஷத்திலே ராஜாங்கத்தில் ஜனப் பிரதிநிதிகள் அதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முடிவில் **1853**-ம்வருஷத்திலே பூராவான சுய ஆட்சி கொடுக்கப்பட்டது; பின்பு அந்நாட்டின் இதர மாகாணங்களுக்கும் சுய ஆட்சி கிடைக்கலாயிற்று. இப்படி யெல்லாமிருந்த ஆஸ்டிரேலியாவுக்கு சுய ஆட்சிகொடுக்கப்பட்டிருக்க, இச்சமயம் இந்தியருக்கு அதிக சுதந்திரம் கொடுக்கக்கூடாதென்று சொல்லப்படுகிறது, பூராவான சுய ஆட்சி கொடுக்கப்பட்ட பொழுது அதற்கு ஆஸ்டிரேலியா தகுதியுடனிருந்ததா? ஆயினும் சுய ஆட்சி கிடைத்த பின் அங்கே ஏற்பட்டிருக்கும் முற்போக்கைக் கவனித்து பார்த்



தால், இந்தியாவுக்கு இச்சமயம் சுய ஆட்சி கொடுக்கக் கூடாதென்று வாதிப்பவர்களின் வாதம் நிலைநிற்காது.

## தென்னாபிரிக்கா.

சமீபகாலத்திற்குள் தென்னாபிரிக்காவுக்கு சுய ஆட்சி கொடுக்கப் பட்டது. பார்லிமெண்டு சபையினரும், தென்னாபிரிக்காவிலிருந்த உத்தியோகஸ்தரும் ஆட்சேபித்தும், 1906-1907 ஆகிய வருஷங்களிலே டிரான்ஸ்வால், ஆரஞ்சு ரிவர் ஸ்டேட் என்ற மாகாணங்களுக்கு பொறுப்பு வாய்ந்த முழு சுய ஆட்சியும் கொடுக்கப்பட்டது. சுமார் 8-வருஷங்களுக்கு முன்பு தான் இங்கிலாந்துக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இரத்தப் பெருக்கு எடுக்கும்படியான யுத்தம் நடந்தது. யுத்த சம்பவங்கள் மனதைவிட்டு மறவாமலிருந்த காலத்திலேயே அவர்களுக்கு சுதந்திரங்கள் கிடைத்தன. எனவே கானடா, 'ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ஆகிய மூன்றுக்கும் சுய ஆட்சி கொடுத்ததனால் பலனும் நன்மையும் ஏற்பட்டிருக்கும் பொழுது, இந்தியாவுக்கும் சுய ஆட்சி கொடுத்தால், அதில் பலனும் நன்மையுமில்லாமல், தவறு ஏற்படக் காரணமுண்டோ?

## இது சமயமல்லவா.

சுய ஆட்சிக்கு இந்தியா தகுதியுள்ளதென்று ருஜுப்படுத்துவதோடு நமது கடமை நின்று விடவில்லை. மிகவும் வன்மைவாய்ந்த விரோதியுடன் இச்சமயம் கிரேட் பிரிட்டன் போர்புரிந்து வருவதால், யுத்தத்தைத் தீவிரமாய் நடத்திப் பலனடைவதில் கிரேட் பிரிட்டனுக்கு இடையூறுண்டாகும்படியான எதையும் இச்சமயம் செய்யக்கூடாதென்று சொல்லப்படுகிறது. அதிகாரிகளுக்கு இடையூறாயிருக்கும்படியான எதையேனும் நாம் செய்யக்கூடாதுதான். இந்த யுத்தத்தில் நம்மாலான உதவிகளை நாம் மனமுடன் செய்துவருகிறோம். ஆனால் ஏகாதிபத்தியத்தைத்திருத்தியமைப்பதற்கான யோசனை செய்யப்படும் காலத்திலே, நமது கோரிக்கைகளும் நோக்கங்களும் என்னவென்பதை பிரிட்டிஷாருக்கு நாம் தெரிவிக்கும்படியான நிலைமையில் இருக்கவேண்டும். ஆகவே நமது

கண்டிப்பான கோரிக்கைகள் இன்னின்னவை யென்பதை நாம் திட்டப்படுத்தி அவைகளைக் குறித்து ஜன சமூகத்தினர் ஆராய்ந்தறியுமாறு நாம் செய்யவேண்டும். இவ்விதம் நாம் செய்யாது போனால், உங்களுடைய மனோ பீஷ்டம் இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை யென்று நமக்குச் சொல்லிவிடும்படியான பேராபத்து நேரக்கூடும். ஆதலின் யுத்தம் முடியும் வரையில் நாம் மௌனம் சாதித்திருக்க முடியாது. யுத்தத்துக்குப்பின் ஏகாதிபத்தியத்திலே இந்தியாவின் அந்தஸ்து எப்படியிருக்க வேண்டுமென்ற முக்கியமான விஷயத்தைப்பற்றி பத்திரிகைகளிலும்பொது மேடைகளிலும் விவகரித்து, ஜனசமூகத்தினருக்கு அவ்விஷயமான ஞானத்தை ஊட்டுவதில் நாம் சிறிதும் காலதாமதம் செய்யக் கூடாது. இதுவே நமது கடமை. ஹிந்துக்களும் முகம்மதியரும் தாங்களாகவே புத்திசாலித்தனங்கொண்டு, இந்தியாவின் அந்தஸ்தைக் குறித்து பொதுவான ஒரு தீர்மானத்துக்கு வராதுபோயின், யுத்தத்துக்குப்பின் இந்தியாவின் அந்தஸ்தைப்பற்றி நமது கட்சியின்னதென்பதை நாம் எடுத்துச் சொல்லமுடியாது போகும்.

## மற்றும் சில காரணங்கள்.

யுத்தம் முடியம் வரையில் நாம் மௌனமாய் இருந்துவிடக்கூடாதென்பதற்கு மற்றுஞ் சிலகாரணங்களும்உள. இங்கிலாந்திலே கல்வி முறைமையைச் சீர்திருத்துவதற்காக வழி செய்யப்பட்டுளது. திரவிய நிலைமையை அபிவிருத்திசெய்வதற்காக நேசதேசங்களுடன் சேர்ந்து இங்கிலாந்தில் பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது. குடியேற்ற நாடுகளும் மௌனமாய் இருக்கவில்லை. அன்னிய தேச சம்பந்தமான காரியங்களில் தங்களையும் கலந்துகொள்ள வேண்டுமென்றும், யுத்தம், சமாதானம் ஆகிய இவற்றில் தங்களுடைய யோசனைகளையும் கேட்டறிந்து கொள்ள வேண்டுமென்றும், குடியேற்ற நாடுகள் பலமாய் வற்புறுத்தி வருகின்றன. யுத்தம் முடியும் வரையில் பேசாமலிருக்க முடியாதென்றும், மேலே கண்ட விஷயமாய்



திருப்திகரமான முடிவு ஏற்பட இச்சமயம் முயற்சி செய்ய வேண்டுமென்றும், பொறுப்பு வாய்ந்த ராஜதந்திரிகளும் பகிரங்கமாகச் சொல்லி யிருக்கின்றனர். இங்கிலாந்துக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் ஒற்றுமையை யுண்டுபண்ண இதுவே நற்சமயமென்று மிஸ்டர் போனர்லாவும் சொல்லியிருக்கிறார். இங்கிலாந்தும் குடியேற்ற நாடுகளும் அவ்விதம் யோசனை செய்துவரும் பொழுது, நமது பிற்கால நிலைமை இன்னதென்ற ஜீவாதாரமான விஷயத்தைக்குறித்து நாமும் யோசிப்போமாயின், அது பற்றி இங்கிலாந்துக்குப் பாதகம் ஏற்படுமோ?

## கவலைக்கு இடமான விஷயம்.

சென்ற ஒன்றரை வருஷ காலமாக இந்தியாவைப்பற்றி பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மனோபாவத்தில் மாறுதல் ஏற்பட்டிருப்பதைப் பார்த்தால், அது மிக்க கவலைக்கிடமாயிருக்கிறது. யுத்த ஆரம்பகாலத்திலே அந்த ராஜதந்திரிகளின் திருஷ்டியில் மாறுதல் இருப்பதாகத் தென்பட்டது. பொதுஜன மீட்டிங்குகளிலே இந்தியாவின் உதவி பாராட்டிப் பேசப்பட்டது; யுத்தத்துக்குப்பின் இந்தியாவின் அந்தஸ்தைப்பற்றி யோசனை செய்யப்படுமென்றும் உறுதி கூறப்பட்டது. ஆனால் இந்தியாவைப்பற்றி இப்பொழுது பிரஸ்தாபம் இல்லை. குடியேற்ற நாடுகளைப்பற்றி தாராளமான கவனஞ் செலுத்தப்படுவதோடு, மந்திரி சபையின் மீட்டிங்குகளில் பிரசன்னமாயிருக்கும்படி குடியேற்ற நாடுகளின் முக்கிய மந்திரிகள் அழைக்கவும் படும் பொழுது, யுத்தத்தில் இந்தியாவின் பேருதவியைப்பற்றி பிரிட்டிஷாருக்குண்டான உற்சாகம் தணிந்திருக்கிறது. தவிர, இந்தியாவின் பேருதவி மறக்கப்பட்டும் போகும் போலும்.

## நம்பிக்கையில் பரீட்சை.

யுத்த சமயத்திலே விவாதத்திற்கு இடமான எதையும் கிளப்பிவிடக் கூடாதென்று ஏற்பட்டிருந்தும், பார்லிமெண்ட் சபையிலே ஸிவில் ஸர்வீஸ் சட்டம் அங்கீகாரமாயிற்று. அதனால், பிரிட்டிஷ் ராஜதந்திரிகளிடம் நமக்குள்ள நம்பிக்கை

பெரிதும் விசனத்துக்கு இடமாகும்படி பரிட்சை செய்யப்படலாயிற்று. அப்பால் இந்தியாவின் ஆட்சியைப்பற்றித் திருத்த சட்டம் ஏற்பட்டது. இது காரணமாக நமது உணர்ச்சிகளுக்குப் பெருத்த நடு நடுக்கம் உண்டாயிற்று. அந்தச் சட்டமானது இவ்வளவு அவசரமாய்ச் செய்யப்படவேண்டிய சட்டமென்று சொல்வதற்கில்லை. மிக்க விவாதத்திற்கு இடமான அம்மசோதாவைப்பற்றி இந்திய ஜன சமூகத்தின் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளாமலேயே அதைப் பார்லிமெண்டு சபையின்முன் ஆலோசனைக்குக் கொண்டு வந்தனர்.

## பேராபத்து.

மேலேகண்ட விவரங்களைப் பார்த்தால், நம்முடைய வார்த்தையை பிரிட்டிஷார் கேட்கும்படி நாம் செய்யாது போயின், நம்முடைய நன்மை கவனிக்கப்படுமென்று நினைப்பதற்கில்லை. மேலும், இந்தியாவின் நன்மையானது தாழ்வாகவும் குடியேற்ற நாடுகளின் நன்மை மேலாகவும் பாவிக்கப் படும்படியான ஓர் பேராபத்தும் உளது. ஏகாதிபத்தியத்தின் கொள்கையை நிதானித்து நடத்துவதில் குடியேற்ற நாடுகளுக்கு அதிகப் பங்கு கொடுக்கப்படுமென்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் வாக்குறுதி கொடுத்திருக்கின்றனர். எனவே இந்தியாவின் ஆட்சி விஷயத்தில் குடியேற்ற நாடுகளுக்கு பங்கு இருக்கும். குடியேற்ற நாடுகளுக்குள் இந்தியர் வரக்கூடாதென்றும், ஏற்கெனவே குடியேறியுள்ள இந்தியரை அங்கிருந்து வெளிக் கிளப்பி விடவேண்டுமென்றும், குடியேற்ற நாடுகளிலே சட்டங்கள் நிர்மாணமாயுள்ளன. குடியேற்ற நாட்டினரின் ஜாதி விரோதமோ பெரிதும் பரவியிருக்கிறது. ஏகாதிபத்தியத்தை ஒன்று கூட்டி யமைப்பதிலே இந்தியாவின் ஆட்சியில் குடியேற்ற நாடுகளுக்குப் பங்கு இருக்குமென்று ஏற்படுமாயின், ஏகாதிபத்தியச் சீர்திருத்த அமைப்புக்கான முயற்சிகளெல்லாம் தவறிப்போம்.



## முடிவுரை.

நம்முடைய உத்தேசத்தை நாம் அடையவேண்டுமாயின் நாம் இடைவிடாமல் நீடித்து உழைத்துவரவேண்டும். நமது தேசத்தினருக்கு அவ்விஷய விவரத்தை யூட்டவேண்டும். நமது கோரிக்கை இன்னதென்பதை பிரிட்டிஷ் ஜனசமூகத்தினருக்கு அறிவிக்கவேண்டும். நமது கோரிக்கையைப்பற்றி நமது தேசத்தினரின் அறிவைப் பரவச் செய்ய வேண்டியது தான் முதற் கடமை. ஏனெனில் தேசத்தினருடைய ஒற்றுமையான பலத்திற்குமுன் எதுவும் நில்லாது. என்றாலும் நமது கோரிக்கைகளைப்பற்றி முடிவான தீர்மானம் செய்பவர்கள் பிரிட்டிஷாரே. ஆதலின் அவர்களுக்கு நமது உத்தேசத்தை நாம் நன்கு உணர்த்தவேண்டும். எங்கு பார்த்தாலும் புதிய உணர்ச்சிதோன்றியுளது. தேசசேவகம் புரியவேண்டுமென்ற கட்டளை கோஷித்து வருகிறது. நமது சிரத்தையை அச்சுச் சட்டம் அடக்கிவிடாது. தேசப் பாதுகாப்புச் சட்டமும் நமது உற்சாகத்தைத் தணித்துவிடாது. நமது முயற்சிக்கு அநீதமான தடை ஏற்படின், நம்முடைய முயற்சி வன்மைப்படுமேயொழிய, குறைவுபடுவதற்கில்லை. நமது கட்சிக்கு முடிவில் வெற்றி கிடைக்குமென்ற நம்பிக்கையுடனும் தீவிரமான தேசாபிமானத்துடனும் நாம் நமது லட்சியத்தை யடைய நிச்சய புத்தியுடன் முன் செல்வோம். காலத்தின் போக்கை இங்கிலாந்து நன்கு கவனிக்குமென்றும், அவ்விதம் அது கவனித்து 30 கோடி ஜனங்களுக்கு உதவி புரியுமென்றும், நான் நம்பி யிருக்கிறேன்.

---

# காங்கிரஸ் அக்கிராசனாதிபதியின் உபந்யாசம்.

---

## கனம் அம்பிகா சரண் மஜும்தார்

இவருடைய பிரசங்கத்தின் முக்கியமான ஸாராம்சம் பின்வருமாறு:—

18-வது நூற்றாண்டில் வியாபாரத்துக்கு வந்த ஒரு கம்பெனியார் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நாட்டினர்;

அந்த ஆட்சியானது கட்டுகளுக்கடங்காத தன்மையுடையதாயிருந்தது. அக்காலத்திய நிலைமையை உத்தேசித்தால், வேறு எவ்வித ஆட்சியும் பொருத்தமா யிருந்திருக்காதுதான். கம்பெனியாரின் ஆட்சியானது தங்களுடைய இனத்தாரின் நன்மையைப் பேணியதாகவே இருந்தது; பார்லிமெண்டு மகா சபையோ கம்பெனிக்கு அடிக்கடி எச்சரிக்கைசெய்தும், நீதி பரிபாலனம் சரியாக நடைபெறவில்லை; பலமுள்ளவன் பல ஹீனனை இம்சிக்க இடங்கொடுக்கப்பட்டது. தங்களுடைய வியாபாரத்தையும் லாபத்தையும் விருத்தி செய்யவே கம்பெனியார் கவனமுள்ளவர்களா யிருந்தனர். அம்மாதிரி ஆட்சி வெகுகாலம் நீடித்திருந்ததுதான் ஆச்சரியம். நூறு வருஷகாலம் அந்த ஆட்சி நடந்த பிறகு, கம்பெனியின் ஆட்சி நீங்கி, கிரீடாதிபதியின் ஆட்சி ஏற்பட்டது. இந்த ஆட்சியும் தன் இஷ்டப்படி நடக்கக் கூடியதாயிருந்த போதிலும், ஜனங்களின் நன்மையை நாடியதாயிருந்தது. அதனுடைய நல்லெண்ணங்களின் பலனாக, பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டு, ஜனங்களின் ராஜ விசுவாஸமும் உறுதிப்பட்டது. ஸ்தல சம்பந்தமான காரியங்களை நிர்வகிக்க ஸ்தல சுய ஆட்சி ஏற்பட்டது; நிர்வாகத்தை நடத்தும் வேலையில் தேச ஜனங்கள் சிறிதளவு சேர்த்துக் கொள்ளப்பட்டனர். கவர்னர்களின் சபைகளில் ஜனப் பிரதிநிதிகள் ஸ்தானம் பெறும்படியும் சீர்திருத்தம் உண்டாயிற்று. ரயில்வேயும் தந்தியும் ஏற்பட்டன. நாகரீகமடைந்த எந்தத் தேசமும் கண்டு சிலாகிக்கக் கூடியதாக ஆட்சி யேற்பட்டு, உயிருக்கும் பொருளுக்கும் சாவதானத்தை உண்டு பண்ணிற்று.

## அதிகாரி வர்க்கம்.

இந்த நன்மைகளைச் செய்துவிட்ட பிறகு, ஆட்சி முறையானது அதிகாரி வர்க்கமாக உருக்கொண்டது. அதிகாரி வர்க்கமானது அரசாங்கமாய்விட்டது. ஜனங்களுக்கு அது கட்டுப்பட்டிருக்க வில்லை. அது திறமையுள்ளதென்பதும் யோக்கியப் பொறுப்புள்ள தென்பதும் சந்தேகமறத் தெளிந்த விஷயங்கள். நிர்வாகக் கயிறுகள் எல்லாம் அதன் கையில்



அடங்கியிருக்கின்றன. ஜனங்கள் சௌக்கியமாயிருக்கும்படி செய்ய அது இஷ்டப்படுகிறதே யல்லாமல், ஜனங்கள் விருத்தியடைய விடுகிறதில்லை.

## புதிய உணர்ச்சி.

இந்த முறை பழையதாய் விட்டது. ஜனங்களிடத்தில் புதிய தோர் உணர்ச்சி தோன்றியிருக்கிறது. உலகில் எங்கு பார்த்தாலும் புதுமையை உண்டுபண்ணிவரும் ஜன ஆதிக்க உணர்ச்சியே இது. இந்த உணர்ச்சி உலகில் வியாபகம் அடைந்துவருவதன் பலனாக, வெகு பூர்வீகமாய் ஏற்பட்டிருந்த அரசாட்சிகள் போய்விட்டன. அதற்காக வருத்தப்படுகிறவர் எவருமில்லை. போர்த்துகல், துருக்கி, பாரஸீகம் சீனா முதலிய தேசங்களிலெல்லாம் இந்த உணர்ச்சியின் காற்றுவீசியிருக்கிறது. ஈஜிப்டு தேசத்திலும் இந்த உணர்ச்சி கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலும் இதனுடைய வேகம் தெரிகிறது. இதை நல்வழியில் செலுத்தலாம்; ஆனால் இதை அசட்டை செய்வதும் அடக்கப் பார்ப்பதும் புத்திசாலித்தனமல்ல. பழைய எண்ணங்கள் போய், புது எண்ணங்கள் தோன்றிவருவதால், பழமையாய் விட்ட கவர்ன்மெண்டினிடத்தில் ஜனங்களுக்கு அனுதாபமில்லை. மூன்று தலைமுறையாய் இந்தியாவில் சேவகம் செய்துள்ள குடும்பத்தில் பிறந்த ஸர்ஹென்ரி காட்டன் இப்பொழுதுள்ள ஸிவில் ஸெர்விஸ் போகுங்காலம் வந்து விட்டதென்று சொல்லியிருக்கிறார். கட்டுக்கு அகப்படாத ஒரு கவர்ன்மெண்டில் எக்காரியமும் ஜனங்களுக்காகச் செய்யப்படுகிறது; ஜனங்களால் செய்யப்படுவது ஒன்றுமில்லை; அம்மாதிரியான கவர்ன்மெண்டோ திருப்தியடைந்தவர்களாக ஜனங்களைச்செய்யாது.

## அதிகாரி வர்க்கத்தின் அந்தியகாலம்.

நல்லவேளையாக, நல்லெண்ணமுள்ள இந்த அதிகாரி வர்க்கம் தன்னுடைய அந்தியகாலத்துக்கு வழியைத் தானே தேடிக்கொண்டது. 1858-ம்வருஷத்தில் விக்டோரியா மகாராணியார் வெளியிட்ட மகா சாஸனம் முதல்,

லார்டு மார்லி காலத்தில் ஏற்பட்ட திருத்தம் வரையில்
பிரிட்டிஷ் பார்லிமெண்டு செய்திருக்கிற எந்தக் காரி
யமும்" இந்தக் கட்டுக்கடங்காத ஆட்சியைத் தொலைக்கக்கூடிய
தாகவே இருந்திருக்கிறது. தான் செய்த பிசகுகள் இன்னவை
யென்று அதிகாரி வர்க்கத்துக்கு இப்பொழுது தெரிகிறது.
கொட்டிப்போன பாலுக்கழுது பயன் என்ன? இந்தியருக்கு
மேனாட்டுக் கல்வியைப் புகட்ட வேண்டுமென்று வற்புறுத்தி
1854-ம் வருஷத்தில் எழுதினது அதிகாரி வர்க்கம் செய்த
முதல் பிசகு. அது போதாததுபோல், பிறகு யூனிவர்ஸிட்டி
களை ஸ்தாபித்ததும் தப்பு. 1884-ம் வருஷத்தில் ஸ்தல சுய
ஆட்சியை ஏற்படுத்தினதும் தப்பு. 1903-ம் வருஷத்திலும்,
பிறகு 1910-ம் வருஷத்திலும் சட்டசபைகளைத் திருத்தியமை
த்ததும் தப்பு. இம்மாதிரி ஒன்றன்பின் ஒன்றாய் பலபிசகுகளை
பார்லிமெண்டு செய்தற்குக்காரணம் ப்ரிட்டிஷ்ராஜங்க அமை
ப்பின் விசேஷமேயாகும். முன்வைத்த அடியைப் பின்வைக்க
இக்காலத்தில் பார்க்கிறார்கள். வீண் பிரயத்தனம். அலை வீச
ஆரம்பமாய் விட்டது. அதுஇனி அதை நிறுத்த மனுஷ்யனால்
கூடுமா? இனி செய்யக்கூடியது ஒன்றுதான் உண்டு. அதாவது
பின்புறம் பார்க்காமல் முன்னாடியே போய்க் கொண்டிருக்க
வேண்டும். எந்தக் கமிஷனுடைய ரிபோர்ட்டையும் பாருங்
கள். பழைய காலத்தில் ஏற்பட்ட ஓர் ஆட்சி முறைக்கும்
அதுதகுதியாயிருந்த நிலைமையிலிருந்து வெளிப்பட்டு விட்ட
ஜனங்களுக்கும் போராட்டமாகவே இருப்பதாகத் தெரியும்.

## போராட்டத்தின் கருத்து.

"பொது ஜன அதிருப்தி வெளிப்படும் பொழுதெல்லாம்
ராஜாங்க அமைப்பிலோ அல்லது ஆளுகையிலோ ஏதோ
பிசகிருப்பதாக வெளிப்பட்டிருக்கிறது" என்று லார்டு
மார்லி சொல்லி யிருக்கிறார்.

"அமைதி யின்மையை உண்டாக்குவதில் ஜனங்களுக்கு
சிரத்தை இல்லை; அவர்கள் தப்புவழியில் போனால், அதற்குக்
காரணம் அவர்களுடைய அறியாத்தனமே யல்லாமல், குற்ற



மல்ல" என்று ராஜீய நூலாசிரியராகிய பர்க் என்பவர் சொல்லி
யிருக்கிறார். தாங்கள் நினைப்பதுதான் சரியென்று அதிகாரிவர்க்
கம் எண்ணுவது இயல்பே; அவர்களுடையமுறைகளையும் அனு
ஷ்டானங்களையும் சிறிது ஆராய்ந்து பார்ப்போமானால், இப்
பொழுது அவ்வர்க்கம் அடைந்திருக்கும் நிலைமைவெளிப்படும்.

## தேச நிர்வாகம்.

அடுத்த தகராறு என்னவென்றால் நிர்வாக விஷயமாய்
நடக்கக்கூடிய குழந்தையை தவழச்சொல்வதாகும். இது ஆச்சரி
யமே வயது வந்துவிட்டபிள்ளைகள் வீட்டுக்காரியத்தை கவ
னித்துக்கொள்ளுவதாகச் சொல்வது தகப்பனைத் தள்ளிவிடு
கிறதற்கன்று. அதுபோல், ஒரு கவர்ன்மெண்டும் பிரஜைகளி
டம் அவ்வப்பொழுது உண்டாகும் மாறுதல்களுக்குத் தகுந்த
படி நடந்துகொள்ள வேண்டும். இந்தியாவில் பிரிட்டிஷ் கவ
ர்ன்மெண்டு நிலை நின்றிருப்பதற்குப் பெரிய காரணம் என்ன
அதனுடைய நியாய பலமே யல்லாமல், ராணுவ பலமல்ல. உயி
ரையும் பொருளையும் பந்தோபஸ்து செய்து கொடுப்பது அநாக
ரீக கவர்ன்மெண்டுகளாலும் செய்யப்படுகிறது. சரியான நீதி
பரிபாலனமே ஒரு கவர்ன்மெண்டுக்கு அஸ்திவாரம். பிரிட்டி
ஷார் அப்படி நீதி பரிபாலனம் செய்து வந்திருப்பதால் தான்
கவர்ன்மெண்டிடத்தில் ஜனங்களுக்கு ஆழ்ந்த அபிமானம்
ஏற்பட்டிருக்கிறது; அந்த அஸ்திவாரத்துக்கு அபாயத்தை
உண்டு பண்ணும் எதுவும் மேல்கட்டிடத்தையும் தள்ளிவி
டும். பொருளைவிட உயிரையும் சுயேச்சையையுந்தான் ஜனங்
கள் பெரிதாக மதிக்கிறார்கள். சொத்து நடுவில் வரும்; சுயேச்
சையோ ஒருவனுடன் பிறக்கிறது. ஆகையால் சொத்து சம்
பந்தமான ஸிவில் நீதி பரிபாலனத்தை விட, உயிரையும்
சுயேச்சையையும் பற்றிய கிரிமினல் நீதி பரிபாலனமே எத்
தேசத்திலும் மிகப் பாராட்டப்படுகிறது. அவ்விதமான கிரி
மினல்நீதி பரிபாலனத்திலே இத்தேசத்தில் இருக்கிற பெரிய
தப்பு என்னவென்றால்நிர்வாகஅதிகாரமும் நீதிபரிபாலன அதி
காரமும் ஒரே உத்தியோகஸ்தருக்கு ஏற்பட்டிருப்பதாகும்;
அதாவது பிராது செய்கிறவரும் தீர்ப்புச் சொல்லுகிறவரும்
ஒருவராக இருப்பதே. இதைப் பிரித்து விடும்படி சென்ற

30 வருஷகால மாய்காங்கிரஸ் மகாசபை கதறித் தொண்டை புண்ணாய் விட்டது. இதை வற்புறுத்துவதற்கு உதாரணமாக எத்தனையோ கேஸ்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. சில சமயங்களிலே நீதி பரிபாலனத்தில் ஜாதி உணர்ச்சி பாராட்டப்பட்டு, ஒரு இந்தியனுடைய உயிர் ஒரு நண்டு அல்லது ஆமையினுடைய உயிருக்கு சமானமாக பாவிக்கப் பட்டிருக்கிறது. அதிருப்தியை பூமிக்குள் தள்ளி மண்ணைப்போட்டு மூடிவிட வல்லமையுள்ளவர்கள் இருக்கிறார்களே யல்லாமல் அது பிறகு எப்படி உள்ளுக்குள் குடைந்து செல்லுகிறதென்பதை கவனிக்கிறவர்கள் தான் இல்லை. காங்கிரஸ் சொல்லும் யோசனை முதல்தரமான யோசனை என்று ஒரு ராஜப்பிரதிநிதி சொல்லி, அதைச் சொன்னதே போதுமென்று இருந்துவிட்டார். ஆனால் அந்த ஏற்பாடு இன்னும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. அது ஏதோ சாகாவரன் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறது போலும் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்துவிட வேண்டுமென்று 1908-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக சபையில் முதல் மெம்பராயிருந்த ஸர் ஹார்வே ஆடம்ஸன் பிரேரணை செய்ததாகக் கூடத் தெரிகிறது. ஆனால் அந்தப் பிரேரணை எங்கேயோ ஒட்டிக்கொண்டு பிறகு வெளிப்படவே இல்லை; இந்தியா கவர்ன்மெண்டின் தஸ்தாவேஜ் மூட்டைகளில் கிடக்கிறதோ, அல்லது இந்தியா மந்திரி ஆபீஸின் தஸ்தாவேஜ் மூட்டைகளில் கிடக்கிறதோ, நமக்குத் தெரியவில்லை. அது எங்கேனும் கிடக்கட்டும்; அதிலிருந்து நமக்குத் தெரிவதென்னவென்றால், அதிகாரி வர்க்கம் தங்களுக்குள்ள அதிகாரத்தில் ஒரு நூலிழையைக்கூட விட்டுவிட அஞ்சுகிறார்கள். இந்த ஒரு திருத்தத்தைச் செய்திருந்தால், ஜனங்களுக்குள்ள அதிருப்திக்குப் பாதி காரணம் இல்லாமலிருந்திருக்கும்.

## ஜனப் பிரதிநிதிகளின் ஆட்சி.

ஹோம் ரூல், சுயராஜ்யம் முதலிய பல சொற்கள் குறிப்பதெல்லாம் ஜனப்பிரதிநிதிகளின் ஆட்சியையே. ஐரோப்பி



யர் குற்றஞ் சாட்டப்பட்டால் அவர்களை விசாரணை செய்விக்கும் விஷயமாக 1892-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்ட இல்பெர்ட் மசோதாவின்மேல் வாதம் நடந்தகாலத்தில், சுயராஜ்யமிருந்தாலொழிய தங்களுடைய நிலைமை நன்றாயிராதென்ற அபிப்பிராயம் அப்பொழுதே ஜனங்களுக்கு உண்டாகிவிட்டது, அதற்கு ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டது அதனால், வெகு தீவிரமாய் எழுதப்பட்ட ஒரு சிறுநூல் பிரசுரம் செய்யப்பட்டது; "ஜாதீய கவர்ன்மெண்டு ஏற்படுகிறதற்குமுன் ஸ்தலசுய ஆட்சி ஏற்படவேண்டு"மென்று 1882-ம்வருஷத்தில் லார்டு ரிப்பன் எழுதியபொழுது ஜாதீய கவர்ன்மெண்டு வேண்டுமென்று பிறகு கேட்கப்படுமென்பதை அவர் எதிர்பார்த்தாரென்று தெரிகிறது.

ஆதியில் காங்கிரஸ் இவ்விஷயமாய் தீர்மானம் செய்யவில்லையாயினும், ஆதி முதல் இந்த உத்தேசம் இருந்ததுண்டு. 1906-ம் வருஷத்திய காங்கிரஸில் தான், சுயராஜ்யம் வேண்டுமென்ற தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் அதற்கு நாம் இன்னும் தகுதியுடையவர்களாய் விடவில்லையென்று பிறர் சொல்லுகிறார்கள்.

## மூன்று நிபந்தனைகள்.

ஜனப் பிரதிநிதிகள் ஆட்சியைப் பெறுவதற்கு ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர்மூன்று நிபந்தனைகள் அவசிய மென்கிறார்.

(1) அது எந்தஜனங்களுக்காக உத்தேசிக்கப்படுகிறதோ அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள இஷ்டமுள்ளவர்களாயிருக்கவேண்டும். (2) அது நிலைத்துநிற்கும்படிசெய்ய அவர்கள் இஷ்டமும் சக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். (3) அதனுடைய உத்தேசம் நிறைவேறுவதற்கு வேண்டியதைச் செய்ய அவர்கள் இஷ்டமும் சக்தியுமுள்ளவர்களாயிருக்கவேண்டும்; நான் ஒரு நிபந்தனை சேர்க்கிறேன். அதாவது சுய ஆட்சியை நடத்த, தங்களுக்குத் திறமையிருக்கிறதாக ஜனங்கள் காட்டியிருக்கிறார்களா?

## கல்வி அவசியமல்ல.

கல்வி அவசியமென்றுமில்லை என்பவர் சொல்லவில்லை 13-வது நூற்றாண்டில் ஹிந்துக்களும் 18-வது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த முகம்மதியரும் எவ்வளவோ உபயோகமற்ற படிப்பைப் படித்திருந்தார்கள்; ஆனால் அப்படிப்பு அவர்களை ஒன்றாய்த் திரட்ட சக்தியற்றதாய் இருந்ததால், இரு வகுப்பாரும் தங்களைவிட வல்லமை பொருந்தியவர்களின் முன் தோற்றுப் போயினர். 19வது நூற்றாண்டில் அமெரிக்காவில் விடுதலை பெற்ற அடிமை ஜனங்கள் படிப்பில்லாதவர்களாயிருந்தும் லைபீரியா என்ற நாட்டில் குடியரசு கவர்ன்மெண்டை ஸ்தாபித்தார்கள். படிப்பு பிரதானமல்லவென்பதற்கு இன்னொரு காரணமுண்டு நார்வே தேசத்திலும் ஸ்வீடன் தேசத்திலும் 100 க்கு 97 பெயர்கள் படித்தவர்கள், இங்கிலாந்தில் 87 பெயர்கள், பிரான்ஸில் 78 பெயர்கள், ஜெர்மனியில் 91 பெயர்கள், போர்த்துகலில் 56 பெயர்கள். படிப்பு ஒரு யோக்கியதையாக இருக்குமானால் நார்வேயில் எதேச்சையாய் ஆளக்கூடிய அரசனுடைய ஆட்சி இராது. பிரான்ஸிலும் போர்த்துகல் தேசத்திலும் குடியரசு ஏற்பட்டிராது.

சுய ஆட்சிக்கு ஜனங்கள் அதற்குள் ஆசைப்படக் கூடாதென்று சொல்லப்படுவதால், அவர்களுக்கு இஷ்டமிருக்கிறதென்பதைக் காட்ட வேறு ருஜு தேவையில்லை. பத்திரிகைகளிலும் சட்ட சபைகளிலும் இந்தக் கூக்குரல் தான் அதிகமாயிருக்கிறது.

ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்குமுள்ள வித்தியாசத்தை ஒரு காரணமாகச் சொல்வது வழக்கம். நல்ல வேளையாய் இருவரும் ஒன்று சேர்ந்து விட்டனர். இரண்டு வகுப்பினரும் சேர்ந்து சுய ஆட்சி வேண்டுமென்று கேட்கிறார்கள்.

## பிலிப்பைன் தீவும் அமெரிக்காவும்.

பிலிப்பைன் தீவுகள் ஒரு காலத்தில் ஸ்பெயின் தேசத்தார் கையில் சிக்குண்டு அவதிப்பட்டன. 1898-ம் வருஷத்தில் அமெரிக்கா அத்தீவுகளை ஜெயித்தது. அமெரிக்காவினால் இங்



தத் தீவுகள் பிடிக்கப்பட்டபோது அவைகளின் நிலைமை எப்படியிருந்ததென்பதைச் சொல்வோம். அத்தீவுகளில், நிக்ரிடோஸ், நிக்ரோவர்கள், பானியார் என்ற ஜாதிகளும், உரோமமடர்ந்த மிண்டானேஸ் என்ற ஜாதியாரும் மலேயா ஜனங்களும், சீனர்களும், ஸ்பானியர்களும் ஆகிய பலவகைப்பட்ட ஜாதியாரிருந்தார்கள். அவர்கள் பேசிவந்த பாஷைகள் ஒன்றிரண்டல்ல. அமெரிக்கா அத்தீவுகளைப் பிடித்தபோது அவைகளின் ஜனங்கள் வெகுவாய் அநாகரீகத்திலேயே யிருந்து வந்தார்கள். இப்போதும், அத்தீவுகளிலுள்ள பெரும்பான்மை ஜனங்கள் இந்தியரைப்போல் நாகரீக மடைந்தவர்களெனச் சொல்லமுடியாது. அப்படி யிருந்தும், சமீபத்தில், யுனைடெட் ஸ்டேட்ஸின் பர்லிமெண்ட் சபையில், பிலிப்பைன் தீவுகளுக்கு சுயஆட்சி கொடுத்துவிட வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவரப்பட, அதன் சம்பந்தமாய் விவாதம் நடைபெற்றதில் சிலர் இன்னும் இரண்டு வருஷங்கள் கழித்து சுய ஆட்சி கொடுக்கலாமென்றும் வேறு சிலர் 4-வருஷங்கள் கழித்துக்கொடுத்தால் நலமாயிருக்குமென்றும் சொன்னார்கள். என்றாலும் சுயஆட்சி கொடுத்துவிட வேண்டு மென்பதை அனைவரும் ஒப்புக்கொண்டு, பிலிப்பைன் ஜனங்களை சுய ஆட்சிக்குத் தயார்செய்து வருகிறார்கள். 1913-ம் வருஷத்தில், பிலிப்பைன் சட்ட சபையில் சுதேசமெம்பர்களை அதிகமாய்ச் சேர்த்து, உத்தியோகப்பற்றில்லாதவர்களே அதிகமான ஸ்தானங்களை வகிக்கும்படி ஏற்படுத்தி அமைத்த சட்ட சபையைத் திறந்து வைத்து, அங்குள்ள அமெரிக்க கவர்னர் பேசியபோது பின்வருமாறு கூறினார்.—

"நாங்கள் பிலப்பைன் தீவுக்கு டிரஸ்டிகளாக இருக்கிறோமென்றே நினைக்கிறோம். அப்படியிருப்பது ஜனங்களுடைய (அமெரிக்கர்களுடைய) நன்மைக்காகவல்ல; பிலிப்பைன் தீவுகளிலுள்ள ஜனங்களின் நன்மைக்காகவேயிருந்து வருகிறோம். நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும், பிலிப்பைன் ஜனங்கள் சுவாதீனம் பெறுவதற்கேற்றதா யிருக்கும். பிலிப்

பைன் கவர்ன்மெண்ட், பிலிப்பைன் ஜனங்கள் சுய ஆட்சி பெறுவதற்கேற்ற ஒவ்வொரு காரியத்தையும் செய்துவரும். பிலிப்பைன் சட்ட சபைகளில் பிலிப்பைன் ஜனங்கள் பெரும் பாகம் ஸ்தானங்கள் பெறுவார்கள். உங்களை நீங்களே மீட்டுக்கொள்ள எங்களாலானதைச் செய்கிறோம். தருணத்தைப் பெற கதவு திறக்கப் பட்டிருக்கின்றது. நீங்கள் சுய ஆட்சி பெறுவதால் உங்களுக்கு எவ்வளவு நன்மை உண்டோ அவ்வளவு நன்மை எங்களுக்கு முண்டு”

பிலிப்பைன் ஜனங்களுக்கு சுய ஆட்சி கொடுத்துவிட அமெரிக்கா எவ்வளவு சந்தோஷப்படுகிறதென்பது மேற்கண்ட சங்கதிகளால் விளங்கும். தற்போதைய கவர்ன்மெண்டில் பிலிப்பைன் ஜனங்களே அதிக ஸ்தானங்கள் பெற்றிருக்கிறார்கள்; சட்டசபை மெம்பர்களனைவரும், மாகாண கவர்னர்களும் ஜனங்களாலேயே தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே பிலிப்பைன் ஜனங்கள் தற்போது அநேகமாய் சுய ஆட்சியே செய்து வருகிறார்களென்று சொல்லலாம்; தற்போது பிலிப்பைன் தீவுகளிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் சுவாதீனம் பெற்றவனாயிருக்கிறான். இந்தியர்களைவிட எவ்விதத்திலும் சிறந்தவர்களல்லாத பிலிப்பைன் ஜனங்களுக்கு அமெரிக்கர் சுயராச்சியங் கொடுக்கும்போது, நாகரீகமடைந்த இந்தியாவுக்கு பிரிட்டிஷார் ஏன் சுயராச்சியங் கொடுக்கக்கூடாது? ஏன் பிரிட்டிஷார் பயப்பட வேண்டும்? 18 வருஷத்திற்குள் பிலிப்பைன் ஜனங்களை சுயராச்சியத்திற்கு லாயக்குள்ளவர்களாக அமெரிக்கர் செய்துவிட்டனர். 160 வருஷ மாகியும், இந்தியர்கள் இன்று சுய ஆட்சிக்கு அருகராக வில்லையென்று பிரிட்டிஷார் சொன்னால், இனி எப்போது திறமையுள்ளவர்களாகப் போகிறார்களோ தெரியவில்லை !

## கவர்ன்மேண்டின் அமைப்பு திருத்தப்படுதல்.

நாம் கேட்டுவரும் சுய ஆட்சியின் சம்பந்தமாக வியக்த்மாய் சிலவிஷயங்களைக் குறிப்பிட்டுவிடவேண்டும். ப-ெ.க் ஸர்



விஸ் கமிஷன், இந்தியாவிலுள்ள பலவித ஸிவில் ஸர்விஸ் உத்தியோகங்களில் அரைபாகம் அல்லது மூன்றில் இரண்டு பங்கே இந்தியர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருப்பதாகவே வைத்துக்கொள்வோம். கவர்ன்மெண்டு அதன்படி உத்தியோகங்கள் கொடுத்து வந்தாலும் போதுமா? அதனால் நாம் திருப்தியடைந்து விடமாட்டோம். கவர்ன்மெண்டின் முறையும் அமைப்பும் மாற்றப்படாமல், தற்போதிருந்துவரும் அமைப்பின்படிக்கான கவர்ன்மெண்டில் இந்தியர்கள் அதிக உத்தியோகங்கள் பெற்றாலும், அது அதிகார வர்க்கத்தின் கூட்டத்தில் இந்தியரின் தொகையைப்பெருக்கி வைக்குமேயன்றி ஜனங்களுக்கு சுதந்திரங்களைக் கொடுத்துவிடாது. கவர்ன்மெண்டு அமைக்கப்பட்டிருக்கிற ஏற்பாட்டினால் நாம் கஷ்டப்படுகிறோமே யன்றி உத்தியோகஸ்தர்களாலல்ல. கவர்ன்மெண்டின் அமைப்பும் முறையும் அடியோடு மாற்றப்படவேண்டும். அபிவிருத்தி யடைந்து வரும் இந்திய உணர்ச்சிக்கு அதுவே உன்னத பதவியைத் தரும்.

1833-ம் வருஷத்தில் ஏற்பட்ட சார்டர் ஆக்ட் என்ற சட்டமும், விக்டோரியா மகாராணியாரின் 1858-ம் வருஷத்திய மஹாசாஸனமும், எட்வர்ட் சக்கரவர்த்தியும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும் கொடுத்த உறுதிமொழிகளும், இன்னும் நிறைவேற்றப்படாத உறுதிமொழிகள் பலவும் ஏற்கெனவே இருக்கும்பொழுது, நிறைவேற்றப்படாத உறுதிமொழிகளை அதிகப்படுத்துவதானது புத்திசாலித்தனமுள்ள ராஜதந்திரமாகாது. பெல்ஜியம், ஸெர்வியா ஆகிய இரண்டையும் விடுவிக்கவே மகா யுத்தத்தில் இங்கிலாந்து இறங்கி யிருக்கிறது. அம்முயற்சியில் வெற்றியுடன் இங்கிலாந்து கிளம்பிவருமாக. அதைவிட இன்னும் மேலான உறுதிமொழியை இந்தியாவின் விஷயத்தில் இங்கிலாந்து நிறைவேற்ற வேண்டும். இந்தியாவின் விஷயம் அதனிலும் மேலானது. யுத்தத்துக்குப்பின் ஏகாதிபத்தியமானது முழுதும் திருத்தியமைக்கப்படும். அதன் பாகங்கள் அனைத்தும் பரஸ்பர ஒற்றுமையுடன் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். இந்த ஏற்

பாட்டில் இந்தியாவைத் தனியே விட்டு விடுவதற்கில்லை. குடியேற்ற நாடுகளுடன் சரிசமமான பங்கும்பதவியும் இந்தியாவிற்குக் கிடைக்கவேண்டும். ஏகாதிபத்திய மெங்கும் இந்தியாவுக்கு சரிசமமான சுதந்திரங்களும் விதிகளும் ஏற்படவேண்டும். இந்தியாவானது சார்பு நாடு என்றுள்ள கழுத்துப் பட்டயத்தை எடுத்துவிடவேண்டும். இந்தியாவானது ஸர்வாதிகாரத்துடன் சுய ஆட்சி பெற்ற நாடென்று இந்தியாவின் தலையில் கிரீடம் சாத்தப்படவேண்டும். இம்மாதிரி ஏகாதிபத்தியத்தை ஒன்று கூட்டி சரிசமமாக அமைத்தால் ஏகாதிபத்தியத்தின் பெருமை எவ்வளவோ அதிகமாகுமன்றோ ! சரீரத்திலே ஓர் அங்கத்திற்கு ஏதேனும் சீர்கேடு உண்டாக, அது திருத்தப்படாது போனால், காலாந்திரத்திலாவது சரீர அமைப்புக்கே அச்சீர்கேட்டினால் பாதகமுண்டாகும். ஏகாதிபத்திய பாகங்களெல்லாம் ஒற்றுமையுடன் அமைக்கப்பட வேண்டுமென்று இந்த யுத்தத்தினால் நன்கு வெளியாயிருக்கும் போது, அவ்விதம் ஏகாதிபத்தியத்தைத் திருத்தி யமைப்பதில் இந்தியாவை மறந்துவிடக் கூடாது. இந்தியாவை விலக்கி விடுவதாயின், இந்தியாவினுடைய நிலைமையோ தற்காலத்திலுள்ள நிலைமையைக் காட்டிலும் இன்னும் கேவலமாய் விடுமென்பது நிச்சயம். ஏகாதிபத்தியத்தின் விஷயங்களைக் கவனிப்பதற்குப் பொதுவாக ஓர் ஆலோசனை சபை ஏற்பட்டு அதில் குடியேற்ற நாட்டுப்பிரதிநிதிகள் ஸ்தானம் வகிப்பதாயின் இந்தியாவின் ஆட்சி விஷயத்தில் குடியேற்ற நாடுகளுக்கும் செல்வாக்கு ஏற்படும். ஏனெனில் குடியேற்ற நாட்டுப்பிரதிநிதிகளோ ஒரு சமயத்திலே மந்திரி சபையிலும் ஸ்தானம் வகிக்கலாம். தவிர, இந்தியா மந்திரி என்ற ஸ்தானத்தை வகிக்கவும் இட முண்டாகக் கூடும். அந்தச் சபையிலே இந்தியாவுக்கென்று பிரதிநிதிகள்இல்லாது போயின், இந்தியாவானது குடியேற்ற நாடுகளுக்கும் உட்பட்டதென்ற இழிவுக்கும் பாத்திரமாகும். ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் அந்தஸ்து எப்படி யிருப்பதென்ற கொள்கையைத் தீர்மானிப்பதில், குடியேற்ற நாடுகளுக்கும் பங்கு உண்டானால்,



அது மிக்க ஆபத்துக்கு இடமாகும். ஏனென்றால் குடியேற்ற நாடுகளின் மனதில் ஜாதி வித்தியாசம் குடிகொண்டிருக்கிறது. அது காரணமாக இந்தியாவின் ஆட்சி விஷயத்திலும் ஜாதி வித்தியாசம் பிரதிபலிக்கும். இந்தியாவை இதற்கு முன் நோக்கி வந்ததுபோல் இல்லாமல், இனிமேல் இந்தியாவைப் பற்றிய திருஷ்டியானது மாற்றப்பட வேண்டுமென்று முன்னம் சொல்லப்பட்டிருக்க, மேலே கண்டவாறு இந்தியாவைப் பற்றி நோக்குவதாயின் அதை நினைப்பதற்கே பயங்கரமாய் இருக்கிறது. ஏகாதிபத்தியமானது இப்பக்கம் அப்பக்கம் சாயாமல் சமமான நிலைமையில் இருக்க வேண்டுமாயின், இந்தியாவையும் சீர்தூக்கிப்பார்த்து அதற்கு ஏற்ற பதவியை அளிக்க வேண்டும். குடியேற்ற நாடுகளைப்போல் இந்தியாவுக்கு சுய ஆட்சியும் சரி சமத்துவமான பங்காளித்தனமும் தாராளமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்பதோடு, ஏகாதிபத்தியப் பொது ஆலோசனை சபையிலே குடியேற்றநாடுகளைப்போலவே இந்தியாவுக்கும் பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

## நமது கோரிக்கைகள்

கண்டிப்பாக நாம் விரும்பும் கோரிக்கைகளைச் சுருக்கமாக நான் சொல்லுகிறேன். அக்கோரிக்கைகள் துணிகரமாகவும் பதட்டமாகவும்இருக்குமென்று சிலர் சொல்லக்கூடும். இந்தியா கவர்ன்மெண்டாரும் அவைகளைப்பற்றி ஆலோசனை செய்து பார்க்கவேண்டும். ராஜப் பிரதிநிதியின் சட்டசபையைச் சேர்ந்த 19-ஜனப் பிரதிநிதிகள் நமது கோரிக்கைகளைப்பற்றி விஞ்ஞாபனம் அனுப்பியிருக்கின்றனர். அதைப்பற்றி இருதரப்பினரும் குணதோஷம் கூறியிருக்கிறார்கள். அந்த விஞ்ஞாபனத்தில் கண்ட விஷயங்களோ நமதுகோரிக்கைகளுக்கு ஏற்றவாறு இல்லாமல் குறைந்திருக்கின்றனவென்று சிலர் மதித்திருக்க, மற்றவர்களோ அதில்கண்ட விஷயங்கள் மட்டுக்கு மிஞ்சியிருக்கின்றன வென்பதாக மதித்திருக்கிறார்கள். அது எக் காரணத்தைக்கொண்டு ஏற்பட்டதென்று முன்பே விரித்துரைக்கபட்டுள்ளது. யுத்தம் ஒழிந்து சமாதானம் ஏற்பட்ட

மறுதினமே அந்த விஞ்ஞாபனத்தில் கண்ட கோரிக்கைகள் கைகூட வேண்டுமென்று ஜனப்பிரதிநிதிகள் விரும்பி யிருப்பதாக நான் கருதுவதற்கில்லை. அந்த ஜனப்பிரதிநிதிகளால் எனக்கு மிக்க சௌகரியம் கிடைத்திருக்கிறது. அஃது என்னவென்றால் நமது கோரிக்கைகளை அவர்கள் எடுத்துச்சொல்லி விட்டதனால் அக் கோரிக்கைகளைப் பற்றி மிகக் கண்டனம் முன்பே ஏற்பட்டு விட்டது. ஆகவே, நமது கோரிக்கைகள் இன்னின்னவென்று இச்சமயம் நான் சொல்லும்பொழுது, நான் சொல்வதைப் பற்றி மிக்க கண்டனம் ஏற்படுவதற்கில்லை. எனவே நமது கண்டிப்பான கோரிக்கைகளை நான் சற்று இலகுவாகச் சொல்லி அவைகளை வற்புறுத்த முடிகிறது. இதுவே அந்த ஜனப்பிரதிநிதிகளால் எனக்குக் கிடைத்த சகாயமாகும். அந்த விஞ்ஞாபனத்தில்கண்ட விஷயங்களோ மட்டுக்கு மிஞ்சி இருக்கின்றன வென்று மற்றவர்கள் சொல்லுவதனால், அவ்விதம் மட்டுக்கு மிஞ்சிய கோரிக்கை எது வென்று நாமறிய முடியவில்லை. நம்மைப்போன்ற ஜனங்கள் மட்டுக்கு மிஞ்சி விரும்புவதற்கும் சோருவதற்கும் இடமில்லை. தங்களுடைய கோரிக்கைகளை வேண்டுமளவு பெற்றுவிட்டு, பிறருடைய கோரிக்கைகளைக் கைகூடுமாறு செய்வதற்கு மனமில்லாதவர்கள் தான் நமது கோரிக்கைகளை மட்டுக்கு மிஞ்சின கோரிக்கைகள் என்று சொல்லக் கூடும். அது எப்படி யிருந்தபோதிலும் சரி, நமது கண்டிப்பான கோரிக்கைகளைச் சொல்வோம். கடவுளுடைய சம்மதமிருக்குமேல் கூடிய சீக்கிரத்திலே அக்கோரிக்கைகள் கைகூடும். அக்கோரிக்கைக ளாவன:—

1. இந்தியாவானது இனிமேல் சார்பு நாடாக இருக்கக் கூடாது. இந்தியாவானது சுய ஆட்சி பெற்ற தேசமென்ற பதவிக்கு உயர்த்தப்பட வேண்டும். ஏகாதிபத்தியத்தின் இதர பாகங்களைப்போல் சரிசமமான உரிமைகளையும் பொறுப்புகளையும் இந்தியா ஏற்றுக்கொண்டு ஏகாதிபத்தியத்திலே சுதந்திரம் பெற்றுள்ள ஓர் அங்கத்தைப்போல் பங்காளியாக இருக்க வேண்டும்.



2. யுத்தத்துக்குப் பின், ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைப்பதற்காகச் செய்யப்படும் எந்த விதமான யோசனைகளிலும் குடியேற்ற நாடுகளுக்கு எவ்விதம் செல்வாக்கு இருக்குமோ அத்தகைய செல்வாக்கு இந்தியாவுக்கும் இருக்க வேண்டும்.

3. இந்தியாவினுடைய ஆட்சியானது இந்தியா கவர்ன்மெண்டால் நடத்தப்பட வேண்டுமே யொழிய இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியால் நடத்தப்படக்கூடாது. இந்தியா மந்திரி சபையை எடுத்துவிட வேண்டும்; அல்லது அச்சபையில் தகுந்த அளவு இந்தியப் பிரதிநிதிகள் இருக்குமாறு அச்சபையைத் திருத்தி யமைக்கவேண்டும். இந்தியாவுக்கு உதவி மந்திரிகளான இருவரிலே ஒருவர் இந்தியராக இருக்கவேண்டும். குடியேற்ற நாட்டுமந்திரியின் சம்பளம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பணத்திலிருந்து கொடுக்கப்படுவதுபோலவே, இந்தியா மந்திரியின் சம்பளமும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் வருமானத்திலிருந்து கொடுக்கப்படவேண்டும். குடியேற்ற நாட்டுமந்திரிக்கு குடியேற்ற நாடுகளின் ஆட்சியில் எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ அப்படியே இந்தியாவின் ஆட்சியில் இந்தியா மந்திரிக்கு அவ்வளவு அதிகாரத்துக்குமேல் இனிமேல் இருக்கக்கூடாது. வரவு செலவு, சட்டதிட்டஞ் செய்தல், நிர்வாகம் ஆகிய அம்சங்களிலே இந்தியாவுக்கு ஸர்வ சுதந்திரமும் இருக்கவேண்டும்.

4. உத்தேச சீர்திருத்தங்களிலே இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பே மிகவும் ஜீவாதாரமானது. மாகாண ஆட்சிக்கும் ஸ்தல சுயஆட்சிக்கும் இந்தியா கவர்ன்மெண்டே மூலகாரணமாயிருப்பதால், இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பு நன்கு திருத்தப்பட்டாலொழிய, மாகாண கவர்ன்மெண்டுகளின் விஷயத்தில் திறமையான சீர்திருத்தம் கிடைக்குமென்பது அசாத்தியமானதாகும். கவர்ன்மெண்டின் இலாக்காக்களிலே வேலைபார்க்கும் எவரும் கவர்ன்மெண்டில் ஒரு மெம்பராக இருக்கக்கூடாது. ஓர் இலாக்காவிலே வேலைபார்க்கும் தக்க உத்தியோகஸ்தரின் ஞானமும் அனு

போகமும் அந்த இலாகாவின் வேலையில் உபயோகப்படும்படி செய்யலாமேயொழிய, நிர்வாக சபையிலாவது மந்திரி சபையிலாவது அவர் ஸ்தானம் வகிக்கக்கூடாது.

5. இந்தியாவின் ஆட்சியானது கவர்னர் ஜெனரலாலும் சில மந்திரிகளாலும் நடத்தப்படவேண்டும். அந்த மந்திரிகளிலே அரைவாசிப் பெயராவது இந்தியராக இருக்கவேண்டும். அந்த இந்திய மந்திரிகளோ ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையிலே ஜனப் பிரதிநிதிகளா யுள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அந்த மந்திரிகள் 5-வருஷகாலம் அப்பதவியை வகிக்க வேண்டும்.

6. இந்தியாவிலே ராஜப்பிரதிநிதியின் சட்ட சபையில் 150 மெம்பர்கள்இருக்கவேண்டும். அந்தமெம்பர்கள்அனைவரும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாகவே இருக்கவேண்டும். ஆனால் இந்தியாவில் சீர் திருத்தம் ஏற்பட்டு அச் சீர்திருத்தம் ஸ்திரப் படும் வரையில் அந்த மெம்பர்களிலே ஐந்தில் ஒருபங்கு மெம்பர்கள் ராஜப்பிரதிநிதியின் மந்திரி சபையால் நியமிக்கப்படலாம். அவர்களிலே நாலில் ஒரு பங்கு தான் உத்தியோகஸ்தர்களாக இருக்கலாம்.

7. வருஷாந்த வரவு செலவு மதிப்புத் திட்டமானது சட்ட சபையில் ஆஜர் படுத்தப்படவேண்டும். ராணுவ சம்பந்தமான செலவைத்தவிர, மற்ற அம்சங்களின்வரவு செலவு மதிப்பெல்லாம் சட்ட சபையின் மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

8. மாகாண கவர்ன்மெண்டுகள் ஸர்வ சுதந்திரங்களுடன் இருக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணமும் தனது ஆதாய மூலங்களை விருத்தி செய்து அனுபவித்துவரும்படி யிருக்க வேண்டும். இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஓரளவு பணத்தைக் கொடுக்கவேண்டு மென்பதைத் தவிர, மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு எல்லா சுதந்திரங்களும் இருக்கவேண்டும்.

9. மாகாண கவர்ன்மெண்டின் ஆட்சியானது ஒரு கவர்னராலும் சில மந்திரிகளாலும் நடத்தப் படவேண்டும். அந்த



மந்திரிகளிலே அரைவாசி இந்தியராக இருக்கவேண்டும். அந்த இந்தியர்கள் மாகாண சட்ட சபையின் ஜனப்பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

10. பெரிய மாகாணங்களின் சட்ட சபைகளில் 100 மெம்பர்களும் சிறிய மாகாணங்களின் சட்ட சபைகளில் 75 மெம்பர்களும் இருக்கவேண்டும். அந்த மெம்பர்கள் அனைவரும் ஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் சட்ட சபையில் ஒரு பிரதிநிதியாவது இருக்க வேண்டும். சீர்திருத்தம் ஏற்பட்டு சிறிதுகாலம் வரையில் அந்த மெம்பர்களிலே பத்தில் ஒருபங்கு மெம்பர்களை மாகாண கவர்ன்மெண்டின் மந்திரிகள் நியமிக்கலாம். அவர்களில் நாலில் ஒருபங்கு பேர் உத்தியோகஸ்தர்களாக இருக்கலாம்.

11. ராஜாங்கத்தின் நீதி நிர்வாக அம்சங்கள் பூராவாகப் பிரிக்கப்பட்டு விடவேண்டும். நீதி பரிபாலனத்தின் அதிகாரமும் நீதி பரிபாலன இலாகாவில் வேலைபார்க்கும் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்தல், முதலிய சகல விஷயங்களும் ஹைகோர்ட்டுக்கு உட்பட்டிருக்கவேண்டும் இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தான் ஹைகோர்ட்டுகள் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

12. ஆயுதச் சட்டத்தை ரத்து செய்து விடவேண்டும். அல்லது அச்சட்டமானது ஐரோப்பியர், யுரேஷியர் ஆகிய இவர்களின் விஷயமாய் எப்படி அமுலில் இருக்கிறதோ அப்படித்தான் இந்தியர் விஷயத்திலும் அமுலில் இருக்கும் வண்ணம் அச்சட்டத்தை மாற்றி யமைக்கவேண்டும்.

13. இந்தியாவுக்கு தேசீய சேனையொன்று இருக்க வேண்டும். தகுந்த பத்திரமான பாது காப்புகளின் படி எல்லா வகுப்பினரும் அச்சேனையில் சேவிக்க லாயக்குள்ளவர்களாய் உரிமைபெற வேண்டும். சேனையிலே உயர்தரப் பதவிகள் ராஜ சக்கரவர்த்தியின் இந்திய பிரஜைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

14. தேசமெங்கும் பூராவான ஸ்தலசுயஆட்சி உடனே கிடைக்க வேண்டும். முனிஸிபாலிடிகள், ஜில்லா தாலுக்கா

போர்டுகள் ஆகிய எல்லாம் முழுவதும் சுய ஆட்சியுள்ள சபைகளாக இருக்கவேண்டும். அச்சபையின் மெம்பர்களும் சேர்மென் என்ற தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அச்சபையின் விஷயமாய் சட்டப்படி கவர்ன்மெண்டார் பார்க்கக்கூடிய அதிகாரத்தைத்தவிர, உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்துக்கு அச்சபைகள் உட்பட்டிருக்கக்கூடாது.

15. ஆரம்பக்கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் ஏற்படவேண்டும். பூர்வீக தேசக் கைத்தொழில்களை விருத்திசெய்வதற்கும் அவைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

மேலேகண்டவைதான் நமது கண்டிப்பான கோரிக்கைகளின் சுருக்கமாகும். அக் கோரிக்கைகள் இன்ன காலத்திற்குள் கைகூடவேண்டுமென்று நாம் ஒரு வரம்பு கட்டிச்சொல்வதற்கில்லை. ஏனென்றால், எவ்வளவு காலம் யுத்தம் நீடித்திருக்குமென்பது நிச்சயமில்லை. சீர்திருத்தங்கள்ஏற்பட்டதும்,அவைகள் ஸ்திரப்படுவதற்கு ஓரளவு காலம் செல்லும். மேலே கண்டயோசனைகளில் சிலவற்றை உடனேகைகூடும்படி செய்துவிடக்கூடும். அவ்விதம் செய்யவும் வேண்டும். அவைகளைக் கைகூடுமாறு செய்வதற்கு யுத்தத்தின் முடிவுவரையில் காத்திருக்கவேண்டியதில்லை. இனி; ஏகாதிபத்தியத்தைச் சீர்திருத்தியமைப்பதற்கான காலம் வரும்பொழுதுதான், மேலே கண்டயோசனைகளில் சிலவற்றைக் கைகூடுமாறு செய்யும்படியிருக்கும்.

ஜனங்களுக்கு சாந்தமும் திருப்தியும் உண்டு பண்ணுவதற்கும், கவர்ன்மெண்டின் வருங்காலக் கொள்கையில் ஜனங்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்குமாக தேச நிர்வாகத்தில் ஒவ்வோர் அம்சத்திலும் நிதர்சனமான அடையாளங்கள் தோன்ற வேண்டும். வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமலும், அனுஷ்டானத்தில் அபிமானம் காட்டாமலும் இருப்பதால் ஜனங்களுக்கு மனத்திருப்தி ஒரு நாளும் ஏற்படாது. இப்படியாகத் தான் முன்னேற்ற மடையவேண்டுமென்று நாம்



திருப்தியுடன் இருக்கவேண்டும். நாம் உயர ஏறும்பொழுது அடிபடியிலிருந்தே நிதானமாகவும் ஜாக்கிரதையாகவும் ஏற வேண்டும். ஓரடி உயர ஏறி இரண்டடி கீழே விழுந்துவிடின், அதில் பயனில்லை. நமது முன்னேற்றம் மெதுவாக இருந்த போதிலும், முடிவில் நமது லட்சியம் கைகூடி விடுமென்ற நிச்சயங்கொண்டு முன்பு அடைந்ததை நாம் இழக்காமல் இருக்கவேண்டும்.

## பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டி

காங்கிரஸின் கிளையாக லண்டனிலிருக்கும் பிரிட்டிஷ் காங்கிரஸ் கமிட்டியைப்பற்றி ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்தில் இந்தியாவைப்பற்றின இராஜீயப் போராட்டத்தை நடத்தவேண்டும். நமது கட்சி இன்னதென்பதை பிரிட்டிஷார் நன்கு உணர்ந்து ஒரு முடிவுக்கு வருமாறு நாம் லண்டனிலே முயற்சி செய்யவேண்டும். நமது செய்திகளை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்காக நாம் ராய்ட்டரை எதிர்பார்க்கக் கூடாது. இங்கிருந்துவேலை பார்த்துவிட்டு இங்கிலாந்தில்போய் தங்கிவிடும் ஆங்கிலோ இந்தியர்கள் தங்களுடைய குற்றங்களை எடுத்துச்சொல்லிக்கொள்ள மாட்டார்கள். இங்கே ஆட்சியில் நன்மையாயுள்ள ஸபைகளெல்லாம் கவர்ன்மெண்டினாலானவைகளென்று சொல்லி, கெடுதலாயிருப்பவைகளையெல்லாம் நம்மீது சுமத்தி, கண்டிப்பான அடக்கு முறைகளை எடுத்துக் கொள்ளவதற்குள்ள காரணங்களைக் கற்பிக்கவும் மேல்பூச்சாகக் காட்டக்கூடிய தேசநிர்வாக ரிபோர்ட்டுகள் இருக்கின்றன. இவ்விதம் ஒருதலைச் சார்பாய் பூச்சுப்பூசிச் சொல்லும் ரிபோர்ட்டுகளிலுள்ள கதைகளைபிரிட்டிஷ் சமூகத்தினர் எளிதில்நம்பி, நமது கட்சியை அறியாததனால்; இந்திய தேச நிர்வாகமானது குறைவின்றி யிருப்பதாக கருதிவிடுகின்றனர். ஆகவே, நமது விஷயங்களையும் குறைகளையும் பிரிட்டிஷ் சமூகத்தினருக்கு நாம் நன்கு எடுத்துச் சொல்வதற்காக லண்டனிலே நமக்குப் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமே. அவ்விதம் நமது பிரதிநிதி

யாக ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் நமது நிமித்தம் பாடுபட்டுவருகிறார். ஸர்ஹென்றி காட்டனுடைய குமாரரான மிஸ்டர் எச். இ. எ. காட்டனும் இந்தியாவினிமித்தம் நல்ல ஊழியம் செய்துவருகிறார்.

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் கமிட்டியும் அதற்கு அங்கமாயுள்ள இந்தியா என்ற பத்திரிகையும் நின்றுவிடாமல் நடைபெறும்படி நாம் செய்யவேண்டும். அக்கமிட்டியிலே சாசுவதமாக ஓர் இந்தியர் இருந்து வேலைசெய்துவர வேண்டியது மிகவும் அவசியம். அதற்காக நிரந்தரமான ஒருநிதிவேண்டும்; வருஷந்தோறும் காங்கிரஸ் சபை அக்கமிட்டிக்குச் சிறிது பிச்சை கொடுப்பதும், அதிலும் கொடுக்கப்படவேண்டிய தொகை அதிகமாகவும் கொடுபட்ட தொகை குறைவாகவும் இருந்துவருவதும், சரியல்ல. வீணா ஆடம்பரங்களிலே தேசத்தில் ஏராளமான பணம் செலவாகிறது. தேசத்தினரை உயர்த்தவேண்டி நாலுலட்சம் ரூபாயை நாம் சேகரிக்கமுடியாது போயின், தாழ்ந்த ஜாதியினரென்று நம்மையாளுவோர் நினைத்து நம்மை நடத்துவதும் வீண்பேச்சுக் காரர்களென்று நமது எதிரிகள் நம்மைச் சொல்வதும், சரியே யாகும்.

## முடிவுரை.

இச்சபையிலுள்ள வாலிபர்களுக்கு முடிவில்சிலவார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். எனது தேசத்தினரும் வாலிபர்களுமாகிய நண்பர்களே! இனிமேல் தேச க்ஷேமத்திற்கு நீங்களே ஜவாப்தாரிகள். ஒரு தலைமுறையார் சம்பாதித்த பொருளானது அடுத்த தலைமுறையாரின் ஆஸ்தியாகிறது. ஒவ்வொரு தலைமுறையாரும் அந்த ஆஸ்தியைப்பெற்று அனுபவிப்பதோடு அதை வலுப்படுத்தி விருத்திசெய்து அடுத்த தலைமுறையாருக்குக் கொடுக்கவேண்டு மென்பதும் கடமையாகும். தேச முற்போக்குக்கு உரிய போராட்டத்திலே இதற்கு முன் உழைத்து வந்தபலர் இம்மண்ணுலகைத் துறந்து விட்டனர். இன்னும் சிலரோ இவ்வுலகை விடும் தருவாயில் இருக்கின்றனர். ஆகவே நீங்கள் முன்வந்து அவர்களுடைய கொடி



யைத் தாங்கிப்பிடித்துக் கொள்ளவேண்டும். எவ்வளவு மேன்மையான தேசத்தில் நீங்கள் உதித்திருக்கிறீர்களென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உலகத்தின் ஆரம்பகாலத்திலே வேதமும், அதற்கப்பால் குரானும் அதற்கப்பால் பார்ஸிய கிரந்தமும் உண்டாயின. மூன்று நதிகள் ஒன்றாய்ச் சேருவதுபோல் மிகவும் புராதனமாய் நாகரீகத்துக்கு அடிப்படையான அம்மூன்றும் உங்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்துள்ளன. உங்களுக்காகவே வியாசரும், வான்மீகியும் பதஞ்சலியும் மேலான தத்துவங்களை எழுதிவைத்தனர். வாழ்விலுள்ள அதிசயமான அற்புதங்களை கீதை சொல்லுகிறது. ஸகோதரபாவத்துடன் இருக்கவேண்டுமென்று போதித்தவரும் மனித வர்க்கத்தினருக்கு மிக்க நன்மையைத் தேடியவருமான கௌதம புத்தர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இங்குதான் தோன்றினார். அன்பு, சரிசமத்துவம் முதலியவைகளைப் போதித்த ஸ்ரீசைதன்னியா 500 வருஷங்களுக்கு முன்னே இந்தியாவில் தான் தோன்றினார்.

இனி தற்காலத்திய நாகரீகமோ ஈசுவரசிருஷ்டியை நாசப்படுத்தும் பயங்கரமான ஆயுதங்களை உண்டு பண்ணுவதாய் இருக்கிறது. ஆனால் பூர்வகாலத்தில் நாம் மேன்மையுடன் இருந்தோமென்று புகழ்வதோடு மட்டும் நாம் நின்றுவிடவேண்டாம். இந்த உலகத்திலே மாறுதல்கள் என்ற பேரலை தோன்றிப் பரவியிருக்கிறது. இந்தியாவிலும் அத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவின் பிற்கால நிலைமையானது உங்களையே பொறுத்திருக்கிறது. ஆகவே பிற்காலத்தில் உண்டாகக்கூடிய நிலைமையை நீங்கள் சீர்படுத்தவும் முடியும்; கொடுக்கவும் முடியும்.

இந்த சமயத்திலே தேச புத்திரர்களின் முதற்கடமையென்னவென்று என்னைக் கேட்டால் தேசாபிமானமாய் இருப்பதே யென்று தாமதமின்றிச் சொல்வேன். இரண்டாவது கடமையும் தேசாபிமானமே. மூன்றாவது கடமையும் தேசாபிமானமே. தலைகால் தெரியாமல் கிளம்பி விபத்துக்கு ஆளாவதும், மனோவிகாரங்களுக்கு உட்பட்டு நியாயத்

துக்கு கட்டுப்படாமலும் இருப்பது தேசாபிமானமல்ல. ஆனால் மூளையைப் பிரகாசப்படுத்தி, மேலான மனதை யுண்டு பண்ணும் மிகவும் அருமையான குணமே தேசாபிமானமாகும். அத்தகைய அருமையான குணத்தினால் ஒருவன் தான் என்பதையும் தனதுகாரியம் என்பதையும் மறந்து, தேசத்தின் நன்மையைக் கவனிக்கும் பொழுது தானும் தனது நன்மையும் கடலில் ஒரு துளிக்குச் சமானமென்பதையும் உணர்ந்து தன்னயப் பரித்தியாகத்திலேயே காலந்தள்ளும்படியாகும். தேச முற்போக்கில் கவனஞ் செலுத்தி, உழைக்கும் இந்தியருக்குத் தங்களுடைய தேசமே மதமாக இருக்கவேண்டும். இந்த போதனையானது குருக்களால் போதிக்கப்படாமல், தனது மனத்தினாலேயே போதிக்கப்படும். மேலும் அத்தகையோருக்கு தேசக்ஷேமலாப விருத்தியே பக்தியாகும். அதனால் யாவரும் ஒன்று அல்லது சமத்வம் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். அசூயை விரோதம் முதலியன அடக்கப்படவேண்டும்.

தவிர உங்களுக்குள் விரோதத்தன்மைக்கு இடமான அபிப்பிராயபேதங்களும்அடக்கப்படவேண்டும்.மிகவும்மேலான பொதுகாரியத்தை யுத்தேசித்து உங்களுள் அபிப்பிராய பேதங்களை மறந்துவிடுங்கள். யாவரும்தீவிரமான ஒற்றுமையுடன் தோளோடு தோள் கலந்து முயற்சிசெய்து வெற்றி பெற வேண்டும் என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் மனிதர்களைப்போல் நாம் வாழமுடியாது போயின் நாம் உயிரோடிருப்பதின் பயனென்ன? காரியசித்தியில்தீவிரமாயும் கண்ணுயுமிருங்கள்;, உங்களுடைய தன்மையானது புருஷத்தனத்துடனும் கௌரவத்துடனு மிருக்கவேண்டும். முயற்சி செய்து காரியத்தை நடத்துவதில் நிதானமும் ஜாக்கிரதையும் கொண்டிருங்கள். அரசரிடம் பக்திகொண்டிருங்கள். தேசத்தினிடமும் பக்திகொண்டிருங்கள். உங்களுடைய வேலை கஷ்டமானது.

ஆதலின் நீங்கள் அனுஷ்டிக்கும் மார்க்கங்களோ சட்ட சம்மதமாக இருக்க வேண்டும். சுயேச்சை அல்லது சுதந்



திரத்தை அடைந்து விட ராஜபாட்டையென ஒன்றில்லை. முயற்சி செய்துகொண்டே போகும்பொழுது அபஜெயமும் கஷ்ட நஷ்டங்களும் உண்டாகத்தான் உண்டாகும். அவ்விதம் அபஜெயம் உண்டாகும் பொழுது உங்களுடைய பின்பலம் இன்னும் உறுதிப்படத்தான் வேண்டும். அதைரியமடைய வேண்டாம். ஏனெனில், அதைரியமடைந்தால், காரியத் தவறு ஏற்பட்டுவிட'இடமுண்டாகும். கடிகாரத்தில் பெண்டுலம் முன்னும் பின்னும் போய்க்கொண்டிருக்கும். ஆயினும் காலமானது கடந்துகொண்டேயிருப்பதைக் காணலாம். நீங்கள் பிறருடைய கையை எதிர் பாராமல் முழு மனதுடன் முற்போக்குக்காகப் போராடத்தீர்மானமாய் இருக்கவேண்டும். கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். "கடவுளும் எனது பாத்தியமுமே லட்சியங்கள்" ஆகக்கொண்டு நீங்கள் தீர்மானமுடன் முயற்சிசெய்யவேண்டும். பெரிய ஆசையைக் கொள்ளுங்கள்; ஆனால் கர்வமடைய வேண்டாம். பணிவுடன் இருக்கவேண்டுமாயினும், மேன்மையும் புருஷத்வமும் சௌகரியமும் கொண்டு வாழ்வையடைய ஆசைவேண்டும். முன்னம் உங்களுக்கிருந்து மறைந்து விட்ட பெருமைகளைத் தவிர, எதைக்கண்டு நீங்கள் இச்சமயம் பெருமை பாராட்டுவது?

காங்கிரஸ் சபையின் தந்தையெனப் படுபவர் முன்னம் உருக்கமாகச் சொல்லிய வண்ணம் உங்களுடைய செல்வம் படிப்பு, பயனற்ற பட்டங்கள், ஈனமான வியாபாரம் ஆகிய இவைகளால் யாது பயன்? உண்மையான சுய ஆட்சி யுண்டாயின் அதனால் பயனுண்டு. ... னரும் தாங்கள் முயற்சி செய்தே வன்மை ...றுகி..."

76800

## முஸ்லிம் லீக் மகாசபை.

### உபசரணைக் கமிட்டி சேர்மனுடைய பிரசங்கம்.

சென்ற வருஷம் டிசம்பர் மாதக்கடைசியில் எல்லா இந்திய முஸ்லிம் லீக் மகாசபை லக்ஷ்மண புரியில் கூடியபொழுது, அச்சபையின் உபசரணைக் கமிட்டி சேர்மனுன் மிஸ்டர் நபிபுல்லா என்பவர் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசியதின் சாராம்சம் என்னவென்றால்:—

### ஆட்சியில் தக்க சீர்திருத்தம்.

இந்தியாவின் ஆட்சியில் தக்க சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென்பது அவசியம். ஆகவே புதுமாதிரியான நிலைமை ஏற்படும்பொழுது அந்த நிலைமையில் இன்னின்ன மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்று ராஜீயத் தலைவர்கள் விவகரிக்கவேண்டும். இனிமேல் இந்தியாவை இங்கிலாந்து நோக்கும் திருஷ்டியானது மாறவேண்டுமென்று யுத்த ஆரம்பகாலத்திலே இந்தியாவின் உதவி மந்திரியான மிஸ்டர் ராபர்ட்ஸ் சொன்னர். அவ்விதம் இந்தியாவைப்பற்றி இங்கிலாந்தின் திருஷ்டி மாறுவதாயின்;இராஜாங்கக் கொள்கையும் லட்சியமும் மாறவேண்டும். ஜனங்களை நம்புவதென்றும், தேசநிர்வாகத்தில் இந்தியரின் செல்வாக்கே வளர்ந்துவர வேண்டுமென்றும் ஏற்பட்டாலொழிய, இந்தியாவைப்பற்றிய திருஷ்டி மாறுமென்ற வார்த்தை வீணுகும்.

### சில விஷயங்கள்.

எனவே இந்திய ஜனங்கள் தங்களுக்குள் ஒரு மனப்பாடு கொண்டு, ஆட்சியில் நமது செல்வாக்கு செல்வதற்கான எந்த முயற்சியையும் பரித்தியாகத்தையும் செய்யவேண்டும். இதற்கு முன் நம்மிடம் உபேட்சையும் ஒருவிதமான மனப்போக்கும்



காட்டியவர்கள் இனிமேல் நம்மிடம் எவ்வளவு அபிமானமும் ஆதரவும் காட்டுவார்களாயினும், நாம் உழைத்துமுன் செல்ல வேண்டியமார்க்கமோ சுலுவானதல்ல; மிருதுவானதுமல்ல; ஆனல் ஸ்தல அதிகாரிகளுக்கு இவ்வளவு செல்வாக்குண்டென்பதையும் தாங்கள் இஷ்டப்பட்டால் ஜனங்களின் விருப்பத்தைக் கெடுக்க அந்த ஸ்தலஅதிகாரிகளால் எவ்வளவு முடியுமென்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்களா?இனி நமக்கு எதிரிடையாக இன்னும் சிலர் உளர். அன்னியராகிய அவர்கள் நம்முடைய அபிவிருத்திக்கு அடிக்கடி எதிரிடையாய் இருப்பவர்கள். இச்சமயத்திலே நாம் ஒற்றுமையும் தேசாபிமானமும் கொண்டிருக்க வேண்டுமென்பதே நமது லட்சியம் கைகூடுவதற்கு ஏற்ற சஞ்சீவியாகும்.

### ஒற்றுமையும் தேசாபிமானமும்.

அனைவரும் ஜாதி வகுப்பு மதம் முதலிய வித்தியாசங்களை மறந்துவிடவேண்டும். தேசஜனங்களில் ஒவ்வொரு வகுப்பினருடைய தேசாபிமான உணர்ச்சியும் கடமையும் இந்த சமயத்தில் தான் புலப்பட வேண்டும்.அவ்விரண்டும் இச்சமயம் பரீட்சையில் இருக்கின்றன. இராஜீயவிஷயமாய்ப் போராடுவதில் முகம்மதியர் தயாரென்று மற்ற வகுப்பினருக்கு நான்சொல்லுகிறேன். முகம்மதியரின் இராஜீய அந்தஸ்தைக் காப்பதற்கும் சுயஆட்சியை அடைவதற்கும் இதர வகுப்பினருடன் ஒத்துழைப்பதற்குமே இந்த எல்லா இந்திய முஸ்லிம் லீக் மகா சபை காத்திருக்கிறது. முகம்மதியரின் தொகையோ சொற்பம். ஆகவே சொற்பமான முகம்மதியருடைய நன்மைக்குச் சில பாதுகாப்புகள் அவசியம். முகம்மதியருடைய நன்மைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைக் குறித்து ஹிந்துக்கள் ஆட்சேபித்தலாகாது. எப்படியிருந்தாலும் ஹிந்துக்களின் தொகையே அதிகமாயுளது. என்றாலும் இந்தியாவின் பற்பல பாகங்களிலுமுள்ள ஹிந்து ஜனத் தலைவர்களோ இராஜீய விஷயமாய் முகம்மதியரின் நன்மையைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் சம்மதத்துடன் இருக்கின்றனர். இதைக் கண்டு எனக்கு மிக்க ஆறுதல் உண்டாகிறது.

ஏகாதிபத்தியத்துக்குள்ளடங்கிய சுயஆட்சி பெறவேண்டுமென்பதில் நாம் அனைவரும் ஒரு மனதான ஒற்றுமையுடன் இருக்கவேண்டும். இந்திய ஸ்திரீக்குப் பிறந்த எவராவது அந்த ஆசைக்கு எதிரியாய் இருக்கின்றனரோ? சுயஆட்சி என்ற லட்சியத்தை யடைய எந்தவிதமான முயற்சியையும் செய்துதீர வேண்டும். அதற்கு எந்த விதமான பரித்தியாகமும் செய்யப் பட வேண்டும்.

---

## கனம் முகம்மது அலி ஜின்னாவின் பிரசங்கம்.

---

**மேற்படி மகாசபையில் அக்கிராஸ்தானம் வகித்த கனம் முகம்மது அலி ஜின்னா M. A. செய்த பிரசங்கத்தின் முக்கியமான ஸாராம்சம் பின் வருமாறு:—**

### இந்தியா.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அடங்கியிருக்கும் பல வேறுபட்ட ஜன சமூகங்களுக்கும் இவ் விஷயங்கள் மிக முக்கியமானவை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் திருத்தி அமைக்கும்பொழுது, இந்தியாவின் ஆளுகையை எப்படி திருத்தி அமைக்கிறதென்பதே பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்குப் பெரிய கவலையான விஷயமாயிருக்கும். இரண்டு விஷயங்கள் முக்கியமாக கவனம் பெறவேண்டும். மேனாட்டு குணத்தை யுடையதாகவும் மேனாட்டு முறைகளை அனுஷ்டிக்கிறதாகவுமுள்ள பிரிட்டிஷ் ஆட்சி இப்பொழுது இந்தியாவில் நடந்து வருகிறது. எந்தக் காரியத்தையும் ஆரம்பம் செய்யவும் மேல் நடத்தவும் முடிவுக்குக் கொண்டுவரவும் கூடிய சக்தி அந்த ஆட்சியை நடத்துவோருடைய கையிலேயே இருக்கிறது. தேசத்தில் சமாதானம் நிலைத்திருக்கும்படி மேனாட்டு ஆட்சி செய்து, பட்சபாதமில்லாமல் நீதி வழங்கி



வந்திருப்பதுடன், மேனாட்டுப் படிப்பைக் கொண்டு மேனாட்டு லட்சியங்கள் நமக்கு உண்டாகும்படி செய்து வந்திருக்கிறது. ஒற்றுமையை உண்டு பண்ணும் சக்தி தோன்றி பலம் பெற்றிருப்பது அடுத்த விஷயம். பல ஜாதிகளுக்குள்ளும் பல மதத்தினருக்குள்ளும் ஒற்றுமை உணர்ச்சியை உண்டு பண்ணி, ஒரே லட்சியத்தையும் ஒரே நினைப்பையும் உண்டுபண்ணி இருக்கிறது. அதாவது என்னவென்றால், பெரிய சக்தியை உடைய அதிகாரி வர்க்கம் ஒன்று ஊன்றி இருக்கிறது. அது பார்லிமெண்டுக்குத்தான் ஜவாப் சொல்லக் கடமைப்பட்டது; ஏதேச்சையாக அது ராஜரீகத்தை நடத்திவருகிறது. ஆனால் அந்த அதிகாரி வர்க்கத்தால் ஆளப்படுகிற ஜனங்களோ, பிரக்ஞை பெற்றெழுந்து ராஜீய சுயேச்சைக்காக போராடுகிறார்கள். இது தான் உள்ள நிலைமை. இவ்விரண்டுக்கும் மத்தியில் ஓர் ஏற்பாட்டை உண்டுபண்ண வேண்டியது பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் பொறுப்பாக இருக்கும். காரண காரியங்களை மாத்திரம் யோசித்து ஏற்பாடு செய்வதாயிருந்தால் அது பிரயாஸமாயிராது. ஆனால் காரண காரியத்தை மாத்திரம் யோசிக்கிறவர்கள் இருப்பது அரிது.

மனுஷ்யன் மனுஷ்யனே யல்லாமல் தெய்வமல்ல. எத்தனையோ காமக்குரோதங்கள் குறுக்கிடும். தேசத்தின் நிர்வாகத்தை நடத்தும் பெரிய உத்தியோகஸ்தர்கள் திறமைசாலிகள் தான். பிரயாசைப்படுகிறவர்கள் தான். ஆனால் சில தப்பெண்ணங்கள் அவர்களுக்குண்டு. பழமையையே அவர்கள் பாராட்டும் தன்மையுடையவர்கள். துணிச்சலுடன் ஒரு பெரிய மாறுதலைச் செய்யக்கூடாதவர்கள். தங்களுக்குள்ள அதிகாரத்தை விட்டுக் கொடுத்து தேச நிர்வாகத்தை நடத்தும் விஷயத்தில் இந்தியரைச் சேர்த்துக்கொள்ள இஷ்டப்படாதவர்கள். ஆகையால் இந்தியாவில் புதிதாய்த் தோன்றியிருக்கிற உணர்ச்சிமுதலியவைகள் தங்களுக்குத் தொந்தரவாயிருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள்; அதாவது என்னவென்றால், ஒரு பிரமாதமான வகுப்பு சிரத்தை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தான் ராஜீய சம்பந்தமாக பல தப்புக்கொள்கைகள் அடிக்கடி சொல்லப்

படுகின்றன. உதாரணமாக அவைகளில் இரண்டொன்றைக் கூறுவோம்.

## ஆக்ஷேபங்களுக்கு மறுமொழி.

கீழ்த்தேசங்களில் ஜனாதிக்க ஸ்தாபனங்கள் விருத்தியடைய மாட்டாவாம். ஏன்? ஜனாதிக்க ஸ்தாபனங்களை ஹிந்துக்களும் முகம்மதியரும் அறியாதவர்களோ? கிராம பஞ்சாயத்து என்பது என்ன? இஸ்லாம் மதத்தின் சரித்திரம், கதைகள், கிரந்தங்கள், கொள்கைகள், முதலியவை ஜனாதிக்கத்தையே ஆதாரமாகக் கொண்டவை. இந்தியாவுக்கு ஏற்ற ஆட்சி ஏதேச்சை யாட்சியாம்; திறமையும் நல்ல நடத்தையும் உள்ள ஐரோப்பியரால் அது நடத்தப் படவேண்டுமாம். உலகத்தில் ஒவ்வொரு தேசமும் ஒரோர் காலத்தில் ஏதேச்சாதிக் காரத்துக்கு உட்பட்டுத் தான் இருந்திருக்கிறது. ஆயினும், ஏதேச்சாதிகாரத்தை அடக்குவதற்காக, பிரான்ஸும் இங்கிலாந்தும் எவ்வளவு போராட்டம் செய்திருக்கின்றன? பிரிட்டிஷ் ராஜரீக முறையை அனுசரித்து சீனாவும் ஜெப்பானும் ஜனாதிக்க ஆட்சியை ஏற்படுத்தியிருக்கையில், இந்தியா மாத்திரமா எக்காலமும் அதிகாரி வர்க்கத்துக் குட்பட்டிருக்கவேண்டும்? படித்த இந்தியருடைய நன்மை ஜனத்திரளின் நன்மைக்கு விரோதமாக இருக்கிறதாம்; ஜனத்திரளை வலுவுடன் காத்துவரும் பிரிட்டிஷாரின்கை ஒதுங்கி விட்டால் படித்தவகுப்பார் படிக்காத வகுப்பினரைத் துன்பப்படுத்துவார்களாம்.

படித்த வகுப்பாராகிய நாம் அநேகமாக மத்திய ஸ்திதியிலுள்ள ஜனங்களின் சந்ததிகளே. ஜனங்களோ நமக்கு உறவினர். நமக்கு அதிகாரம் கொடுத்தால் நாம் அவர்களைத் துன்பப்படுத்துவோமாம். ஆகையால் இந்தியர் அல்லாதவர்களின் கையிலேயே அதிகாரம் இருக்கவேண்டுமாம்; அதிகாரி வர்க்கம் வெகுகாலம் அதிகாரத்தை குத்தகையாய் அனுபவிக்கும்படி இந்தக் கட்சி சொல்லப்படுகிறது. காங்கிரஸின் நடவடிக்கை



களையும், முஸ்லிம் லீக்கின் நடவடிக்கைகளையும் கவனித்தால் ஜனத்திரளின் நன்மைக்காகவே படித்த வகுப்பார் பாடு பட்டு வந்திருப்பதாகத் தெரியும்.

## இந்தியா இந்தியர்களுக்கு.

இந்தியாவைப்பற்றின விஷயம் பைசல் ஆகவேண்டியதில் கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள் இவை. தேசாபிமானிகளின் எண்ணங்கள் நிறைவேறும் வழியில் இவை பெரிய இடையூறுகளாயிருக்கும். ஒரு புறத்தில் ஒரு சிரத்தை விசேஷ பலமுள்ளதாயிருக்கிறது; எதிர்ப் புறத்தில் தேசத்தின் இஷ்டமும் புத்தியும் ஒன்றாய்த் திரண்டு உருவெடுக்காமல் இருக்கின்றன. ஆனால் ஒரு நியாயம் புலமாயிருக்கிறது; அதென்னவெனில், இந்தியாவானது இந்தியருக்கே முதலிலும் கடைசியிலும் புகலிடமா யிருக்கவேண்டுமென்பதே. உடனேயோ கொஞ்சகாலம் கழித்தோ, இந்தியர் சுய ஆட்சி அடைந்து நிமிர்ந்து நிற்பார்கள். அவர்களுடைய விதியை எந்த சக்தியும் மாற்ற முடியாது. ஏனெனில் பிரிட்டிஷ் ஆட்சியின் பலனாக ஜாதி அபிவிருத்தி உண்டாய் வருகிறது. அதை எதிர்ப்பதாலும் அசட்டை செய்வதாலும் என்ன பிரயோஜனம் உண்டாகும்?

## அதிகாரிகளின் மனோபாவம்

இந்தியர்கள் சிருஷ்டியில் கடைப்பட்டவர்கல்லரென்றால் மற்ற தேசங்களில் மனுஷ்ய ஜாதியை இயக்கும் சட்டங்கள் இந்தியரையும் இயக்குமாகில், மற்றவர்களைப்போல் அவர்களும் யோசனை செய்து தங்களுக்கு நன்மையான விஷயங்கள் இன்னவை யென்று முடிவுசெய்யக் கூடுமானால், இந்தியரும் சுய ஆட்சியை அடையவேண்டியது தான் நியாயம். இந்திய தகுதியில்லாதவர் என்பது வீண் பிதற்றல்; அது நிற்காது. சிருஷ்டியின் சட்டங்கள் மேற்கிலொரு தினுஸாயும் கிழக்கில் ஒரு தினுஸாயும் இருக்கவில்லை. சுய ஆட்சி பெற இந்தியா ஆசைப்படுதல் விபரீதமு

மல்ல, பாவமுமல்ல வென்று பொறுப்பு வாய்ந்த பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் சமீபத்தில் சொல்லியிருக்கின்றனர். இதுநமக்கு ஒரு பெரியதேறுதல். இந்தியரின் ஆசை கிரமமானதென்பதைமுதலில் லார்டு ஹார்டிஞ்சுதான் ஒப்புக்கொண்டார். நம்முடைய ஆசை அதிகாரிகளின் முகரைப்பெற்றுவருவதாகவும் தெரிகிறது. ஒரு விஷயம் கிரமமென்று ஒப்புக்கொள்வதற்கும், அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருகிறதற்கு மிடையில் வெகுதூர மிருக்கிறது. இந்தியத் தலைவர்கள் இந்த சமயத்தில் செய்யவேண்டியது என்ன வென்றால், குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் இந்தியா சுயஆட்சி அடையும்படி செய்யவேண்டியதே தங்களுடைய நோக்கமென நம்மைஆளுகிறவர்கள் ஒப்புக்கொள்ளும்படியும் அதற்கானவழியில் பிரவேசித்து துரிதப்படுத்தும்படியும் செய்யவேண்டும். இந்தலட்சியத்தை வைத்துக்கொள்ள அதிகாரிகள்அதிருப்தி அடைவதேநமக்குள்ள பெரிய தடை. தித்திக்கும் வார்த்தைகளால் பிரயோஜன மில்லை. அதிகாரிகள் நம்முடைய விஷயங்களில் செலுத்தும் திருஷ்டி விசாலப்பட்டு விட்டதாக நாம் ஒருவரை யொருவர் தட்டிக் கொடுத்துக் கொண்டு இருந்த விடம் வீட்டு அசையாமல் இருக்கக்கூடும். காரியத்தைச் செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. சுயேச்சை அடைய இந்தியா தகுதியுள்ளதா? அப்படியாயின் எவ்வளவு சுயேச்சை அடையலாம் என்பதே இப்பொழுது தீர்மானமாக வேண்டிய விஷயங்கள். இதற்கு ஒருபதிலும் சொல்லாமல் உள்ளே திணித்து விடமுடியாது. உண்டு அல்லது இல்லை யென்று அதிகாரிகள் ஏதேனும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். சுய ஆட்சிக்கு இந்தியா இன்று தகுதியில்லை ஏனல், தகுதியாகச்செய்யயட்டும். இதைச் செய்ய வேண்டியது கவர்ன்மெண்டின் பொறுப்பே.

## தகுதிக்கு அத்தாட்சி.

சுயஆட்சிக்கு நாம் தகுதியுள்ளவர்கள் என்பதற்கு இங்கே கூடியிருக்கும் நம்முடைய சித்தாந்தமே ஓர்அத்தாட்சி.



தேச ஊழியம் செய்யவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் ஆசைப்பட்டுப் பலவிதமான பந்தங்களாலும் கட்டுப்படாமல் வெளிப்பட்டுவரும் தேசாபிமானம் நம்முடைய தகுதியைக் காட்டுகிறது. இந்த உணர்ச்சி ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒற்றுமையை உண்டு பண்ணி விட்டதிலிருந்தே இது எவ்வளவு பல முள்ளதாயிருக்கிற தென்பது விளங்கும். காங்கிரஸ் மகா சபையும் முஸ்லிம் லீக் மகா சபையும் ஒரே இடத்தில் கூடின பாக்கியத்தை சென்ற வருஷத்தில் பம்பாய் அனுபவித்தது. அங்கு நமக்கு விரோதம் செய்தவர்களே நமக்கு உபகாரிகள்; அவர்களுடைய மனோநிலை நமக்கு பலத்தைக் கொடுத்தது. இவ்வருஷம் இந்த லக்நௌ நகரில் காங்கிரஸ் மகாசபையும் முஸ்லிம் லீக் மகா சபையும் ஒரே நோக்கத்துடன் கூடுகின்றன. ஹிந்துக்களும் முகம்மதியரும் சென்ற சில வருஷங்களில் ராஜியாய்ப் போய்விட்டதிலிருந்து ஏசப்பட்ட இந்தியா பிறந்து விட்டதை அறியாவன் கண்ணில்லாதவன்

## சீர் திருத்தங்கள்.

தேசத்தின் ஒற்றுமைக்கும் ஒத்துழைப்புக்கும் பாதகமாயிருந்த இந்த ஒரு விஷயம் திருப்திகரமாகப் பைசலாய் விட்டதால், நாம்பாதி ஜெயமடைந்துவிட்டோம் என்றுசொல்லலாம். காலத்தை அனுசரித்து நாம் செய்துகொண் டிருக்கிற கோரிக்கைகள் முடிவில் நிறைவேற்றி வைக்கப்படும். ஜனங்களுக்குள்ள குறைகள் அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்று இந்தியா கவர்ன்மெண்டை நடத்துகிறவர்களிடமிருந்து தெரிகிறது. சமாதானம் உண்டானதும், இந்தியாவின் பாத்தியம் ஒப்புக்கொள்ளப்பட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அது ஒரு சுயேசை யடைந்த நாடாகவேண்டும். இதை யெப்படிச் செய்கிறதென்று இந்தியத் தலைவர்கள் சென்ற இரண்டுவருஷகாலமாக யோசனைசெய்து வந்திருக்கிறார்கள். அதன் முடிவாக ராஜப் பிரதிநிதியின் சபையிலுள்ள 19 ஜனப்பிரதிநிதிகள் சில ஏற்பாடுகளைத் தெரிவித்துக்கொண் டிருக்கிறார்கள். காங்

கிரஸ் கமிட்டியுடன் கலந்துகொண்டு சில ஏற்பாடுகளை யோசனைசெய்து முடிக்கும்படி சென்ற வருஷக் கூட்டத்தில் நீங்கள் ஒரு கமிட்டியை நியமித்தீர்கள். இரண்டு கமிட்டிகளும் சேர்ந்து யோசனை செய்திருக்கும் ஏற்பாடுகள் இந்தக் கூட்டத்தில் உங்களுடைய அங்கீகாரத்துக்கு வரும்.

## பார்லிமெண்டில் சட்டம் செய்யவேண்டும்.

அந்த ஏற்பாடுகளை நீங்கள் அங்கீகரித்தான பிறகு, இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பைத்திருத்துவதற்காக, தகுந்த வக்கீல்களைக்கொண்டு ஒரு மசோதா தயார் செய்யப்படவேண்டும். அந்த மசோதா தயாரானதும் காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் அதை ஒப்புக்கொண்டு, பார்லிமெண்டில் அதை ஆஜர் செய்யுமாறு பார்க்கச் சில பிரமுகர்களை இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டும். அந்த உத்தேசம்நிறைவேறும்படிசெய்யப் போதுமான தொகையை நாம் வசூல் செய்யவேண்டும்.

## ஏகாதிபத்தியத்தில் இந்தியா.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் அந்தஸ்து எப்படியென்பது முதலில் நிர்த்தாரணம் ஆகவேண்டும். பின்னுடி எக்காலத்திலோ இந்தியா சுய ஆட்சி பெறுமென்று இல்லாமல், இந்தியா சுய ஆட்சி பெறும்படி செய்வதே தங்களுடைய உத்தேசமென்றும், கிரமமான காலத்திற்குள் சுயஆட்சி கொடுக்கப்படுமென்றும் கவர்ன்மெண்டார் அறிவிக்க வேண்டியது. இப்பொழுதுள்ள இந்தியா கவர்ன்மெண்டின் அமைப்பைத் திருத்தும் நோக்கம் அதுவாகவே இருக்கவேண்டும். அந்த உத்தேசம் நிறைவேறுவதற்கான காரியங்களை யுத்தம் முடிந்தவுடன் செய்யத் தொடங்க வேண்டும்.

## ஏகாதிபத்தியத்தின் அமைப்பு.

இப்பொழுது தோன்றி வரும் குறிகளைப் பார்த்தால்; யுத்தத்தை நடத்துவதற்கு, குடியேற்ற நாடுகள் தங்களு



டைய வீதப்படி உதவி செய்ய வேண்டுமாயின், யுத்தத்தை ஆரம்பம் செய்வதிலும் பிறகு சமாதானம் செய்வதிலும் தங்களுடைய வாக்கும் பங்கு பெற வேண்டுமென்று கானடா, ஆஸ்டிரேலியா, தென் ஆபிரிக்கா, என்ற நாடுகள் கேட்குமென்றும், அதற்கு இணங்க வேண்டியிருக்குமென்றும் தெரிகிறது. ஆகையால் ஏகாதிபத்தியப் பார்லிமெண்டு சபை ஒன்று தனியாய் ஏற்படும். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து ஆகிய இவைகளின் உள்நாட்டு ஆட்சிக்காகத் தனித்தனி பார்லிமெண்டு ஏற்படும். ஏகாதிபத்தியத்தை ஆளும் வேலையில் குடியேற்ற நாடுகள் பங்கு பெறும் என்று மிஸ்டர் போனர் லா சொல்லியிருக்கிறார். அவ்வாறு ஏகாதிபத்தியம் திருத்தி அமைக்கப்படும் பொழுது, இந்தியாவானது சார்பு நாடாகவே இருக்கவாவது, அல்லது குடியேற்ற நாடுகளும் சேர்ந்து அதை ஆளவாவது இடங்கொடுக்க முடியாது. இந்தியாவை ஆளும் பொறுப்பு இதுவரையில் பிரிட்டிஷ் தேசத்துக்கே ஏற்பட்டிருக்கிறது. குடியேற்ற நாடுகளும் சம்பந்தப்பட்டு ஏகாதிபத்தியப் பார்லிமெண்டு சபை ஒன்று உண்டாய் விட்டால், இந்தியாவின் நிலைமை என்ன? புது எஜமான்களுக்கு இந்தியா உட்படவேண்டியதா? குடியேற்ற நாடுகளும் நம்மைஆள்வதா? சகிக்கக்கூடாத அந்த நிலைமைக்குப்போய்ச் சேர, இந்தியா ஒரு நாளும் சம்மதிக்காது என்று படித்த இந்தியர் எல்லோரும் நினைப்பார்கள். இந்தியாவுக்கு வேண்டியது இன்னும் சில எஜமான்களாவது புது எஜமான்களாவது அல்ல. ஏகாதிபத்தியப் பார்லிமெண்டு சபை ஒன்று உண்டாகுமானால், அதில் இந்தியரும் ஸ்தானம் பெறவேண்டியதுதான்.

## நமது கோரிக்கைகள்.

நமது கோரிக்கைகள் இன்னவென்பதை ராஜப்பிரதிநிதியின் சட்டசபையிலுள்ள 19- ஜனப்பிரதிநிதிகள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னுங் குறைவாக நாம் கேட்கவே முடியாது. ஆனால்அவைகள் மிதமிஞ்சினவையென்று

சிலர் சொல்லுகிறார்கள். நாம் இன்னும் பக்குவமடையவில்லையென்கிறார்கள். ஆனால் மார்லிமிண்டோ-திருத்தங்கள் ஆலோசனையிலிருந்தபொழுது, இப்படித்தான் சொன்னார்கள். அவைகளைப்பற்றி இப்பொழுதென்ன சொல்லுகிறார்கள்? நம்முடைய கோரிக்கைக்கள் மிதமிஞ்சினவை யென்று சொல்லுகிறவர்கள், தாங்களாவது ஓர் ஏற்பாட்டைச் சொல்லவுமில்லை; ஆகையால் அது கட்டின வீட்டை இடிப்பதாகத் தான் இருக்கிறது. இந்தியா மந்திரிக்குத் தெரிவித்துக் கொள்ளுவதற்காகச், சில திருத்தங்களை, இந்தியா கவர்ன்மெண்டார் ரகஸ்யமாக யோசனை செய்து கொண்டிருக்கிறார்களாம். யுத்தத்திற்குப் பிறகு. ஏகாதிபத்தியத்தின் அமைப்பை எப்படி திருத்தவேண்டுமென்று இங்கிலாந்தில் குடியேற்ற நாடுகளின் பிரதிநிதிகளும், பத்திரிகைகளும், ஜனங்களும், மந்திரிகளும் தாராளமாய்ப் பேசுகிறார்கள். இந்தியாவிலோ கவர்ன்மெண்டார் செய்யும் யோசனைகூட நமக்குத் தெரியவில்லை. இந்தியாவின் பிற்கால நிலைமையை உத்தேசித்துச் செய்யப்படும் யோசனைகள், ஜனங்களுக்கு அறிவிக்கப்படாமல் முடிவு செய்யப்படுமானால், அது பெரிய துரதிருஷ்டமாயிருக்கும். ஆகையால் முடிவான யோசனை ஏற்படுமுன், ஜனங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்வதற்காக பிரேரணைகளைப் பகிரங்கப் படுத்த வேண்டுமென்பதை, கவர்ன்மெண்டுக்கு நான் வற்புறுத்துகிறேன்.

## ஹிந்து சகோதரர்கள்.

ஹிந்துக்களிடத்தில் நாம் ஒற்றுமை யுணர்ச்சியும் சகோதரப் பான்மையும் பாராட்டவேண்டும். நமது தேசமுன்னேற்றத்திற்காக,ஸகல சமூகங்களிடத்திலும் ஒற்றுமை பாராட்டுவதே நமது மூலாதாரமான கொள்கையா யிருக்க வேண்டும். இரண்டு பெரிய சகோதர சமூகங்களின் ஒற்றுமைப்பலத்தினால் தான், இந்தயா முன்னேற்றமடைய முடியும். நம்முடைய சொந்த காரியங்களில் நமக்கு நாமே உதவி செய்து கொள்ள வேண்டும். நம்முடைய சமூகத்திலேயே ஐக்கியத்தை



அதிகரிக்கச் செய்யவேண்டும். பிரிவினைக்குக் காரணமான மூலவஸ்துக்களை அடியோடே அகற்றியொழிக்க வேண்டும். நாம் ஒருவருக்கு ஒருவர் அன்பும் கூட்டுறவும் உள்ளவர்களா யிருக்கக் கடவோம். சமூகத்தின் நன்மைக்காக நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த லாபத்தையும், சொந்த ஆசையையும் தியாகஞ் செய்யவேண்டும். கட்சிப் பிரிவினையாலும், சில்லரைச் சண்டையினாலும் நாம் எவரும் எவ்விதலாபமும் அடைகிறதில்லையென்பதை மனத்திலிருத்துவோம். நம்முடைய சொந்த நன்மையை மாத்திரம் கருதி நாம் உழைக்கிறோமென்று பிறர் கருத நாம் இடங்கொடுக்கக் கூடாது. சகல ஜனங்களின் நன்மையையும் உத்தேசித்தே நாம் பாடுபடுகிறோ மென்பதை இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள நமது அபிமானிகள் உணர வேண்டும். அவர்களின் கூட்டுறவும் அபிமானமும் நமக்கு இன்றி யமையாத சாதனங்களாகும். நாம் இந்தியர்களென்ற முறையில் இந்திய ஜாதிய ஒற்றுமையை நாடி யுள்ளோமென்பதை, நமது வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் நாம் வெளிப்படுத்திக் காட்டவேண்டும். நாம் இப்படிச் செய்து வருவோமானால் 7 கோடி பெயர்களடங்கிய முஸ்லிம்கள் வேறெதற்கும் அஞ்ச வேண்டியதில்லை.

## மத வித்தியாசங்கள்.

சுமார் ஒரு வருஷத்திற்கு முன்னே நிஜாம் ராஜ்யத்தில் ஹிந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒரு சண்டையுண்டாயிற்று. ஹிந்துக்கள் நிறைந்துள்ள ஒரு ஸ்தலத்தில் முஸ்லிம்கள் மசூதியொன்றுகட்ட முயற்சிசெய்தமையால் இந்தசச்சரவு ஏற்பட்டது. ஹிந்துக்கள் வெகுவாய் ஆக்ஷேபித்தும் முகம்மதியர் கேட்கவில்லை. மசூதியை அந்த இடத்தில் கட்டுவதென்றே பிடிவாதமா யிருந்தார்கள். ஹிந்துக்கள் நிஜாம் அரசருக்கு மனுச் செய்துகொண்டார்கள். நிஜாம் அரசர் என்ன செய்தார்? இரண்டு முஸ்லிம் பிரபுக்களும் ஒரு ஹிந்து கனவானும் சேர்ந்த கமிட்டியொன்றை நியமித்து, இவ்விஷயமாய் விசாரணைசெய்து தீர்க்கும்படி ஆக்ஞாபித்தார். கமிட்டி

யார் ஹிந்துக்களுக்குச் சாதகமாய் அபிப்பிராயங் கொடுத்தார்கள். ஆகையால் அரசர் உடனே அதை அனுசரித்து தீர்ப்புக் கொடுத்தார். நிஜாம் அரசர் இப்படித் தீர்ப்புச் செய்ததானது, ஹைதராபாத்திலிருந்து அரசாட்சிசெய்த முகம்மதிய மன்னர்கள், தேசத்தைச் சிறப்புற ஆட்சி செய்வதில் வெகுகாலமாய் அனுஷ்டித்து வரும் முறையை அநுசரித்திருக்கின்றதென்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

பிரிட்டிஷார் வசமிருக்கும் இந்தியாவின் மற்றப்பாகங்களிலும், ஹிந்து முகம்மதிய வித்தியாசம் ஏற்படும்போது அதைத் தீர்க்க ஏன் இப்படிப்பட்ட முறை அனுசரிக்கப்படக் கூடாது?

## முடிவுரை.

இந்தியாவின் நற்கதி நமது கைளிலிருக்கின்றது. சுவாதீனத்தின் பொருட்டு என்ன பரித்தியாகம் செய்தாலும் தகும் ஆகையால், கடவுளை நம்பி நாம் பாடுபடுவோம். உலகத்திலுள்ள தங்கமனைத்தையும் சேர்த்து வைப்பதைவிட, நமது சந்ததியாருக்கு சுவாதீனத்தைச் சம்பாதித்து வைத்துவிட்டுப் போவது மேலானதாகும். ஆகவே அதன் பொருட்டு நாம் உழைப்போமாக!

---

## சுய ஆட்சித் தீர்மானம்

காங்கிரஸ் மகா சபையின் முன் ஆலோசனைக்கு வந்தது அங்கீகாரமான சுய ஆட்சித் தீர்மானம் பின்வருமாறு:—

இந்தியாவிலுள்ள பெரிய ஜன சமூகத்தினர் பூர்வீகமாகவே நாகரீக மடைந்த சந்ததியாராகையாலும், தேசத்தை ஆளும் விஷயத்தில் திறமையுள்ளவர்கள் என்பதை அவர்கள் காட்டியிருப்பதாலும், சென்ற 100 வருஷகாலமாய் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து கல்வியிலும் பொது நல உணர்ச்சியிலும் அவர்கள் மிக்க முன்னேற்றம் அடைந்திருப்பதாலும், இப்பொழுது ஆட்சி நடக்கும் முறையானது ஜனங்களுடைய கிரமமான



ஆசைகள் நிறைவேற இடங்கொடுக்காததாலும், இப்பொழுதுள்ள நிலைமைக்கு அந்த ஆட்சியானது ஒத்திருக்கவில்லையாகையாலும், இந்தியாவுக்கு சீக்கிரத்தில் சுய ஆட்சிகொடுப்பது தங்களுடைய உத்தேசமென்று ராஜ சக்கரவர்த்தி விளம்பரஞ்செய்ய வேண்டுமென்றும், சுயஆட்சியை உத்தேசித்து காங்கிரஸ் கமிட்டியும் முஸ்லிம் லீக்கமிட்டியும் கலந்துயோசனை பண்ணிதயார்செய்திருக்கிற, ஏற்பாடுகளில்கண்ட திருத்தங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து சுயஆட்சி சித்திப்பதற்கான வழியில் செல்ல ஆரம்பிக்கவேண்டுமென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் புதிதாய் திருத்தி அமைக்கும்பொழுது சார்பு நாடு என்ற ஸ்திதியிலிருந்து இந்தியாவைத் தூக்கிவிட்டு குடியேற்ற நாடுகளுக்கு சமமான அந்தஸ்தை அதற்குக் கொடுக்கவேண்டுமென்றும், காங்கிரஸ் மகாசபையினர் கேட்டுக்கொள்ளுகின்றனர்.

---

## பாபு சுரேந்திர நாத பானர்ஜி.

தீர்மானத்தை ஆதரித்து இவர் பின்வருமாறு பேசினார்:—

இத்தீர்மானத்தை இரண்டு பாகமாகப்பிரிக்கலாம். ஒன்று பூர்வ பீடிகை; மற்றது, காரியம் எப்படி நடத்தப்படவேண்டுமென்று சொல்லுகிறது. நம்முடைய கோரிக்கைக்குக்காரணம் பூர்வ பீடிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற 1915-ம் வருஷத்திலே காங்கிரஸ் மகாசபை பம்பாயில் கூடினதற்குப் பிறகு, காங்கிரஸ் கமிட்டியும் முஸ்லிம் லீக் கமிட்டியும் ஒன்றுகூடி யோசித்துப் ஒரே கோரிக்கையாகச் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தன. ஹிந்துக்களுக்குள்ளும் முகம்மதியருக்குள்ளும் ஒற்றுமையிருப்பதை அத்தீர்மானம் குன்றின் மேலிட்ட விளக்குபோல் காட்டுகிறது. இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுத்துவிட்டால், பாமர ஜனங்களின் நன்மை பாராட்டப்பட மாட்டாதென்று ஓர் சிலர் ஆட்சேபம் சொல்லுகிறார்கள். ஆங்கிலோ இந்தியப் பத்

திரிகைகளில் வரம்புகடந்து எழுதும் பத்திரிகைகள் அந்த அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதல்லாமல், வங்காளத்தின் கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் லார்டு ரோனல்டுஷேயும் சொல்லி யிருக்கிறார். அந்த லார்டு ரோனல்டுஷேயைப் பற்றி வங்காளம் கண்டனம் செய்துகொண்டிருக்கையில் இந்தியா மந்திரி அவரைப் புகழ்ந்து பேசி இருக்கிறார். நாம் பாமர ஜனங்களின் பிரதிநிதிகள் அல்லவாம்! அன்னியர்கள்தான் ஜனங்களைக் காப்பாற்ற ஏற்பட்டவர்களாம்! அவர்களுக்குப் பதிலாக தேசத்தலைவர்கள் ஏற்படுவது சுபாவத்துக்கு விரோதமாகுமோ? உடன்படிக்கைகளின் ஷரத்துப்படி நடக்கவேண்டியது தருமம் என்பதை

## இங்கும் ஸத்தியமன்றோ.

ஸ்திரப்படுத்த இந்த யுத்தம் ஏற்பட்டது. ஐரோப்பாவில் ஒரு விஷயம் சத்யமானால், அது ஆசியாவிலும் சத்தியமாகத்தான் இருக்கவேண்டும். நமது அரசர்கள் செய்து கொடுத்திருக்கிற உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதே நம்முடைய கோரிக்கை. ஆகையால் யுத்தத்திற்குப்பிறகு சுய ஆட்சி வேண்டுமென்று கேட்கிறோம். மிஸ்டர் லயனல் கர்டிஸ் என்பவர் இந்தியாவைப்பற்றி சில புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். அதிலே ஒன்றில் அவர் என்ன சொல்லுகிறார் என்றால், "சுயஆட்சியைப்பெறாத ஜனங்கள் சுய ஆட்சிக்கு லாயக்காகும்படி அவர்களைத் தயார்செய்ய சுய ஆட்சியைப் பெற்றுள்ளோர் முயலவேண்டும்" என்பதாம். இந்தியாவைப்பற்றி அவர் பேசும்பொழுது "இன்னும் காலம் போகவேண்டும்" என்கிறார்; அதற்கு அவர் சொல்லும் காரணமென்னவென்றால், "ஓட்" கொடுக்கிறவர்கள் இந்தியர்வில் இல்லையென்கிறார். 1732-ம் வருஷத்தில் "சீர்திருத்தச் சட்டம்" பார்லிமெண்டினால் செய்யப்பட்டதற்கு முன், இங்கிலாந்தில் "ஓட்" கொடுக்கிறவர்கள் இருந்தார்கள். ஜெப்பானிலும், பிலிப்பைபின் தீவுகளிலும் இருந்தார்களா? இந்தியா சுய ஆட்சிக்குத் தகுதியில்லையாம்; ஐரோப்பா அநாகரீக நிலைமையி



லிருந்த காலத்தில் இந்தியா சுயஆட்சி நடத்திவந்தது என்பதை நினைப்பில் வைத்துக் கொள்ளுங்கள். மிகப் பூர்வீக காலத்தில் அரசர்கள் இந்தியாவில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டனர்; முகம்மதிய சமூகத்தில் ஜன ஆதிக்க புத்தி ஊறியிருக்கிறது. சுய ஆட்சி நமக்கு எதற்காக? நம்முடைய நன்மைக்காகவும், ஆளுகையின் நன்மைக்காகவும் சுய ஆட்சி அவசியம். சுய ஆட்சியை நமக்குக் கொடுத்து விட்டால், அராஜகம் பறந்துபோய் விடும்; ஒரு ஆட்சி எவ்வளவு நல்லதாயிருந்தாலும், அது சுய ஆட்சிக்குச் சமமாகாது. ஆட்சி நல்லதாவதற்கு சுய ஆட்சி அவசியம்"

---

## மிஸ்ஸஸ் பெஸண்டு.

---

**சுய ஆட்சித் தீர்மானத்தை ஆதரித்து மிஸ்ஸஸ் பெஸண்டு பேசிய முழு விவரமும் கீழே பிரசுரிக்கப்படுகிறது. ஜனங்களுடைய சந்தோஷ ஆரவாரம், வந்தே மாதரகோஷம் ஆகிய இவைகளினிடையே அவர் எழுந்து, பேசியதாவது:—**

### பிறரைப் பின்பற்றி நடத்தல்.

எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியும், எல்லா இந்திய முஸ்லிம் லீக் கமிட்டியும் கூடி இன்னின்ன சீர்திருத்தங்கள் வேண்டுமென்று திட்டப்படுத்திய தீர்மானமான ஏற்பாடானது இப்பொழுது உங்களுக்குச் சொல்லப்பட்டது. அத்திருத்தங்களே பிரஸ்தாப சுய ஆட்சித் தீர்மானத்தின் இரண்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. யுத்தத்திற்குப் பிறகு ஏகாதிபத்தியம் திருத்தியமைக்கப்படும் பொழுது, இந்தியாவானது சார்பு நாடு என்பது நீங்கி, குடியேற்ற நாடுகளுக்குச் சரிசமானமாய் ஏகாதிபத்தியத்திலே ஒரு பங்காளியாக இருக்கவேண்டுமென்பதே தீர்மானத்தின் மூன்றாவது பிரிவாகும். இதைப்பற்றித்தான் நான் பேசப்போகிறேன்.

யுத்தத்துக்குப் பின் ஏகாதிபத்தியத்திலே இந்தியாவின்

அந்தஸ்து எப்படியிருப்பதென்று நாம் யோசிப்போமானால், அத்தகைய விஷயத்தை இச்சமயம் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுவந்து கவர்ன்மெண்டுக்குப் பாதகமுண்டு பண்ணக்கூடாதென்று நமக்குச் சொல்லப்படுகிறது. ஏகாதிபத்தியத்திலே தங்களுடைய அந்தஸ்து எப்படியிருக்க வேண்டுமென்பதைப் பற்றி குடியேற்ற நாடுகள் கவனஞ் செலுத்தி வருகின்றன. அந் நாடுகளைப் பின்பற்றியே நாமும் இந்தியாவின் அந்தஸ்து எப்படியென்று கவனஞ் செலுத்தி வருகிறோம். ஏகாதிபத்திய அமைப்பைப் பற்றி முன்னம் மிஸ்டர் போனர் லா பேசிய பொழுது, இரும்பானது பழுக்கக் காய்ச்சப்பட்டு சூடாய் இருக்கும்பொழுதே அதைத் தக்கபடி அடித்து செம்மைப் படுத்திக் கொள் என்று சொல்லியிருக்கிறார். இப்பொழுதோ ஏகாதிபத்திய அமைப்பைக் குறித்து எங்கும் பேச்சும் யோசனையும் நடந்து வருவதால், மிஸ்டர் போனர்லாவின் புத்திமதியை யனுசரித்தே நாம் நடந்துவருகிறோம். ஏகாதிபத்தியம் திருத்தியமைக்கப்பட்ட பின், நமது நிலைமையைப்பற்றி நாம் என்ன சொல்வது? சமயம் வந்தபோது காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டு மல்லவா?

## அமைப்பின் தன்மை

ஐந்து தேசத்தினர் ஒன்று கூடி ஏகாதிபத்தியத்தில் சேர்ந்திருக்கப் போவதாக இச்சமயம் பெரும்பேச்சு நடக்கிறதே. அதில் இந்தியாவைப்பற்றி பிரஸ்தாபம் உண்டா? ஓ உண்டு. அந்த ஐந்தில் இந்தியா ஒன்றல்ல. இந்தியர் வர்ணமுள்ள ஜாதியினர். வர்ணமுள்ளவர்களோ வர்ண மற்றவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கவேண்டும் போலும். வர்ணமுள்ளவர்கள் பிறருக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் போலும். (வெட்கம் என்ற கூச்சல்) அவ்விதம் கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்பதை இந்தியர் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அந்த ஐந்து தேசத்தினரைக்கண்டு தலை சாய்த்திருக்கும்படி மத்திய ஆப்பிரிக்கா வாசிகளைப்போல் நாம் நாகரீகம் இல்லாதவர்களல்லர். வர்ணத்தினாலே புத்தி விசேஷம் உண்டாய் விடுகிறதென்ப



தில்லை. கௌதம புத்தரும் ஏசுநாதரும் வர்ணமுள்ள ஜாதியினரைச் சேர்ந்தவர்கள். மதங்களை ஸ்தாபித்தவர்கள் அனைவரும் வர்ணமுள்ள ஜனங்களே. 'வர்ணமில்லாத அந்த ஐந்து தேசத்தினரிலே மதத்தை ஸ்தாபித்த எவரேனும் ஒருவர் பிறந்திருக்கின்றனரா? குடியேற்ற நாடுகளைக் கண்டு நாம் தலைசாய்த்து ஒருபோதும் நிற்க முடியாது.?

## காரணம் யார்?

குடியேற்ற நாடுகளிடம் விரோதபாவத்தைப் பரவச்செய்யக் கூடாதென்று நமக்குச்சொல்லப்படுகிறது. குடியேற்றநாட்டினர் இங்கே வரக்கூடாதென்று நாம் தடுத்தோமா?’அவ்விதம் தடுத்தது இந்தியாவா? ஆஸ்டிரேலியாவா? கானடா வாசிகள் இங்கே வரக்கூடாதென்று நாம் சொல்லி யிருக்கிறோமா? அல்லது இந்தியர் வரக்கூடாதென்று கானடா சொல்லியிருக்கிறதோ? விரோதபாவத்திற்குக்காரணம் குடியேற்ற நாடுகளே? இந்தியரல்லர். ஆகவே விரோதபாவத்தைப் பரவச்செய்யவேண்டாமென்று குடியேற்ற நாடுகளுக்குப் புத்தி சொல்லட்டும்; இந்தியாவுக்கு வேண்டாம்.

## இந்தியாவின் ஒற்றுமை.

நம்மை நாமே ஆண்டுகொள்ள நாம் தகுதி யுள்ளவர்களன்றோ! நம்மில் பிளவுண்டோ? என்ன? (இல்லை யென்ற கூச்சல்) ஒற்றுமையின் வன்மை யின்னதென்பதைச் சென்ற சில வருஷங்களுக்குள் நாம் காட்டி யிருக்கிறோம். ஒன்பது வருஷத்துக்கு முன்னால் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. ஆனால் இன்றையதினமோ நாம் அனைவரும் ஒற்றுமை கொண்டு கூடியிருக்கிறோம். ஹிந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் ஒற்றுமை பாவம் விலகி யிருந்தது. அவ்விதம் ஒற்றுமை பாவமானது எங்கே விலகியிருந்தது? ஹிந்து அரசரால் ஆளப்படும் காஷ்மீர் சமஸ்தானத்தில் அல்ல; முஸ்லிம் அரசரால் ஆளப்படும் நிஜாம் ராஜ்யத்தில் அல்ல. ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் தான். அவ்விதம் இரு வகுப்பினரும் விலகி யிருந்தும், இப்பொழுதோ இருவரும் பரஸ்பரம் அன்பு, நம்பிக்கை, மரி

யாதை, ஆகிய இக்குணங்களால் ஒற்றுமைகொண்டு நிற்கின்றனர். நாம் அனைவரும் ஒன்று கூடி விட்டோம். இனி நம்மைப் பிரித்து விட முடியாது.

## சுய ஆட்சிக்கு லாயக்கில்லையோ?

நீங்கள் சுய ஆட்சிக்கு லாயக்கில்லை, நீங்கள் அறியாதவர்கள், என்று சொல்லப்படுகிறதே. அதற்குப் பாத்திரம் யார்? காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலேயே ஜாக்கிரதையாக, உஷாராக, படிப்படியாக, படிப்பானது இலவசமாகவும் கட்டாயமாகவும் இருக்கவேண்டுமென்றார். தன்னுடைய சகோதரர்களைப்படித்தவர்களாகச் செய்யவேண்டுமென்று அவர் விரும்பினார். அதைமறுத்தது யார்? உத்தியோகஸ்தர்களையே பெரும்பாலும் கொண்ட ராஜப்பிரதிநிதியின் சட்டசபையே மறுத்தது. ஆகவே நமது ஜனங்களுக்குக் கல்விபுகட்டாமலும், அதற்குவேண்டிய ஒத்தாசையைச் செய்யாமலும் கவர்ன்மெண்டார் இருக்கும்பொழுது, நம்மைஅறியாதவர்களென்று குறைகூற ஆங்கிலேயருக்கு வாயுமுண்டோ?

## சுய ஆட்சி அவசியம்.

உங்களுக்கு உதவி புரியஉங்களுக்குச் சக்தியில்லையென்று நம்மை நோக்கிச்சொல்லுகின்றனர். ஆயுதச் சட்டத்தை நாமா ஏற்படுத்தினோம்? நமது ஜனங்களை ஆயுதந் தரிக்காதபடி நாமா செய்தோம்! 1878-ம் வருஷம் முதல் லைஸென்ஸ் இன்றி ஹிந்துவாயினும் முகம்மதியராயினும் ஆயுதந் தரிக்க முடியவில்லை. லைஸென்ஸ் பெறுவதற்குப் பற்பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியிருக்கிறது. இந்தியாவானது தன்னைத் தான் பாதுகாத்துக் கொள்ளக் கூடாமலிருப்பதற்கு இந்தியாவின் மீதா குற்றம்? ஆயுதச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று 30 வருஷ காலமாக காங்கிரஸ் மகா சபை கேட்டு வருகிறது. சேனையில் இந்தியரைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் ராணுவகலாசாலைகளை ஸ்தாபிக்கவேண்டுமென்றும் கேட்டு வருகிறது. ஆனால் அவ்விதம் கேட்கப்படும் காரிக்கைகளை அலட்சியஞ் செய்துவிட்டவர்களே இச்சமயம்



நம்மை லாயக்கில்லையென்கின்றனர்! ஏனென்றால் நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியாததே காரணமாகும், நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டுமானால் சுய ஆட்சி கிடைக்கவேண்டும். சுய ஆட்சி கிடைக்கும் வரையில் நாம் ஆயுதந் தரிக்க முடியாது.

## கட்சிப் பிரதி கட்சிகளாம்,

உங்களுக்குள்ளே கட்சிப் பிரதி கட்சிகள் இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. இங்கிலாந்தில் கட்சிப் பிரதி கட்சி கிடையாதோ? 1914-ம் வருஷத்திலே மகா யுத்தம் ஏற்படு முன், இங்கிலாந்திலே ஜனங்களுக்குள் யுத்தம் ஏற்படும்போல் இருந்தது. மகாயுத்தம் ஏற்பட்டதினால், அது ஏற்பட வில்லை. அப்பொழுது சுய ஆட்சிக்கு கிரேட் பிரிட்டன் லாயக்கற்று இருந்ததோ? 1832-ம் வருஷத்திலே கிரேட் பிரிட்டனில் எவ்வளவு தூரம் கல்வி யபிவிருத்தி ஏற்பட்டிருந்தது? கஷ்ட காலங்களிலே இங்கிலாந்தில் அமைதி தோன்றியிருந்ததோ 1914-ம் வருஷத்திலே இங்கிலாந்தில் வேலையாளர் வேலை நிறுத்தம் செய்ய வில்லையா? அதனால் போக்கு வரத்து வசதிகள் நின்றுவிட வில்லையா? லண்டனிலே பசிப்பிணி தோன்றுமென்றிருக்க வில்லையா? இப்படியெல்லாமிருந்தும், சுய ஆட்சிக்கு இங்கிலாந்து லாயக்காகும்! அமைதியும் சுறுசுறுப்புமுள்ள நீங்கள் லாயக்கில்லாதவர்களோ?

## ஆட்சேபங்களின் தன்மை.

படித்த இந்தியர்களின் தொகை குறைவாயிருப்பதனால், சுய ஆட்சிக்கு நாம் லாயக்கில்லை என்று ஆட்சேபம் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு தேசத்திலும் படித்தவர்களின் தொகை குறைவுதான். ஆனால் படித்த இந்தியரோ நம்மை ஆளுபவரின் தொகைக்குக் குறைந்திருக்க வில்லை. படித்த இந்தியராகிய சிலருக்கு ஜனங்களைப் பற்றிய விஷயங்களெல்லாம் தெரியுமே. ஆனால் ஆங்கிலேயருக்குத் தெரியாது. இந்தியரைப்பற்றி அறியவிரும்புவோர் இங்கு

வருகின்றனர். கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களுடன் இங்கு மங்கும் போகின்றனர். இந்தியாவுக்கு அபவாதத்தைக் கட்டி விட்டவர்களோடும் சினேகம் பண்ணுகின்றனர். (வெட்கம்) இப்படி யெல்லாமிருந்தால் இந்தியரின் மனதை யறிந்து விட முடியுமா? கிராம வாசிகளைப்பற்றி அவர்கள் எப்படி யுணர்ந்து கொள்ள முடியுமோ தெரியவில்லை!

## அச்சுச் சட்டமும் பிரிட்டிஷாரின் மதிப்பும்.

பிரிட்டிஷ் ஜனங்களின் மதிப்பை நாம் பங்கப்படுத்துவதாக நம்மை நோக்கிச் சொல்லப்படுகிறது. ஆண தோஷம் கூடாதென்று அச்சுச்சட்டம் ஏற்பட்டிருக்கிறது. லண்டன் நகரின் நிலைமையை பஞ்சாப் மாகாணத்திய பத்திரிகையொன்று விரித்தெழுதியதன் மேல் அதனால் பிரிட்டிஷ் பிரஜைகளுக்குள் விரோத பாவம் உண்டாய் விட்டதென்று கண்டு, அதன் ஜாமீன் தொகை பறிமுதல் செய்யப்பட்டது உங்களுக்குத் தெரியுமா? நான் அழுத்தமாய்ப் பேசுவதாக ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் நினைக்கலாம். இந்தியாவிலே சகிக்கக்கூடாத நிலைமையில் நாம் வசித்து வருகிறோமென்பதை ஜனங்களும் ஆளுவோரும் அறியும்பொருட்டு நாம் அழுத்தமாகப் பேசவேண்டும்.

## இந்தியாவும் இங்கிலாந்தும்.

இங்கிலாந்தினிடம் இன்னும் இந்தியாவுக்குப் பிரியம் உளது. பிரிட்டிஷாரின் சம்பந்தத்திலிருந்து விலகிவிட வேண்டுமென்று இந்தியா விரும்பவில்லை. ஆனால் அச்சுச்சட்டம், தேசம் பாதுகாப்புச்சட்டம், ராஜத்துவேஷ சட்டம் முதலிய பற்பல சட்டங்களால் கவசம் போட்டுக்கொண்டுள்ள இங்கிலாந்தினிடம் இந்தியாவுக்கு அன்பில்லை. ஆனால் தஞ்சமென்று அஞ்சி வந்தவர்களுக்கு ஆதரவளிப்பதும், சுதந்திரத்தை விசேஷமாக மதித்துவருவதுமான இங்கிலாந்தை இந்தியா நேசிக்கிறது. தவறு ஏற்படும்பொழுது, அத்தவறை ஆங்கிலேயர் எடுத்துக் காட்டாததனால், இங்கிலாந்து தேசமானது இந்தியாவை அறியாமல் இருக்கிறது.



## முடிவுரை.

பெல்ஜியத்தினுடைய சுதந்திரத்தையும், சமாதான உடன்படிக்கைகளின் விசேஷத்தையும் நிலைநாட்டுவதற்காக இங்கிலாந்து தேசமானது யுத்தத்தில் இறங்கி, அதற்கு இந்திய ஸோல்ஜர்களை உதவிக்குக் கூப்பிட்டிருந்தும், உடன்படிக்கைகளெல்லாம் மதிக்கப்படாமல் சின்னாபின்னமாய்க் கிடக்கும்படியான இந்தியாவுக்குப் போகும்படி அந்த ஸோல்ஜர்களைத் திருப்பி யனுப்பிவிடுகிறது. எதற்காக ஐரோப்பாவிலே இங்கிலாந்து சண்டை செய்கிறதோ அந்த லட்சியத்தை இங்கே இங்கிலாந்து ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தியரின் ராஜபக்தியானது ஆங்கில அதிகார வர்க்கத்தினரைப் பொறுத்திருக்கவில்லை. ஆனால் பூர்வீகமான இங்கிலாந்தைப் பொறுத்திருக்கிறது. ஏகாதிபத்தியத்திலே தனக்குரிய அந்தஸ்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்தியா கேட்கிறது. அவ்விதம் கொடுக்கும் வரையில் முன்னேறுவதற்கான மார்க்கத்தில் ஆபத்திருக்கும்.

---

# ஸ்ரீமான் பால கங்காதர திலகர்.

*சுயஆட்சியைப்பற்றி ஸ்ரீமான் பால கங்காதர திலகர் பேசியது யாதெனில்:—*

குதூகலத்துடன் என்னை நீங்கள் வரவேற்றதற்காக நான் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். நீங்கள் செய்த உபசாரமானது எனக்கல்ல; எந்தக் கொள்கைகளுக்காக நான் இத்தனை காலமாய் மன்றாடி வந்திருக்கிறேனோ அவைகளை உத்தேசித்தென்றே நான் கருதுகிறேன். என்னுடைய கொள்கைகள் எல்லாம் இந்தத்தீர்மானத்தில் அடங்கியிருக்கின்றன. இந்த சுய ஆட்சிக்காகத்தான் 30-வருஷகாலமாக காங்கிரஸ்மகாசபை மன்றாடிவந்திருக்கிறது. சுயராஜ்யமென்ற தொனியானது 10-வருஷத்திற்குமுன் ஹூக்ளி நதிக்கரையில் மகா விருத்த புருஷனா

கிய ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜியிடமிருந்து உதித்தது. அந்தத் தொனி கிளம்பினபிறகு, சில அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. அதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வழி தேடவேண்டுமென்று சிலர் சொன்னார்கள். இந்தியாவெங்கும் அத்தொனி கேட்கும்படி வேலை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள். அவ்வளவு சீக்கிரமாகச் செய்யக் கூடாது; கொஞ்சம் தொனியைக் குறைக்க வேண்டுமென்று ஒரு கட்சியார் சொன்னார்கள். 10 வருஷத்திற்கு முன் நமக்குள் மனஸ்தாபம் உண்டானதற்குக் காரணம் அதுதான். அது தீர்ந்து, இந்த ஐக்கிய மாகாணத்தில் நாம் மறுபடி ஐக்கிய மடைந்த நான் சந்தோஷப்படுகிறேன். இந்த மனஸ்தாபம் தீர்ந்துவிட்டது மல்லாமல், ஹிந்துக்களுக்குள்ளும் முகம்மதியருக்குள்ளும் ஒற்றுமை யுண்டானது இன்னும் பெரிய காரியம். இன்று ஒரு பெரிய சுதினம். இந்த லக்நௌ பட்டணம் (லட்சுமண புரி) மிகவும் புண்ணிய பூமி. முகம்மதியர்களுக்கு நாம் அளவுக் அதிகமாக இணங்கிக் கொடுத்துவிட்டதாக சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். எவ்வளவு இணங்கிக் கொடுத்தால்தான் என்ன ?

## நம்மவரில் யாருக்குக் கிடைத்தால் என்ன?

சுயராஜ்ய அதிகாரம் முகம்மதியர்களுக்கு மாத்திரம் கொடுக்கப் படுமானால், எனக்கு ஆட்சேபமேயில்லை. ராஜபுத்திரர்களுக்கு மாத்திரம் கிடைத்தாலும் எனக்கு ஆட்சேபமில்லை; ஹிந்துக்களுக்குள் தாழ்ந்தவகுப்பார்மாத்திரம் சுயராஜ்யத்துக்கு லாயக்கென்று ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டு நினைத்து அவர்களுக்கு மாத்திரம் கொடுத்தாலும் சரிதான். இந்தியருக்குள் எந்த வகுப்புக்குக் கொடுத்தாலென்ன? பிறகு அவர்களும் நாமும் பங்குபோட்டுக் கொள்வோம். இந்த சுயராஜ்யத்தை மிகவும் வலிமையுள்ள அதிகாரி வர்க்கத்தினிடமிருந்து நாம் அடையவேண்டும். அவர்களுக்கு இஷ்டமிராது; இது இயற்கைதான்; ஏனெனில் அவர்கள் இப்பொழுது செலுத்தி வரும் அதிகாரம், அனுபவித்து வரும் சுதந்திரம், முதலியவை



தங்களுடைய கையிலிருந்து போய் விடுமென்று அதிகாரி வர்க்கத்தார் இப்பொழுது உணர்ந்திருக்கிறார்கள், ஆகையால் அவர்களுக்கு மனமில்லாதிருப்பது இயற்கையே. அவர்களுடைய நிலைமையில் நான் இருந்தால், எனக்கும் இஷ்டமில்லாமல் தான் இருக்கும். ஆகையால் அவர்கள் மீது நான் குறைகூறவில்லை. ஆயினும நாம் அவர்களுடன் வாதுக்குநின்றுதான் ஆகவேண்டும். மூன்றாவது ஆஸாமியுடன் நாம் போராட்டம் செய்யவேண்டியிருப்பதால், நாம் ஒற்றுமையாயிருக்கவேண்டியது அவசியம்.

## உத்தேசமே மேல்.

நமது லட்சியம் இன்னவாறு இருக்கவேண்டுமென்று ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி சொன்னபொழுது, ஸ்வராஜ் என்ற வார்த்தையை அவர் உபயோகப்படுத்தினார். பிறகு "சொந்த ஆட்சி" என்றும், பிறகு "சட்டத்தை அனுசரித்த திருத்தம்" என்றும் சொன்னோம். இப்பொழுது "ஹோம் ரூல்". என்கிறோம். "ஸ்வராஜ்" என்ற பதம் இந்தியாவில் அபகீர்த்தி அடைந்திருக்ப்பதாகவும் "ஹோம் ரூல்" என்பது அயர்லாந்தில் அபகீர்த்தி அடைந்திருக்கிறதாகவும் சொல்லி அவ்விரண்டு பதங்களுங் கூடாதென்கிறார்கள். எந்தப் பெயரா யிருந்தால் என்ன? அது இன்னதென்று சிறிது சொல்லுகிறேன். நாம் உத்தேசிப்பதானது முழு சுய ஆட்சி யாகாதாயினும், ஸ்தல சுயஆட்சியைவிட மேலானது; ஸ்வதேச சாமான்களை ஆதரிக்க வேண்டியதையும் அன்னிய தேச சாமான்களை பரிகரிக்க வேண்டியதையும் விட மேலானது. சென்ற முப்பது வருஷ காலமாகியும், காங்கிரஸ் மகா சபை செய்திருக்கிற தீர்மானங்களின் ஸாராம்சம் இந்த ஒரே தீர்மானத்தில் அடங்கி இருக்கிறது. சர்க்கார் உத்தியோகங்கள் என்ன, ஆயுதச் சட்டம் என்ன, என்ற பல விஷயங்களில் நம்முடைய பிரயத்தனங்களைச் சிதறவிடாமல், இவ்வொரு விஷயத்திலேயே கவனம் செலுத்துவோமாக.

### சளைக்கா உழைப்பு அவசியம்.

இந்த ஒரு தீர்மானம் நிறைவேறும் பொருட்டு நீங்கள் எல்லோரும் உங்களுடைய முழு சக்தியையும் உற்சாகத்தையும் உபயோகப் படுத்த வேண்டும். அது சுலபமென்று நினைக்காதீர்கள். ஹிந்துக்களும் முகம்மதியர்களும் ஒன்று சேர்ந்தும் மிதவாதிகளும் அமிதவாதிகளும் ஒன்று சேர்ந்தும் தீர்மானம் செய்து விட்டால் மாத்திரம் உங்களுடைய கோரிக்கை நிறைவேறிவிடாது. இந்த ஒற்றுமையால் ஓரளவு சக்தியும் சுறுசுறுப்புமே உண்டாகும். வழியில் உள்ள இடையூறுகள் பல. வேலை செய்யவேண்டும். இனி காங்கிரஸ் மகாசபை நடக்காமல் நின்று விட்டாலும் பாதகமில்லை. அது செய்யவேண்டிய ஆலோசனையை அது செய்துவிட்டது. இனிச்செய்யவேண்டிய வேலை நிர்வாகம்.

### சுய ஆட்சிக் கொடி பறக்கும்!

ஸ்வராஜ்யம் நமது லட்சியமென்று ஏற்பட்டதும், அவ்வித லட்சியத்தைக் கொள்வது சட்ட சம்மதமாகுமா என்று ஒரு சந்தேகம் உண்டாயிற்று. அந்த லட்சியம் சட்ட சம்மதமானதுதான் என்று அடுத்த வருஷத்தில் கல்கத்தா ஹைகோர்ட் தீர்ப்புச் செய்துவிட்டது. பிறகு அந்த லட்சியத்தை வெளியிட்டுச் சொல்லுகையில், அதிகாரி வர்க்கத்தின்மீது அபவாதம் சொல்லாமல் சொல்லவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். அவ்விஷயமாயும் தீர்ப்பு ஏற்பட்டு விட்டது. உங்களுடைய லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டி அதிகாரிகளைக் கண்டிக்கலாமென்று கோர்ட்டு தீர்ப்பு செய்தது. ஹிந்துக்களும் முகம்மதியரும் சேர்ந்து தயார் செய்த ஒரு திட்டம் உங்கள் முன் ஆஜர் செய்யப்பட்டிருக்கிறது. அத் திட்டம் அங்கீகாரமாகும்படி நீங்கள் செய்யவில்லையானால், அது உங்களுடைய தப்பிதமேயாகும். நீங்கள்தான் வேலை செய்யவேண்டும்; தானாக நடந்துவிடும் என்று இராதீர்கள். அதற்கு வேண்டிய உபகரணங்களை பகவான் உங்களுக்குக் கொடுப்பார். 1917-ம் வருஷத்திற்குள்



யுத்தம் முடிந்துவிடுமென்று நான் நினைக்கிறேன். 1917-ம் வருஷத்திலோ அல்லது 1918-ம் வருஷத்திலோ இந்தியாவில் சுய ஆட்சிக் கொடி பறக்குமென்று நான் நம்புகிறேன்.

---

## பாபு விபின சந்திர பால்.

---

*சுய ஆட்சித் தீர்மானத்தை ஆதரித்து பாபு விபின சந்திர பால் பேசியதாவது.—*

### முன்னுரை.

"என்னுடைய பிரிய நண்பர்கள் அனைவரையும் 10 வருஷ காலத்திற்குப்பின் ஒற்றுமைகொண்ட 'காங்கிரஸ்' மகாசபையில் நேரில் பார்ப்பதனால் எனக்குண்டாகும் சந்தோஷத்தை நான் எடுத்துரைக்க இயலாது. இந்த 10 வருஷகாலமும் வியர்த்தமாய்ப் போகவில்லை. இந்த 10 வருஷகாலமாக நாம் முயற்சி செய்து வந்ததின் பலனை பிரஸ்தாப சுய ஆட்சித் தீர்மானத்தின் வாசகத்திலிருந்து நன்கு அறிந்துகொள்ளலாம். முன்னம் நம்மில் பிளவு ஏற்பட்டது. அவ்விதம் பிளவு ஏற்பட்டதன் பலனாக நாம் அனைவரும் இச்சமயம் நெருங்கிய ஒற்றுமையுடன் கூடியிருக்கிறோம். நம்மில் விவாதம் ஏற்பட்டது; நம்மில், போராட்டம் ஏற்பட்டது. அவ்விவாதமும், போராட்டமும் காரணமாக இன்னும் நெருங்கிய சமரஸபாவம் தோன்றிவிட்டது. கடவுளின் கிருபையினால் எல்லாக் கட்சியினரும் ஒருமனப்பட்டிருக்கிறோம். நம்முடைய லட்சியங்களும் ஐக்கியப்பட்டு விட்டன.

### சுய ஆட்சியின் விசேஷம்:

பிரஸ்தாப தீர்மானத்திலே சுய ஆட்சி என்ற வார்த்தை காணப்படுகிறது. அதன் விசேடத்தைக் குறைப்பதற்கான எவ்வித அடைமொழியும் அதற்குக்கொடுக்கப்படவில்லை. கலப்பற்ற சுய ஆட்சி என்பதே காங்கிரஸ் மகாசபையின் நியமங்களில் முத

லாவது நியமமாகும். இந்திய ஜாதியாரின் முதலாவது நியமமும் அதுவே; தன்மதிப்புள்ள ஒவ்வொரு ஜாதியினருக்கும் நாகரிகம் வாய்ந்துள்ள ஒவ்வொரு மனிதருக்கும் அதுவே முதல் நியமம். கடவுளின் ஆக்ஞையென்று தனக்குள்ளே மனதாரக் கருதும் ஸ்திரீ புருஷர்களின் முதல் நியமமும் அதுதான், ஒவ்வொரு யோகியும் ஞானியும் பக்தனும் கொண்டிருக்கும் முதல் நியமமும் அதையன்றி வேறில்லை. ஏனென்றால் சுய ஆட்சியே எதற்கும் மேலானது.

## சுய ஆட்சியின் அவசியம்.

பிரிட்டிஷாருடன் எக்காலத்தும் சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்பதாக மனப்பூர்வமாகவும் கண்ணியமாகவும் முன் தினத்தில் நாம் தீர்மானம் செய்தோம். பிரிட்டிஷாருடைய சம்பந்தத்திலிருந்து எக்காலத்தும் இந்தியா தளராமல் சாசுவதமாய் நிலைபெற்றிருப்பதற்கு சுய ஆட்சியின் தீர்மானத்தில் கண்ட விஷயங்கள் நமக்குக் கைகூட வேண்டும். பிரஸ்தாப தீர்மானம் மூன்றுபிரிவாக வகுக்கப்பட்டுளது. சுய ஆட்சி கொடுக்கப் படுமென்பதாக ராஜ விளம்பரம் வேண்டுமென்று முதல் பாகத்தில் கேட்டுளோம்.

## ராஜ விளம்பரத்தின் முக்கியம்.

ஏன் ராஜ விளம்பரம் அவசியம்? நாம் ஏன் அப்படி கண்டிப்பாய்க் கேட்கிறோமென்பதற்குக் காரணத்தைச் சொல்லுகிறேன். இச்சமயத்திலே இந்தியரிடம் ஆழ்ந்த அதைரியம் தோன்றியிருக்கிறது. வாலிபர்களைக் கண்டு நான் பேசியிருக்கிறேன்; எனக்குச் சமானமான வயதுடைய பெரியவர்களைக் கண்டும் வார்த்தையாடியிருக்கிறேன். என்னைவிட வயதில் முதிர்ந்த பெரியோரைக்கண்டு அவர்களுடனும் கலந்து பேசியுள்ளேன். இவ்விதம் பலரைக் கண்டு பேசியதில் ராஜ விளம்பரத்தின் பயனென்னவோ என்று அனைவரும் என்னைக் கேட்டிருக்கின்றனர். இச்சமயத்திலே இந்தியர் அனைவரும் ஆழ்ந்த அதைரியத்திலும் மனத்தளர்ச்சியிலும் மூழ்கியிருக்கின்றனர்; வருங்காலம் நமக்கு நல்லதாயிருக்குமென்பது எனது நம்பி-



க்கை. நாகரீகம்பெற்ற தேசத்தினர் தங்களுடைய தேசத்தில் எவ்விதம் வாழ்ந்து வருகின்றனரோ அவ்விதமே நீங்களும் நானும் இத்தேசத்திலே வாழ்ந்து வருவோமென்று எனக்கு நிச்சய புத்தி இருக்கிறது. வருங்காலத்தைப்பற்றி எனக்குச் சந்தேகமில்லை. இந்தியாவுக்கு நிச்சயமாக சுயஆட்சி கிடைக்குமென்று எனக்கு தெளிவாகத் தோன்றுகிறது. ஆயினும் நமது ஜனங்களுக்கு, அதில் நம்பிக்கையில்லை. வயதில் முதிர்ந்தவர்களுக்கும் அதில் நம்பிக்கை கிடையாது. ஏனென்றால் "என்ன பயன்? நாம் சஞ்சலமின்றி சமாதானத்துடன் காலத்தைக் கழித்துவிடுவோம்" என்றுசொல்லுகின்றனர். வாலிபர்களும் அதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எவ்வாறெனில் "என்ன பிரயோஜனம்? நாம் பணத்தைச் சம்பாதிப்போம்; அடுத்த தலைமுறையார் பார்த்துக்கொள்ளட்டும்" என்று வாலிபர்கள் உரைக்கின்றனர்.

## அனுபவத்திற்கு வரவேண்டும்.

ஆகவேதான் நிச்சயமான நம்பிக்கையைத் தரக்கூடிய செய்தியொன்று நமக்குக் கிடைக்கவேண்டும். மற்றத் தேசத்தினர் தங்களுடைய தேசத்தில் வாழ்ந்து வருவது போலவே நாமும் நமது தேசத்தில் வாழ்ந்து வரலாமென்று நமக்கு பிரிட்டிஷ் அரசரும் பார்லிமெண்ட் சபையும் உறுதிமொழி கூறவேண்டும். இந்த உறுதிமொழி மட்டும் போதாது. ஏனென்றால் இதற்கு முன் நமக்குக் கிடைத்திருக்கும் உறுதிமொழிகள் உள. ஆகவே, அந்த உறுதிமொழிகளைப் போல் இல்லாமல், அனுபவத்தில் பயன் தரக்கூடிய உறுதிமொழிகள் நமக்குக் கிடைக்க வேண்டும்.

இனி எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியும், எல்லா இந்திய முஸ்லிம் லீக் கமிட்டியும் கூடி, நமக்கு இன்னின்ன திருத்தங்கள் வேண்டுமென்று முடிவு செய்திருக்கின்றனவே. அத்திருத்தங்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் படவேண்டுமென்பதே சுய ஆட்சித் தீர்மானத்தின் இரண்டாவது பாகமாகும். இவ்வளவு தானோ? இன்னுமிருக்கிறது.

## இந்தியா நீங்கலாக ஏகாதிபத்தியமா?

ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று யோசனை செய்யப்படுகிறதே. இந்தியா நீங்கலாக ஏகாதிபத்தியம் அமைக்கப்படுவதின் பயன் என்னவோ? அது எனக்குத் தெரியவேண்டும். **ஆள்** பலத்தைப் பற்றிப் பேசிவருகின்றனரே; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே 15 முதல் 35 வரை வயதுள்ளவர்களின் ஜனத்தொகை சுமார் 11 கோடியாகும். இதில் வெள்ளை வர்ணமுள்ள மனிதவர்க்கத்தின் தொகை ஒன்றரைக் கோடியாகும்; மீதியுள்ள $9\frac{1}{2}$-கோடி ஜனங்களோ கறுப்பு வர்ணமும் பழுப்பு வர்ணமும் உள்ளவர்களே. இந்தியாவிலுள்ள வாலிபர்களாகிய $7\frac{1}{2}$ கோடி பேரைவிட்டு விட்டால், ஏகாதிபத்தியத்தின் ஆள் பலம் என்ன ?

## மேதாவிகள்.

மேதாவிகளைப் பற்றிப் பேசப்படுகிறதே. இப்பொழுதுள்ள நிலைமையின்படி நமது மேதாவித் தனத்தை நாம் காட்டமுடியவில்லை. ராஜதந்திரிகளடங்கிய சபையில் நம்மைச்சேர்த்துக் கொள்ளவில்லை. ராஜதந்திரிகளடங்கிய சபையில் நம்மையும் சேர்த்துக்கொண்டிருந்தால் பற்பல துறைகளிலும் நமது மேதாவித் தனத்தை நாம் காட்டியிருப்பதுபோலவே அச்சபையிலும் காட்டியிருக்கலாமன்றோ; நமக்கு சமயம் வாய்த்தபோது நமது மேதாவித் தனத்தை நாம் காட்டியிருக்கிறோமாதலின், நம்முடைய மேதாவித்தனத்தை அலட்சியம் செய்து விடுவதற்கில்லை. சாஸ்திர ஞானத்தேர்ச்சியில் யேர்பெற்ற ஜகதீச சந்திர வஸு, பிரபல சந்திர ரே, புரொபஸர் பராஞ்சபே, ஆகிய இவர்களைப்போல் பெருமையும் கீர்த்தியும் வாய்ந்தவர்கள் ஓரொருவர்தான் இருப்பார்களோ? பலர் இல்லாத காரணமென்ன? நமது மேதாவித்தனத்தைக் காட்டிக்கொள்ள நமக்குச் சமயம் வாய்க்கவில்லை. அத்தகைய சமயம் வாய்க்கும்படி செய்யட்டும்; அல்லது அதற்கு இடைநடுவிலுள்ள தடங்கல்களைப் போக்கடிக்கட்டும்; அப்பொழுது நமது மேதாவித்தனம் புலப்படும்.



## முடிவுரை.

ஏகாதிபத்திய அமைப்பில் இந்தியாவுக்கு மற்றப் பாகங்களைப் போல் சரிசமத்துவம் ஏற்பட வேண்டுமென்பது தீர்மானத்தின் மூன்றாவது பாகமாகும். இந்தியாவை விலக்கிவிடுவதாயின் அது முடியாத காரியம்; அது இந்தியரின் ஆவல்களுக்கு அழிவு ஏற்படுவதாகும்; மேலும் ஏகாதிபத்திய ஆசைகளுக்கும் நாசமேற்படுவதாகும். 30- வருஷங்களுக்கு முன்னமென்றால், இந்தியாவை விலக்குவோமென்ற யோசனை இருக்கலாகும். அப்பொழுதாயின், இந்தியரை விறகு வெட்டிகளென்றும், தண்ணீர் சுமப்பவர்களென்றும் மதிக்கலாகும். இப்பொழுதோ ஜாதீயஉணர்ச்சி கிளம்பியிருக்கும் பொழுதும், ரோசத்துடன் தேசாபிமானம் பெருகிவரும் பொழுதும், இந்தியாவை ஏகாதிபத்திய அமைப்பில் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கிவிடுவது கூடுமோ? எனவே முன்போல் அவ்வாறு நினைப்பதற்குமில்லை; சிந்தனை செய்வதற்குமில்லை. இந்தியரும் பிரிட்டிஷாரும் சம்பந்தப்பட்டிருப்பதற்கும் பேராபத்து உண்டாவதாகும். ஆகவே சுயஆட்சித் தீர்மானத்தின் மூன்று பாகத்தையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பதோடு, ரௌண்ட் டேபிள், சதுர டேபிள், இன்னும் பல விதமான டேபிள், எனப்படும் பற்பல விதமான சங்கத்தினரும் கவனத்துடன் விஷயத்தை யோசித்துப் பார்க்க வேண்டும்.

---

## மிஸ்டர் மஷ்ர-உல் ஹக்

---

**பிறகு மிஸ்டர் மஷ்ர உல் ஹக் அத் தீர்மானத்தை ஆமோதித்துப் பேசியதாவது:—**

நான் ராஜீய விஷயங்களில் பிரவேசித்த நாளிலிருந்து ஹிந்துக்களும் முகம்மதியரும் ஒற்றுமையடைந்தாலொழிய நம்தேசம் முன்னேற்றமடைய முடியாதென்று நினைத்துவந்

திருக்கிறேன். இன்று தினம் அந்த ஒற்றுமை சித்தியாய் விட்டது. இந்த ஒற்றுமை சித்தியாகும்படி உழைத்த பிரதான புருஷர் யாரெனத் தெரிவிப்பது எனது கடமை யென்று எண்ணுகிறேன் அவர்தாம் முகமதாபாத் ராஜா.

[மிஸ்டர் மஷ்ர உல் ஹக் மேற்கண்டவாறு கூறியதும் முகம்தாபாத் ராஜாவுக்கு மும்முறை வாழ்த்துக்கூறப்பட வேண்டுமென்று சபையோர் பிரேரேபிக்க அதன்படியே மும்முறை அவருக்குவாழ்த்துக் கூறப்பட்டது.] மிஸ்டர் மஷ்ர உல் ஹக் மறுபடியும் பேச ஆரம்பித்து "வாய்ப் பேச்சோடு நின்றுவருங் காலம் கடந்து விட்டது. நீங்கள் சுய ஆட்சியை நாடி ஒரே உறுதியுடனிருக்கிறீர்களென்பதை, அதிகாரிகள் நம்பும்படி செய்தாலொழிய நீங்கள் ஒன்றையும் அடைய மாட்டீர்கள் இப்பொழுதிருந்தே வேலை செய்ய முயலும்படி உங்களுக்கு நான் சொல்லுகிறேன். இந்திய தேச முழுவதிலும் சுய ஆட்சி உணர்ச்சியை ஜனங்களுக்குள் பரவச் செய்வது உங்கள் கடமை. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஆணும் பெண்ணும் சுய ஆட்சி பெறத் தீர்மானத்திருக்கிறார்களென்பதை நம்மை ஆளுவோர் தெரிந்து கொள்ளட்டும்." என்று பேசி முடித்தார்.

---

## ஸர் டின்ஷா பெடிட்.

---

**மிஸ்டர் மஷ்ர உல் ஹக் பேசி முடிந்த பின், ஸர் டின்ஷா பெடிட் பேசலுற்றார். அவர் பேசியதன் ஸாராம்சம் பின்வருமாறு:—**

சுய ஆட்சி (ஹோம் ரூல்) பெறவேண்டுமென்று இந்தியாவிலுள்ள சகோதர ஜன சமூகங்கள்கொண்டுள்ள ஆசையில்பார்ஸி ஜனசமூகமும்முழுமனதுடன்கலந்து கொண்டிருக்கின்றது. சுய ஆட்சி ஏற்பட்ட பிறகு ஹிந்துக்கள் ஆண்டாலும் முகம்மதியர் ஆண்டாலும் பார்ஸி ஜனசமூகம் முழுதும்



திருப்தியடைந்திருக்கும். அப்படி பார்ஸி ஜன சமூகம் ஒருக்கால் ஒற்றுமையுணர்ச்சி காட்டவில்லை யென்றே வைத்துக் கொண்டாலும், 28-கோடி ஜனங்களின் அபிவிருத்தியை பாதிக்கக்கூடிய காரியங்களில் அந்த சமூகம் ஒற்றுமை காட்டாமலிருக்க முடியாது. பார்ஸிஜனங்கள் மிகுந்த ராஜபக்தியுள்ளவர்களென்று பேர் பெற்றவர்கள். நானும் ஒரு பார்ஸி; எனது சமூகம் மிகுந்த ராஜபக்தியுள்ள ஜன சமூகமென்று கருதப்படுகிறமையால் தான், இந்தியாவுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்பது கடமை யென அது கருதுகின்றது. அதிகாரவர்க்கம் நமக்குச் சத்துருவா யிருக்கின்றது. அதோடுகூட பட்டத்திற்கு ஆசைப்பட்டு கவர்ன்மெண்டுக்கு நம்மவர்களிலேயே சிலர் கோள் செல்லுகிறார்களே? அவர்களே நமக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியவர்களா யிருக்கிறார்கள்'

---

## காங்கிரஸ் மகா சபைக்கு ஒரு கடிதம்.

---

### டாக்டர் ஸர். S. சுப்பிரமணிய ஐயர்.

**லக்னௌ நகரில் கூடிய 31-வது காங்கிரஸ் மகா சபையின் விஷயக் கமிட்டியினது மெம்பர்களுக்கு, டாக்டர் ஸர் S. சுப்பிரமணிய ஐயர் எழுதிய கடிதம் பின் வருமாறு:—**

### "ஹோம் ரூல்."

கனவான்களே!

காங்கிரஸ் மகாசபை நன்றாய் நடை பெறுவது உங்களைப் பொறுத்த விஷயமாகவே இருக்கிறது. ஆகையால், அடியிற்கண்ட சில வார்த்தைகளை உங்களுக்கு எழுத முன்வந்தேன். நான் சொல்லப்போவதில் புதியது ஒன்றுமில்லை; ஆனால் ஹோம்ரூல் சபையின் கௌரவ அக்கிராஸனாதிபதி என்ற முறையில் உங்களுக்கு எழுத நான் கட

மைப்பட்டிருக்கிறேன். வயதாய் விட்டதாலும், சரீர திடக் குறைவாலும் அச் சபையின் வேலையில் கலந்து உழைக்க நான் அசக்தனாயிருப்பினும், அச்சபை மேற் போட்டுக் கொண்டிருக்கிற வேலையை பிரசித்தப்படுத்தி அதை எல்லோரும் தழுவும்படிசெய்ய எனக்கு ஆசை பெரிதாயிருக்கிறது. ஹோம் ரூல் சபையின் நோக்கம் சர்வ ஜனங்களாலும் அங்கீகாரமாகி நிறைவேறுமென்று நான் நிச்சய புத்தியுள்ளவனா யிருக்கிறேன்.

(2) "இந்தியாவுக்கு ஹோம் ரூல்" என்ற வார்த்தைகளை நமது ஆங்கில நண்பர்களில் சிலருக்குப் பிடிக்கவில்லை. நம்முடைய ஜனத்தலைவர்களிலும் சிலருக்குப் பிடிக்கவில்லை. "குடியேற்ற நாடுகள் பெற்றிருப்பது போன்ற சுய ஆட்சி" என்றிருந்தால் சிலாக்கியமா யிருக்குமென்று அவர்கள் நினைக்கிறார்கள்.

குடியேற்ற நாடுகளில் நடக்கும் விஷயங்கள் நமக்குத் தெரிவதைக் கொண்டு பார்க்கையில், தாய் நாட்டிற்கும் குடியேற்ற நாகளுக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி பரஸ்பரம் அதிருப்தியிருப்பதாகவும், ஆகவே பரஸ் பரசம்பந்தத்தை அவசியம் மாற்றவேண்டியே இருக்குமென்பதாகவும் எப்படி மாற்றுவதென்று இருதரத்தாரும் யோசனை செய்து வருவதாகவும் தெரிகிறது.

ஆகையால் குடியேற்ற நாடுகள் அடைந்திருப்பது போன்ற சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்பதானது சீக்கிரம் பண்டைக்கால விஷயமாய் விடப்போகிற ஒன்றைக் கேட்பதாகும்.

ஆனால் நாம் விரும்புவதென்னவெனில், குடியேற்ற நாடுகள் பெற்றிருப்பதற்குக் குறையாத ஓர் அந்தஸ்தை நமது தேசம் பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்தில் பெறவேண்டுமென்பதுடன், உள் நாட்டு பரிபாலன விஷயத்தில் முழு சுயேச்சையையும் அடையவேண்டுமென்பதே. இதைக் குறிக்க "ஹோம் ரூல்" என்று ஆங்கிலத்தில் சொல்வதை



விட வேறு வார்த்தைகளைத் தேடிப்பிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஹோம் ரூல், (வீட்டு ஆட்சி) என்றால் நம்முடைய சொந்தக் காரியங்களைப் பற்றின வரையில் நாம் பிறரைச் சார்ந்து இருக்கவில்லையென்பதும், ஆனால் நமது தேசத்துக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் ஒரு சம்பந்தமிருக்கிறதென்பதும், வார்த்தைகளினால் தானாகவே தொனிக்கிறது.

## ஓர் ஆட்சேபம்.

3. "ஹோம் ரூல்" என்ற வார்த்தைகளுக்கு இன்னொரு ஆட்சேபம் இருப்பதாகத் தெரிகிறது. அநேகம் வருஷங்களுக்கு முன் அயர்லாந்தின் ஆட்சியைத் திருத்த முயன்றவர்களுள் சிலர் ராஜீயக் குற்றங்களைச் செய்தார்கள் என்றும், அவர்கள் கொண்ட ஒரு வார்த்தையை நாம் ஏற்றுக் கொண்டால் அதேமாதிரி குற்றங்களைச் செய்யத்தோன்றுமென்றும், சொல்லப்படுகிறது. அதற்கு என்ன அருத்தமென்றால் நிரபராதியான இந்த வார்த்தைகளிடத்தில் ஏதோ அதிசய சக்தி இருக்கிறதென்பதும், கொடுமை செய்ய அவை ஜனங்களைத் தூண்டிவிடுமென்பதுமே. இதுஎன்ன மூடத்தனம்! அயர்லாந்தில் ராஜீயக் குற்றங்கள் நடந்த காலத்திலே இந்த வார்த்தைகளைப்பற்றி என்ன ஆட்சேபம் இருந்திருக்குமாயினும், பார்லிமெண்டு சபையை அவ்வார்த்தைகளை ஒப்புக்கொண்டு அயர்லாந்துக்குஹோம் ரூல் (சுய ஆட்சி) கொடுக்க சட்டம் செய்து விட்ட பிறகு, இனி என்ன ஆட்சேபம் இருக்கக்கூடும்? ஹோம்ரூல் வேண்டுமென்று கேட்காமல் குடியேற்ற நாடுகள் அடைந்திருப்பது போன்ற சுய ஆட்சி வேண்டுமென்று கேட்போமாகில், சில அபூர்வமான நிலைமைகளிலே அந்நாடுகளுக்குக் கொடுக்கப்பட்ட சுய ஆட்சியை இத்தேசத்திற்குக் கொடுக்க அதே நிலைமைகள் இங்கு ஏற்படவில்லையென்று சொல்லப்பட்டுவிடலாம். ஆயினும் ஹோம் ரூல் வேண்டுமென்று கேட்டால் அது கொடுக்கப்பட மாட்டாது போலும் குடியேற்ற நாடுகள் அடைந்திருப்பதுபோன்ற சுய ஆட்சி வேண்டுமென்று கேட்டால் அது

கொடுக்கப்படும் போலும் சிலர்சொல்லுகிறார்கள்: பிந்தினதைக் கேட்டால், அதன் துர்ப்பலத்தைக் கொண்டே அதைத் தள்ளிவிடுவார்கள்.

## கண்டனஞ் செய்ய இடமுண்டோ?

4. இன்னொரு ஆச்சரியமான வார்த்தையைப்பற்றிச் சொல்லுகிறேன். ஹோம் ரூல் சபை வேலைசெய்யப்போகிற முறையில்ராஜஅவிசுவாஸம்சம்பந்தப்படுமென்கிறார்கள். தேசமெப்படி ஆளப்படுகிறதென்றும், குறைகள் என்னவென்றும், சொல்லப்படும்ராஜீய நூல்களை ஜனங்களுக்குள்பரவச்செய்யின் அது ராஜ அவிசுவாசமாகுமா? அம்மாதிரி நூல்களை வெளியிடுவது ஆள்கிறவர்களுக்கும் ஆளப்படுகிறவர்களுக்கும் அனுகூலமல்லவா? ஜனங்கள் எவ்வளவுதூரம் ராஜீயஅறிவு பெற்றிருக்கிறார்களோ அவ்வளவுதூரம் திறமையாக ஒரு தேசத்தின்நிர்வாகம் நடக்கிறதில்லையா? தேசத்தில் அறிவு எவ்வளவு தூரம் பரவுகிறதோ அவ்வளவு தூரம் கவர்ன்மெண்டு திறமையுள்ளதாகவும் சாவதானமுள்ளதாகவும் ஆகாதா? ஆகையால் ஜனங்களுக்கு விஷயங்களை அறிவிக்க ஹோம் ரூல் சபை செய்யும் பிரயத்தனத்தை எப்படி ராஜஅவிசுவாசமுள்ளதென்று கண்டனம் செய்யக்கூடும்?

## இந்திய மேதாவிகள்.

இதற்குள் ஹோம் ரூல் கேட்கக் கூடாதென்னும் ஆட்சேபம் ஆதாரமே யில்லாதது. இத்தேச ஜனங்கள் தங்களுடைய காரியங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளக் கூடாதவர்கள் என்று எவர் நெஞ்சு துணிந்து சொல்வர்? பழைய காலத்தில் தங்களுடைய புத்திபலத்தாலும் குணவிசேஷத்தாலும் அழியாப் புகழைப் பெற்ற புத்த தேவன் என்ன, உபநிஷத்துக்களை இயற்றினோர் என்ன, அத்வைதாசிரியராகிய ஸ்ரீ சங்கரர் என்ன, பாணினி, பதஞ்சலி என்ற வியாகரண சூத்திரக் கர்த்தர்களென்ன, அசோகர், அக்பர், ஸிவாஜீ, ஹைதர் முதலிய அரசர்கள் என்ன, இவர்களைப் பெற்றதும் இந்தியாதேசமே! இக்காலத்திலும்படிக்கவசதி அதி



கமாயில்லாமலிருந்தும், கீர்த்தி பெறஅனுகூலங்கள்குறைவாயிருந்தும்,சாமார்த்தியத்தை ஒப்புக்கொள்வது அனேகமாக இல்லாமலே இருந்தும், ராம் மோகனராய் போன்ற திருத்தக்காரரையும், வித்தையிலும் ஞானத்திலும் தேர்ந்த தாகோரையும் குயில்போல் கவிபாடும் ஸரோஜனியையும், போஸ், ரே, மல்லிகா முதலிய நவீன சாஸ்திர வல்லவர்களையும், ஸர் ஸலர்ஜங், தினகர ராவ், மாதவராவ், சேஷாத்ரி ஐயர் என்ற தேச நிர்வாகிகளையும், சட்ட ஞானத்தில் பிரஸித்தி பெற்ற மித்தர், டெலாங், பத்ருதின், ரானடே, முத்துஸாமி ஐயர்ஆகிய இவர்களையும், தாதாபாய், டாடா, மேடா, கோகலே என்ற தேச பக்தர்களையும் பெற்றதும் இத்தேசமே! ஆகவே இத்தகையதேசம் தன்னுடைய காரியங்களைத் தானே பார்த்துக் கொள்ளக்கூடாதது'என்று நெஞ்சு துணிந்து எவர் சொல்வர்? அப்படிச் சொல்வது முழுப் பொய். தாங்கள் இப்பொழுது அனுபவித்து வரும் அனுகூலங்களை விட்டுவிட இஷ்டப்படாதவர்களுடைய கற்பனையே இவ்வார்த்தை. ஜனங்களுடைய நன்மைக்கு அவசியமான பந்தோபஸ்துகளில்லாமல்நடக்கும் ஆட்சியானது நூறு வருஷ காலமாய் நடந்துவந்திருக்கிறது நம்முடைய காரியங்களை நாமே நிர்வகித்துக்கொள்ளும்படி நாம் பயிற்சி செய்விக்கப்பட்டு வருகிறோமென்று •இந்த நூறு வருஷ காலத்திலும் எத்தனையோ தடவை சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால், நாம் சுய ஆட்சிக்கு லாயக்கில்லாமல் இருப்பானேன் ?

## யுகமுடிவு வரையில் காத்திருப்பதா!

நம்மைத் தயார் செய்யவேண்டிய வேலை அசட்டை செய்யப்பட்டு வந்ததாக அதிலிருந்து ஏற்படவில்லையா? இந்தக் கடமையைச் செய்யத் தவறி விட்டவர்கள் இனிமேலும் அதே பதவியை வகிப்பது எப்படி நியாயமாகும். இது எப்படியேனுமிருக்கட்டும்; ராஜ சக்கரவர்த்தியின் 30-கோடி சொச்சம் பிரஜைகளின் நிலைமையை விருத்தி செய்யக்கூடிய முறையை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர வேண்டியது அவசிய

மல்லவா? நம்முடைய எதிரிகள் நாம் சுய ஆட்சிக்கு லாயக்குள்ளவர்கள் என்று ஒப்புக்கொள்ளும் காலம் வருகிறவரையில், சுயஆட்சியை அடைய நாம் காத்திருக்கவேண்டுமானால், யுகமுடிவு வரையில் நாம் காத்திருக்க வேண்டாமா? நம்முடைய நன்மையை உத்தேசித்து நாம் கேட்கும் விஷயத்தால் பாதகமடையக் கூடியவர்கள் தங்களுடைய நலத்தை உத்தேசித்து நாம் சுய ஆட்சிக்குத் தகாதவர்கள் என்று சொல்லுகிறார்கள்.

6. யுத்தம் நடக்கும்பொழுது, சுய ஆட்சி வேண்டுமென்று நாம் கிளர்ச்சி செய்யக் கூடாதென்ற ஆட்சேபத்தில் அர்த்தமே இல்லை. தங்களுக்கும் தாய் நாட்டிற்குமுள்ள சம்பந்தத்தை மாற்றவேண்டுமென்று யுத்தம் ஏற்பட்டது முதல் குடியேற்ற நாடுகள் கிளர்ச்சி செய்து வருகின்றன. பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் அதற்கு அனுமதி கொடுத்துமிருக்கிறார்கள். நாம் செய்யும் கிளர்ச்சிமாத்திரமா அகாலத்தில் செய்யப்படுவதாகும்? இதுதான் சரியான சமயம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அபாய மேற்பட்ட காலத்தில் அதற்கு உதவியாய் நிற்கும் தேச மன்னர்களிடத்திலும் ஜனங்களிடத்திலும் கௌரவமாய் நடக்கவேண்டிய பொறுப்பை வகித்திருப்பவர்களுடைய புத்தியில் படும்படி இச் சமயம் நாம் கிளர்ச்சி செய்யாமலிருந்துவிட்டு, பிறகு செய்வோமாகில் சரியான சமயம் போய்விட்டதென்று சொல்லிவிடலாம்.

## ஹோம் ரூல் சபையின் வேலை.

7. ஆகையால், இத்தேசத்தின் நன்மைக்கான காரியத்தையோசித்துச் செய்யும்படி காங்கிரஸில் கூடப்போகிறதேசத்தின் பிரதிநிதிகளைத் தூண்டிவிட வேண்டிய பொறுப்பு உங்களுடையது; அதாவது ஹோம் ரூல் சபை அவர்களுடைய காரியத்துக்காக வேலை செய்யும் சபை என்பதை ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டும். காங்கிரஸின் பெருமையைக் குறைத்துவிட நான் உத்தேசிப்பதாக ஒருவரும் சொல்லமாட்டார்கள். பெரியஊழியத்தை அது செய்து வந்திருப்பினும், அதனுடைய ஏவலைச் செய்ய ஒருவர் இல்லாத நிலைமையில் அது இருந்து வந்திருக்கிறது. நல்ல வேளையாக காங்கிரஸின் வேலையைச் செய்ய ஹோம் ரூல் சபை ஏற்பட்டிருக்கிறது. இந்தப்புது சபையைத் தனக்குத் துணையாக காங்கிரஸ் மகா சபை அங்கீகரிக்குமாகில், நம்முடைய ராஜீயத்தேவைகளை பிரிட்டிஷ் ஜனங்கள் நன்கு அறியும்படி காங்கிரஸ் செய்துவிடும். தேசத்தின் தேவைகள் என்னவென்பதையும், ஆளுகை முறையில் செய்யப்படவேண்டிய திருத்தங்கள் என்னவென்பதையும், இந்த ஹோம் ரூல் சபை ஜனங்கள் அறியும்படி செய்வதுடன், ஹிந்துக்களும் முகம்மதியரும் ஒற்றுமையாய் வேலை செய்யும்படியும் செய்துவிடும். நான் சிபார்சுசெய்யும் காரியத்தை காங்கிரஸ் மகாசபை அங்கீகரித்து விடுமாகில், பாஷையிலும், வழக்கங்களிலும், லட்சியங்களிலும் வேறுபட்ட ஒரு ஜாதி இன்னொரு ஜாதிக்கு சுய ஆட்சி கொடுப்பதாகிய பெரிய காரியம் சித்திக்கும்படி காங்கிரஸ் மகாசபை செய்துவிட்டதாகும். பிலிப்பைன் தீவுகளின் விஷயமாய் அமெரிக்கா செய்யத் தீர்மானித்து விட்டகாரியத்தை நம்பொருட்டுச் செய்ய பிரிட்டிஷார் தயங்கமாட்டடார்களென்று நாம் நம்பக்கூடாதா? ஹோம் ரூல் சபையின்பொருட்டு நான் செய்துகொள்ளும் வேண்டுகோளை நீங்கள் ஆதரவுடன் கவனிப்பீர்களென்று நம்புகிறேன்”.



---

## இந்தியாவும் சாமாதானப் பிரேரணைகளும்.

---

### மிஸ்டர் V. P. மாதவராவ் C. I. E.

திருவாங்கூர், மைசூர், பரோடா ஆகிய சமஸ்தானங்களில் திவானாயிருந்த மிஸ்டர் வி. பி. மாதவராவ் C. I. E. மெட்ராஸ்மெயில் பத்திரிகைக்கு பின்வருமாறு எழுதியிருக்கிறார்.—

### இப்பொழுது சமாதானம் கூடாது.

“சமாதான ஆபத்து” என்ற தலைப்பின் கீழ்சென்ற 14ந் தேதியன்று (அதாவது 1916-ம் வருஷம் டிசம்பர் மாதம் 14ந் தேதி) ‘மெட்ராஸ் மெயில்’ பத்திரிகையின் தலையங்கத்தில்

தோன்றிய வியாசத்தை மிகுந்த ஆவலுடன் படித்தேன். தற்போது சமாதானம் ஏற்படுவது இங்கிலாந்துக்கும் அதன் நேச ராஜ்யங்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதென்றால், அது இந்தியாவுக்கும் ஆபத்தைவிளைவிக்கக்கூடியதுதான். ஆகவே இந்தியாவின் அபிவிருத்தியைக் கோரும் ஒவ்வொருவரும்ஜெர்மன் முதன்மந்திரியின்சமாதானப்பிரேரணைகளை எதிர்ப்பது கடமையாகும் இந்தியாவின் அதிருஷ்டம் இங்கிலாந்தின் அதிருஷ்டத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. இங்கிலாந்தினிடம் எவ்வளவு குற்றங் குறைகள் இருந்தவிரினும், இந்தியா சுயராஜ்யம் பெறுவது இங்கிலாந்தின் மூலமாகவே ஆகக்கூடிய காரியம். ஆகவே இங்கிலாந்தின் பலத்தைக் குறைக்கக்கூடிய எந்தக் காரியமும் இந்தியாவின் அபிவிருத்தியை பாதிக்குமென்பது நிச்சயம். என்றாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே சுவாதீனமும் தன்னைத்தானே காத்துக்கொள்ளும் தன்மையும்பெற்ற தேசமாகும்படி இந்தியாவைச்செய்து வைப்பது இங்கிலாந்தின் நன்மைக்குற்றதா யிருக்கிறது. இதுவும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய விஷயமாகும்.

## இந்தியாவின் தேவை.

இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுத்து விட வேண்டிய காலம் வந்து விட்டதென்பதை இங்கிலாந்து உணர்ந்துகொண்டதென்றே நான் நம்புகிறேன். ஆனால் இந்தியாவை ஒரு சுய ஆட்சி பெற்ற தேசமாய்ச் செய்வது தகுமோ என்று இங்கிலாந்து யோசனை செய்வதாய்க் காண்கிறது. குடியேற்ற நாடுகளின் சுவாதீனத்தை விருத்தி செய்ய இங்கிலாந்து தாராளமாய் முன்சென்றிருப்பதன் காரணத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமான காரிய மல்ல. குடியேற்ற நாடுகளின் ஜனங்கள் இங்கிலாந்து ஜனங்களின் இனத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள்; ஆகவே அவர்களைப்பற்றிய பிரசினை, இங்கிலாந்தின் கவர்ன்மெண்டோடு அவைகளின் கவர்ன்மெண்டுகள் நெருங்கிய சம்பந்தம் பெறச் செய்வதாகும்.



குடியேற்ற நாடுகளைப்பற்றிய விஷயம் கஷ்டமான
தல்ல; அவைகளைப்பற்றிய விஷயம் அநேகமாய் முடிவு
செய்யப்பட்டு விட்டது. இந்தியாவைப்பற்றிய விஷயமோ
அப்படியல்ல. இந்தியாவின் ஜனங்களோ வேறு இனத்தைச்
சேர்ந்தவர்கள். இந்தியர்களின் நாகரீகமும் வேறானது. இந்தி
யாவின் கதி இன்னதெனக் கடைசியில் நிர்ணயிக்கக் கூடிய
தேசம் இங்கிலாந்துதான். இப்படியிருந்தும், பிரிட்டிஷார் இந்
தியாவின் விஷயங்களை கவனிப்பதில்லை. தங்களுடைய நிபுணர்
களிடத்தில் இந்தியாவின் பிரசினைகளை ஒப்படைத்து விட்
டார்கள். சிப்பாய்க் கலகத்தைப் போலவும், அந்தக்கலகத்துக்குச்
சற்று குறைவான 1905-ம் வருஷத்திய கலகத்தைப் போலவும்
பெரும் விபத்துகள் நேரிடும்போது, இங்கிலாந்து இந்தியாவைப்
பற்றி தனது பார்லிமெண்ட் மூலமாய் சிறிது கவனிக்கிறது.
அப்போது இந்தியாவின் குறைகள் சிறிதுஅகற்றப்படுகின்றன.
இந்தியா கவர்ன்மெண்டிலும் சில அபிவிருத்திகள் செய்யப்படு
கின்றன.

## இந்தியாவின் பதவி.

தற்போதையஉலகயுத்தத்தில் இந்தியாவில் குடியானவரி
லிருந்து முடிமன்னர்வரையுமுள்ள சகல ஜனங்களும் இங்கிலா
ந்துக்கு உதவி செய்ய முன்வந்திருக்கும் தோற்றம் இங்கிலாந்
தின் கவனத்தை வெகுவாய் இழுத்திருக்கின்றதெனக் காண்
கிறது. இந்தியா காட்டியுள்ள தன்மறுப்பைப் பார்த்தது இங்கி
லாந்து ஒருவித ஆனந்தங்கொண்டு இந்தியா சுயஆட்சிக்குரிய
தென்பதையொப்புக்கொண்டு,இந்தியாவைஒருசார்புநாடகவே
இருந்து வரும்படி வைக்காமல், ஏகாதிபத்தியத்தின் ஓர் அங்க
மாய்ஏற்படுத்தப்படத் தகுதியுள்ள தென்பதை அங்கீகரித்தது.
ஆனால், அந்த உணர்ச்சி சமீபத்தில் குறைந்து கொண்டுவருவ
தாகத்தோன்றுகின்றது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் சுற்
றுப் பிரயாணஞ்செய்த 'ரௌண்டு டேபில்' "காமன் வெல்த
ஆப் நேஷன்ஸ்" ஆகிய இவைகளின் ஆசிரியர் கூறி
யிருக்கும் விஷயங்களிலிருந்து இந்தியாவின் ஆட்சி

முறை எவ்வித மாறுதலும் அடையுமென்று இந்திய ஜனங்கள் எண்ணுவதற்கு இடம் ஏற்பட்டிருப்பதாய்க் காணோம். இந்தப் பத்திராசியர், லார்டு மில்னரைப்போல அடக்கியாளப்படும் இந்த (இந்திய) ஜனங்களுக்கு சுய ஆட்சியைவிட, பலம் பொருந்தியதும் நலலதுமான கவர்ன்மெண்டினால் இந்தியா ஆளப்படுவதே நன்மையென்று நினைப்பவரெனத் தோன்றுகின்றது. இவருடைய கொள்கைப்படி இந்தியாவானது அதிகார வர்க்கத்தினாலேயே ஆளப்பட்டு வர வேண்டும். ஆனால் கவர்ன்மெண்டின் யோசனை சபைகளில் ஜனப்பிரதிநிதிகளின் தொகை சற்று அதிகப் படுத்தப்பட வேண்டுவதோடு, தேச ஜனங்கள், கவர்ன்மெண்டின் ஊழியத்தில் ஆங்கிலேயருக்குச் சமதையாய் உத்தியோகம் வகிக்கத் தகுதி யுள்ளவர்களாகவும் கருதப்படவேண்டும். இதுவே இப்பத்திரிகாசிரியரின் அபிப்பிராயமெனக் காண்கின்றது. இந்தியாவின் தற்போதைய தேவைகளுக்கு இந்தத் திருத்தங்கள் சாந்தியாகமாட்டா. ஜனங்களுடைய நன்மைக்காக ஏற்பட்ட கவர்ன்மெண்டானது ஜனங்களாலே அமைந்ததாய் இருந்து வர வேண்டுமென்று இந்தியா விரும்புகின்றது. அப்படிப்பட்ட கவர்ன்மெண்டை யடைய இந்தியா தகுதியுள்ளதாயிருக்கிறது. "பிரதிநிதி பாத்தியம் இல்லாமல் வரிவிதித்தல் கூடாது" என்ற முறை இந்தியாவிலும் ஏற்பட்டு விடவேண்டு மென்று இந்தியா வற்புறுத்துகின்றது.

## இன்றுள்ள இந்தியா.

இந்தியா இப்படிவிரும்புவது வெறும் வீணாசையினாலல்ல. மனப்பால் குடிக்கும் தன்மையினாலுமல்ல.

மேனாட்டிலிருந்து சில வாக்கியங்களைக் கடன் வாங்கிக் கொண்டு அதன் முழு அர்த்தத்தையும் அறிந்துணராது பகட்டாய்ப் பேசிவரும் தன்மையாலுமல்ல. இந்தியாவின் க்ஷேமமும், ஏகாதிபத்தியத்தின் பெருமையும் நிலைத்து நிற்பதற்கு இந்தியா சுயஆட்சி பெறுவது இன்றியமையாததாகும். அதிகாரி வர்க்கத்தினால் பிரயோஜனம் ஏற்பட்டு வந்தகாலம் கடந்து



போய்விட்டதென்பதில் சந்தேகமே யில்லை. இந்த அதி காரி வர்க்கம் தனது அதிகாரத்தை விட்டுக்கொடுக்கப் பிரியப் படாததோடு, காலத்தை யனுசரித்து நடந்து கொள்ள வும் சக்தியற்றதாய் விட்டது. தற்போதைய இந்தியா ஐந்து வருஷங்களுக்கு முன்னிருந்த இந்தியா அல்ல. சண்டையாரம்ப மானதிலிருந்து அதற்கு முந்திய மூன்று வருஷங்களிலிருந்த நிலைமை வெகு தூரம் மாறுபாடடைந்து வந்திருக்கிறது. இந்தியாவைப் பற்றி இங்கிலாந்தில் அபிப்பிராயம் கூறும் பழைய கவர்னர்களும், ஏனைய உத்தியோகஸ்தர்களும் பழைய கால அபிப்பிராயத்தைக் கூறி வருகிறார்கள், "வக்கீல்களின் ராஜ்ஜியம்" "ராஜாங்க விஷயங்களைப்பற்றி வாதிக்கும் பிரபுக் கூட்டத்தார்" "போர்புரியும் வர்க்கத்தார்" "இராணுவச் சேவகத்திற்கு உதவாத ஜன சமூகங்கள்" "கல்வியறிவற்ற பொது ஜனங்கள்" "சுய நலத்தை நாடும் படித்த வகுப்பார்" என்று மனம்போனபடி கூவுவது அவர்களின் சம்பிரதாயமாய் விட்டது. இந்தக் கூற்றுகளெல்லாம் தகர்க்கப்பட்டுப் போயின. இத் தேசத்தை ஆளுவதற்கென்று வெகு உயர்வாய்ப் பயிற்சி செய்து இங்கு ஆங்கிலேயர்களை அனுப்பி வைத்து அவர்களால் பழைய முறைப்படி நிர்வாகம் நடத்தப் படவேண்டிய நிலைமையை இந்தியா கடந்துவிட்டது. தேசத்தில் சண்டை சச்சரவின்றிக் காப்பதும், நியாயந் தீர்ப்பதும், தீர்வை வசூலிப்பதும் ஜனங்களின் மனோவிருத்தியையும் செல்வநிலைமையும் பெருக்குவதுமான வேலைகளை மாத்திரம் கவர்ன்மெண்டு செய்துவந்தவரையில் நன்மைதான். இவ்விஷயத்தில் ஸிவிலியன்களை விட வேறு எவரும் அதிகத்திறமை காட்டி வேலை செய்திருக்க முடியாதென்பதும் வாஸ்தவமே.

## புதிய ஆட்சி.

ஜனங்கள் இதை யுணர்ந்து நன்றி பாராட்டாமலிருக்க வில்லை. என்றாலும், இந்தியா தன் பொறுப்பைத்தானே ஏற்கவும், தனக்கு வேண்டியதைத் தானே செய்துகொள் ளவும் திறமையுள்ளதாக வேண்டுமானால், அதற்கு

இப்படிப் பட்ட ஆட்சி போதா ததாகும். இந்தியா அப்
படி யாவதற்கு இன்னும் பல சாதனங்கள் வேண்டும். பிரிட்
டிஷ் கவர்ன்மெண்ட் எவ்வளவு அனுதாப முள்ளதாயிரு
பினும், எவ்வளவு நன்னோக்கங் கொண்டதாயிருப்பினும்,
இந்தியாவுக்கு எது வேண்டுமோ அதைச் செய்து
நிறைவேற்ற முடியாது. இந்தியாவில் இந்தியர்களாலே
யே அமையும் ஸ்தாபனங்கள் தான் அவற்றைச் செய்து முடிக்
கக்கூடும். ஜெப்பான் தற்போதைய நிலைமையை அடைவதற்கு
முன்னர் ஜெப்பானியதேசாபிமானிகளும்மேதாவிகளும்எப்படி
அதைமுன்னேற்றிக் கொண்டுவந்தார்களோ, கடந்த நூற்
றாண்டின் கடைசியில் ஸ்டீன் போன்ற ஜெர்மன் மேதாவி
கள் எப்படி ஜெர்மனியை முன்னேற்றிக்கொண்டு வந்தார்
களோ, அதுபோலவே இந்தியாவும் இந்தியர்களாலே தான்
முன்னேற்றப்படவேண்டும். இந்தியாவிலே ஜனங்களின் நிலை
மையும் செல்வ நிலைமையும் விருத்தியடைய வதற்காக, பிரிட்
டிஷ் கவர்ன்மெண்டார் லார்டு கர்ஸனுடைய காலத்தில் ஐக்கி
நாணயச் சங்கங்களமைக்கும்நிகழ்ச்சியைஸ்தாபித்ததான ஒரே
ஒரு காரியந்தான் செய்திருக்கிறார்கள். இந்த ஒருகாரியத்தைத்
தவிர, ஜனங்களின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார
அபிவிருத்திக்கும்உற்றவேறெந்த ஏற்பாடும்செய்யவில்லை. அப்
படி ஒன்றுஞ் செய்யாததோடு, இந்தியாவின் கைத்தொழிலபி
விருத்தியிலும், வியாபார அபிவிருத்தியிலும் பிரவேசித்த
போதெல்லாம், இங்கிலாந்தின் லாபத்தையும் நன்மையையும்
உத்தேசித்து இந்தியாவுக்குப் பாதகஞ் செய்தும் வந்திருக்
கிறார்கள். இந்திய ஜனங்கள் "நீங்கள் நினைத்தபடி ஆட்சி"
செய்யும் தேசத்தின் பிரஜைகளாய் விட்டார்கள். தற்போது
இந்தியாவின் கைத்தொழில்களின் சாவி ஜெர்மனியன் கையில்
சிக்கிக்கொண்டிருக்கவும், ஏற்கெனவே ஜெர்மனியும் ஆஸ்டிரி
யாவும் அனுப்பிவந்தசாமான்களை அமெரிக்காவும் ஜெப்பானும்
அனுப்பி இந்திய தேசத்தில் நிரைத்துவிடவும் காண்கிறோம்.
இந்தியாவின்கைத்தொழில் விருத்தியடைவதற்கு எவ்வளவோ
மார்க்கங்களிருக்கின்றன வென்பதையும், எவ்விதத் தொழிலும்



இந்தியாவில், நடத்தப்படலா மென்பதையும், இந்தியர் மாத்தி
ரம் சற்று பயிற்சி பெற்றால், எவ்விதசிக்கலான இயந்திரங்களா
யிருந்தாலும் அவர்கள் தாங்களே சாமர்த்தியமாய் வேலை
த்துவார்களென்பதையும், இந்திய கைத்தொழில்களைப்பற்றி
விசாரணை செய்துவரும் கமிஷன் சமீபத்தில் வெளிப்படுத்தி
விட்டது. இங்கிலாந்து தான் எப்பொழுதும் ஒப்பற்ற வல்லர
சாயிருந்துவரும் பொருட்டு, தன்னுடைய ஜனங்களை சண்
டைக்கு அனுப்புவதற்கும், தன் தேசத்துப் பொருளாதார
நிலைமையைச் சீர்த்திருத்தி யமைப்பதற்கும் வெகுகாலம் முன்
னதாகவே, இந்திய ஜனங்களுக்குள் கல்வியைப் பரப்பும்வேலை
யைச் செய்திருக்க வேண்டும்.

## 7. கண்டனம் அவசியம் வேண்டும்

நாகரீகத்தில் முதன்மை அடைந்திருக்கும் பிரிட்டிஷ்
ஜாதியாரின் கவர்ன்மெண்டே நிர்த்தாட்சண்ணியமாய் பத்தி
ரிகைகள் கண்டனத்தால் சீர்திருத்த வேண்டிய நிலை
மையில் இருக்கையில், இந்தியா கவர்ன்மெண்டின் கருவி
களைச் சீர்திருத்த கண்டனம் எவ்வளவு அவசிய மாகும்! இங்கு
நடைபெறும் கவர்ன்மெண்டோ சிப்பாய்க் கலகத்துக்குப்பிறகு
ஏற்பட்டதா யிருப்பதுடன், அதுமுதல் எவ்விதமானபெரிய மா
றுதலும் அதில் ஏற்படவில்லை. 1905-ம் வருஷத்தில் அதிருப்
திக் குறிகள் தேசத்தில் தோன்றினஅது கவர்ன் மெண்டாரு
க்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. அதனுடைய தன்மை
யை கவர்ன்மெண்டார் அறியாமல் படித்த வகுப்பாரில் ஏற்
பட்ட கலகக் காரர்கள் செய்த கிளர்ச்சியால் அது உண்டா
யிற்றென்று நினைத்தனர். அந்த அமைதியின்மை உண்டான
தையும் அது ஓங்கி வளர்ந்ததையும் நான் விஸ்தாரமாய்
இங்கே சொல்ல ஆரம்பித்தால் இக்கடிதம் வெகு நீளமாய்
விடும். ராஜீயக் கிளர்ச்சி செய்வோரது வேலையின் பலன்
மாத்திரம் அமைதியின்மைக்குக் காரண மல்ல வென்பதை
யும், பொருளாதர நிலைமையும் காரண மென்பதையும் இப்
பொழுது தான் அறியத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவ்விஷயம்

வங்காளத்துக்கும் பஞ்சாபுக்கும் சரிதான். மிஸ்டர் திலகரிடத்தில் ஜாமின் வாங்கும்படி நடத்தப்பட்ட நடவடிக்கையின் மேல், பம்பாய் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பானது இப்பொழுது நடத்தப்பட்டு வரும் கிளர்ச்சி பிரிட்டிஷ் சம்பந்தத்தை ஒழித்துவிட உத்தேசித்த தல்ல வென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் ஓர் உறுப்பாக இருந்துகொண்டே ஆட்சி முறையைத் திருத்த உத்தேசித்ததென்றும் விளக்கியிருக்கிறது. அதன்படி, இப்பொழுதுள்ள ஆளுகை முறையை எவ்வளவு கண்டித்தாலும் தகும்; கண்டனத்தைத் தடுப்பதானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மைக்கும் இந்தியாவின் நன்மைக்கும் பாதகமாகும். இப்பொழுதுள்ள நிலைமையை படித்தவகுப்பார் நன்கு அறிந்திருக்கிறார்கள் இதை உத்தேசித்து, இங்கிலாந்து அவர்களிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியதைத் தவிர வேறு செய்யக் கூடியது ஒன்றுமில்லை.

யுத்தம் ஏற்பட்டவுடன் இங்கிலாந்துக்கு உதவிசெய்ய இந்தியா முன் வந்தது இது இந்தியாவில் நடைபெற்று வரும் நல்ல ஆட்சியின் பலனென்று சொல்வது வழக்கமாயிருந்து வருகிறது. இது பாதிதான் உண்மை. இந்தியா முன் வந்ததற்குக் காரணம் யாதெனில் மிகப் பழிக்கப்பட்டு வரும் படித்தவர்களே; அவர்கள் தான் ஜெர்மனி ஜயமடைந்து விட்டால் என்ன நேரிடுமென்பதை அறியக்கூடியவர்களாயிருந்தார்கள். அவர்கள் காட்டின வழியைத்தான் பிறர் பின்பற்றினர். தேசத்தின் நன்மையில் லார்டு ஹார்டிஞ்சு அக்கரையெடுத்துக் கொண்ட காரணத்தாலேயே படித்த வகுப்பார் முன் வந்தார்கள் என்பதும் உண்மை. ஸிவிலியன்கள் தான் சாதாரண ஜனங்களின் நன்மையைக் காக்கிறவர்கள் என்றும், இந்திய ஜனத்தலைவர்கள் தங்களுடைய நன்மையை உத்தேசித்தே போராட்டம் செய்கிறார்கள் என்றும், அடிக்கடி சொல்லப்படுவது எவ்வளவு பிசகென்று இங்கு நான் காட்டவில்லை. சாதாரணஜனத்திரள் என்றும்வகுப்பார் என்றும் சொல்ல, மேனாட்



டாரிடமிருந்து எடுத்துக்கொண்டதே யல்லாமல் இந்தியாவில் அப்படிச் சொல்ல நியாயமில்லை.

பிரிட்டிஷ் ஆட்சி ஆரம்பமானபொழுது ஏற்பட்ட [illegible] இந்தியாவிலேற்பட்டதென்பதை ஆங்கில அதிகாரி[illegible]களும் அறியவில்லை. ருஷ்ய கவர்ன்மெண்டார் கூட யுத்தம் நடந்துகொண்டிருக்கையிலேயே கட்டாயமாகப் படிப்பிக்க வேண்டியதை ஒப்புக்கொண்டு, ராஜாங்கமுறைகளை நிர்தாரணம் செய்ய ஜனப்பிரதிநிதிகளை சுதந்திரமுள்ளவர்களாய்ச் செய்துவிட்டார்கள். தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் பலப்படுத்திக்கொள்ளவுமே அந்தக் கவர்ன்மெண்டார் அப்படிச் செய்தார்கள். ஆகையால் இந்தியாவின் ஆள்கையிலும் ஜனப்பிரதி[illegible] அதிக[illegible] வேண்டுமென்பதும், கவர்ன்மெண்டார் ஜனங்களை இப்பொழுது நம்புவதைவிட அதிகமாக நம்பவேண்டுமென்பதும் ஏற்படுகின்றன.

## இந்தியாவின் மனப்பான்மை

இந்தியாவின் மனம் [illegible], காங்கிரஸ் என்ன, முஸ்லிம் லீக் என்ன, மிஸ்டர் திலகர், மிஸ்பெஸண்ட் போன்ற ஜனத்தலைவர்கள் என்ன, இவர்கள் தாராளமாய்த் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடும்படி இருக்கவேண்டுமே யல்லாமல் அவர்களை அதைரியப்படுத்துவது கூடாது. ஜனங்களுக்கு உள்ள நிலைமையைப் பற்றிய அறிவை உண்டு பண்ண வேண்டியிருப்பதுடன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அங்கமாயிருந்துகொண்டே இந்தியா எவ்வித சுயராஜ்யத்தை அடைய வேண்டுமென்ற அபிப்பிராயங்களை ஒருங்கு திரட்டவும் வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியைத் தொலைத்துவிட விசாலமாகப் பரவியுள்ள சதியாலோசனை ஒன்று இருக்கிறதாக அதிகாரிகள் நம்புவார்களாகில், அவர்களுடைய நிலைமையில் எவ்வளவு சிரமம் ஏற்படக் கூடுமென்பது லார்டு [illegible] பேசியதிலிருந்து விளங்குகிறது. அவ்விதச் சமயங்களில் கூட, ஜனங்களின் நல்லெண்ணமுடையவர்களா

விரும்புவர்களைக் கூப்பிட்டே அவர்களுடைய உதவியைத் தேடிக் கொள்ள வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இந்தியா சவர்ன்மெண்டைத் திருத்தி யமைக்கவேண்டிய விஷயம் இவ்வளவு முக்கியமா யிருந்தபோதிலும், உத்தேசப் பிரேரணைகள் [illegible] பத்திரிகைகளும் [illegible] சபைகளும் அபிப்பிராயம் சொல்லும்படி செய்யாமல் அப்பிரேரணைகளை இங்கிலாந்துக்கு அனுப்பி யிருக்கக்கூடாது. பிரேரணைகள் வெளிவந்திருந்தால் தான் எந்தெந்த மாகாணத்துக்கு என்ன முறை பொருத்த முடையதா யிருக்கு மென்பதும், எல்லா மாகாணங்களுக்கும் பொதுவான கவர்ன்மெண்டுக்கு [illegible] முறை பொருத்தமா யிருக்குமென்பதும் வெளியா யிருக்கும். ஆனால் ஜனப் பிரதிநிதியின் சட்ட சபைக்குக் கூடத் தெரியாமல் பிரேரணைகள் அனுப்பப்பட்டதிலிருந்து பழைய அதிகார [illegible] புத்தியே இன்னும் பலமா யிருப்பதாகத் தெரிகிறது.

## இரு மகாசபைகளும் செய்யவேண்டிய காரியம்.

சீர் திருத்தங்களைப்பற்றி நான் சொல்லவேண்டியவை இவ்வளவுதான்; இனி, இப்பொழுது நடந்துவரும் [illegible] யுத்தத்தின் புதிய அம்சமொன்றில் இங்கிலாந்தும் இந்தியாவும் நுழைகின்றன என்பதை காங்கிரஸ் முஸ்லிம் லீக் ஆகிய இரு மகா சபைகளும் நினைப்பில் வைத்துக்கொண்டு, [illegible] இங்கிலாந்து ஜயமடையவும் ஜெர்மனியின் [illegible] ஒடுக்கவும் வேண்டி, பணத்தாலும் ஆள் பலத்தாலும் நம்மால் செய்யக்கூடிய முழு ஒத்தாசையையும் நாம் [illegible]வேண்டுமென்று முதல் தீர்மானம் செய்யவேண்டு [illegible] [illegible]த்துகிறேன். இன்னும் நல்ல யோசனையை நாம் சொல்லக்கூடும்; ஆனால் கவர்ன்மெண்டு நம்முடைய கையில் இல்லை. ஆகாயி [illegible] ஒன்றுக்கு வருஷ வரும்படி இரண்டே காசு [illegible] உள்ள இருக்கும் ஜனங்களிடமிருந்து நாம் அதிமாக எதிர்பார்க்கவும் கூடாது; ஆனால் இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பார்களும் தங்களால் கூடிய உதவியைச் செய்தார்களென்று நாம் உலகிற்குக் காட்டக்கூடும். அதற்குப் பிரயோஜ[illegible]



[illegible] இருக்கும் [illegible] முறையில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தத்தைப் பற்றி காங்கிரஸும் முஸ்லிம் லீகும் ஒருமித்து ஆலோசனை செய்து தீர்மானிக்க வேண்டியதேயாயினும் முதல் தீர்மானம் நான் சொன்னதாகத்தான் இருக்க வேண்டும். அதைச் செய்ய இதுதான் சமயம். இந்தியாவின் ராஜபக்தியைப் பற்றித் தீர்மானம் செய்யவேண்டிய அவசியமே யில்லை; அவ் விஷயமாய் [illegible] சந்தேக மிருந்திருந்தால், யுத்தம் உண்டான வுடன் அந்த சந்தேகம் நிவர்த்தியாயிருக்கவேண்டும்.

சென்ற சில வாரங்களாக இங்கிலாந்தில் உண்டாயிருக்கிற விசேஷ ராஜீய மாறுதல்கள், பிரிட்டிஷ் [illegible] சாதி பத்தியத்திலுள்ள யாருடைய புத்தியிலும் பதிந்திருக்கும். [illegible] லாயிட் ஜ்யார்ஜின் தலைமையின் கீழ் ஏற் [illegible] பெரிய நன்மையை விளைவிக்கக் கூடியதென்பதை யாரும் அறியாமலிருந்திருக்க முடியாது. அவர் செய்திருக்கும் காரியம் வெகு ஆச்சரியமா யிருப்பதுடன், உத்தேசத்தை நிறைவேற்றக் கூடியதென்பதும் [illegible] இவ் [illegible] ருக்களே இந்தக் காரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். இந்த சமயத்தில் நமக்குப் பெரியதோர் கடமை ஏற்பட்டிருக்கிறது. நாகரீகத்தைக் காப்பாற்ற நாமும் பிரயாசைப்பட வேண்டும்; நான் குறிப்பிட்டபடி முதல் தீர்மானம் செய்வதுடன், இந்தியாவின் ஆள் பலம் இங்கிலாந்துக்கு உதவும்படி எப்படிச் செய்யலாமென்று காங்கிரஸும் முஸ்லிம் லீகும் யோசனையும் செய்ய வேண்டும். சமாதானம் செய்துகொள்ள [illegible] நேச தேசங்கள் வருமா என்று ஜெர்மன் முதல் மந்திரி கேட்டிருக்கும் இந்த சமயத்தில், யுத்தம் [illegible] இன்னும் தீவிரமாய் நடத்த இந்தியா ஒருமனதாய்த் தீர்மானித்து விடுவதானது மிகவும் [illegible] பிரயோஜனத்தைத் தரும் என்பது நிச்சயம்.

[illegible]